ஏ.கே.வேலனின்

# நாடகங்கள்

காவிரிக் கரையினிலே
மீனாட்சி நாடகத் தமிழ்
கங்கைக்கு அப்பால்

ஏ. கே. வேலனின்

# நாடகங்கள்

காவிரிக் கரையினிலே

மீனாட்சி நாடகத் தமிழ்

கங்கைக்கு அப்பால்

தொகுதி 1

விலை ரூ. 7-50

ஏ. கே. வேலன் அன் சன்ஸ்
24, அருணாசலம் சாலை.
சாலிகிராமம், சென்னை-600 093.

# காவிரிக் கரையினிலே

# முன்னெழுத்து

**காவிரி** தமிழர்களின் பழமைக்கும்
பண்பாட்டுக்கும் பிறப்பிடம்
காலம் கடந்து கொண்டேயிருக்கிறது
காவிரி காலத்தை வென்று
**"நடந்தாய் வாழி காவேரி"** என்று
நடந்து கொண்டேயிருக்கிறது!

அந்த ஆற்றின் ஓரத்திலே
நடந்த வல்லரசுகள் எத்தனை, எத்தனை
வானுயர்ந்த கோட்டைகள் எத்தனை, எத்தனை
வளர்ந்த கலைகளின் செழுமைக்கும்,
சிறப்புக்கும் எல்லை ஏது?

அந்த ஆற்றின் ஓட்டத்துடன்
போட்டியிட்டபடி வரலாற்றின் ஏடுகள்
புரண்டு வருகிறபோது,
ஒரு சில பக்கங்களில் காணப் பெறும்
சில குறிப்புகளின் விளக்கமே,
இந்த நாடகம்.

நாடக மாந்தராக நான்
அறிமுகப் படுத்தி யுள்ள
குலோத்துங்கன், கூத்தர்
கங்கன் மகள் கன்னரதேவி, மழவராயன்
நுளம்பன் காங்கேயன் அனைவரும்
வரலாற்று நாயகர்களே.

பழையாறை, பட்டீச்சுரம், புறம்பியம்,
தலைக்காடு ஆகிய இடங்களும்
இன்றுமுள்ள வரலாற்றுத் தடங்களே.

காவிரி நீர்ப்பிரச்சினையும், இன்றும்
தீராத ஒன்றே!
சோழன் மூன்றும் குலோத்துங்கன் காலத்தில்
தலைக் காட்டுப்போர்!

மங்கம்மாள் ஆட்சியின்போது
மைசூர் அரசு ஆற்றின் குறுக்கே
அணைபோட்டு காவிரியின் ஓட்டத்தை
திசை மாற்றிய போது அணை உடைப்பு!

இன்று இந்திய ஒருமைப் பாட்டின் காரணமாக
மோதலும் முறியடிப்புகளும் இல்லை,
என்றாலும் பேசிப், பேசி அலசுகின்றார்
ஆனால், காவிரி சிரித்தபடி,
ஓடிக் கொண்டே யிருக்கிறது.

காவிரி ஆடுகின்றவர்களை தூய்மைப்படுத்துகின்றது
காடாக வளர்கின்றது
கழனியாக பசுமை கொழிக்கின்றது
வணங்குகின்றவர்களுக்கு தெய்வமாகிறது
எழுதுகின்றவர்களுக்கு இலக்கியமாகிறது!

இலக்கியத்துக்கு "ஏ கே வேலனின்"
எழுத்து காவிரிக் கரையினிலே:
வாழிய காவிரி! வளர்க தமிழர்!

# 1. காவேரிக்கரையினிலே

குடகிலே பிறந்து, கொங்கிலே வளர்ந்து, மருதிலே நடந்துவந்தாள் ஒரு மங்கை. கல்லா மழலைக்குக் கனகச் சிலம் பொலித்தாள் கனி வாய்ச்சிரிப்புக்கு கமலம் விரித்தாள். சிந்தாத இளமைக்குச் செவ்வாழை மடல் தரித்தாள்.

அல்லியிடை துவள, குவளை விழி மலர, புன்னையடி இட்டு, காந்தள் விழி காட்டும் அவள் ஒரு குறிஞ்சிப் பெண். தமிழ்க்குமரி பெயர் காவிரி! திருசிரபுரம் வரை அவள் வளர்ந்து வந்த பொலிவு, தஞ்சைப் பரப்பில் அவள் வளர்த்த தாய்மை அழகு! நஞ்சைப் பரப்பெல்லாம் அவள் நலம் செய்த பசுமைக்கோலம்! செந்நெல் கதிர்சாய, செவ்வாழைக் கனிசாய, தென்னை குலைசாய, செங்கரும்பு வேலிசாய, இருகரையும் அலைசாய அவள் அன்று தொடர்ந்தாள்; இன்றும் நடக்கின்றுள்.

புஞ்சை வெளி அவள் பூத்துச் சிரித்த மலர்க் காடு!

செல்லக் குழந்தையை அள்ளித் தழுவும் அன்னை போல, தஞ்சை மண்ணைத் தழுவும் கிளை நதிகள்!

பாலூட்டி வளர்க்கும் தாயினும் சாலப் பயிரூட்டி நிலம் வளர்க்கும் காவிரிக்கு வாழ்த்துரைக்க வார்த்தை எங்கே?

வடக்கு வாயில் அரிசிலாறு; தெற்கு அலங்கம் குடமுருட்டி; முற்றத்தில் முடிகொண்டான்; புழக்கடையில் திருமலைராஜன். எனப்பல ஆறு இடையிட்ட ஆறைநகர்',

படையூர், நுழையூர், சக்திமுற்றம், சோழ மாளிகை என இன்று பல சிற்றூராய் இருக்கின்ற சரித்திரப்புகழ் பைந்தமிழ்ப் பெருமை நிமிர்ந்திருந்த பழையாறைத்திருப்பதி காவிரியின் மடியில் கொலுவிருந்தது. சோழன் மூன்றும் குலோத்துங்கனுக்கு அது இரண்டாம் தலைநகர். வளம் செய்த காவிரிக்கு நிகராக தமிழ் நலம் செய்திருந்தது அங்கே. ஒட்டக் கூத்தர் சோழன் அவைக்குப் புலவர் அமைச்சுக்கு முதல்வர்! செம்பியன் மழவாரயன் படைக்குத்தலைவன்! சிற்றம் பலமுடைய வேதர். திருமந்திர ஓலைக்கு நாயகம். ஏரகப்பாடி குமாரதேவன் கோட்டைக்குக் காவல்.

ஆக தமிழும் அரசும் தழைத்திருந்த அந்த நாளில் தலைக்காட்டுத் தூது வந்தது.

கூத்தர்: காவிரி போல் பெருகி,
கன்னித் தமிழ் போல் நின்
கொற்றம் தழைத்து வாழ்க!

கருணைக்கு நிலவாக,
கடமைக்குக் கதிராக,
நின் செங்கோல் நிலைத்து வாழ்க!
முன்னைப் புகழுக்கு இருப்பாக
பின்னைப் பெருமைக்கு விளக்காக,
நின் கொடையும் குஞ்சரமும்
நீடு வாழ்க!

எனக் கூத்தர் வாழ்த்தினர். திருமந்திர ஓலை நாயகம் முன் மொழிந்தனன்.

திரு: வேந்தர் வேந்தே,
தங்கள் திருமுன்னிலைக்குத்
தலைக் காட்டுத் தூது வந்திருக்கிறது.

தூது: தமிழுக்கும் வேந்துக்கும்
தலை வணங்குகின்றேன்; எங்கள்
மன்னர் பல்லாயிரம் பல்லாயிரம்
நல் வாழ்த்துக்கள் விடுத்துள்ளார்.

அரசர் : நன்றி...

தூது : தலைக்காட்டு அரசுக்கு ஒரு தூண் எங்கள் பரம்பரை! நுளம்பபாடி கடம்பன் என்பார் எம்மை!

கூத் : இப்போது கொண்டு வந்த செய்தி என்னவோ?

தூது : நாங்கள் புறக்கடையில் போக விட்டுப் பெருகிவரும் காவிரி! சோழ நாட்டுக் காவதம் இருபத்து நான்கையும் கனி குலுங்கும் சோலை யாக்கித் தந்திருக்கிறது. இந்த வளத்துக்குப் பெருமைப் படுகிறார் எங்கள் அரசர்.

அர : மகிழ்ச்சி

தூது : ஒரு உரிமையையும் கேட்கிறார்.

கூத் : தமிழ் படிக்கவோ? எங்கள் தார் வேந்தன் அவையில் அங்கம் வகிக்கவோ? புலிக்கொடி யின் நிழலிருக்கவோ?

தூது : துடுக்கென்று எண்ண வேண்டாம்-தூதாகச் சொல்ல வந்ததைச் சொல்லுகிறேன்... காவிரியின் வெள்ளத்துக்கு வரி கேட்கிறார்.

அர : கூத்தரே!...இது பொறுக்காத வார்த்தை... வரிப்புலியை நரிமேய்த்தது உண்டென்றால் சொல்லுங்கள்!

கதிரும், நிலவும், காற்றும், நீரும் உலகப் பொதுவென்ற மரபுக்கு அப்பால், உரிமை கேட்ட ஆணவத்தை மன்னிப்பதா? தலைக் காட்டுக்குத்தனியாக இந்த தலைக்கனம் இருக்க முடியாது...பின்னால் சளுக்கன் (சத்யாசிரயன்) நின்றால்...என் தந்தை வழிப்பங்காளி அவன்... ஹொய்சளன் இருந்தால் சோழர்க்கு என்னைப் போல் மகள் வழிப்பேரன் அவன்! அந்தப் பகை என்றால்...

மழவ : எந்தப் பகையானுலும் வேர் அறுத்துச் சாய்ப்போம்... செம்பியன் மழவராயன் இன்றே செல்லுகின்றுன் தலைக்காட்டுக்கு...
வேந்தே...உங்கள் விழியில் பொறி பறந்தால்..
பகைவர் கோட்டையில் நம் புலி பறக்கும்!

அர : திறமிருந்தால் காவிரியை அவர்கள் நாட்டோடு நிறுத்திக் கொள்ளச் சொல்!
இல்லை என்ருல் நாளுக்கு ஆயிரம் பொன் சுங்கம் விதித்தேன் என்று சொல்!
தயங்கினுல்......
நாழிகைக்கு ஆயிரமாகக் கேள்!
எதிர்த்தால்......
வாளுக்காயிரம் தலை கொண்டு வா!

மழ : வெற்றித் திருமகள் உங்கள் ஏவற் பெண்ணுக வருவாள்...வருகின்றேன்.

கூத் : நுளம்பனே! தூது என்ற சொல்லுக்குள்ள மரியாதை உன் உயிரைக் காத்தது. செல்லுக.

நுங்கள் மன்னவனுக்கு நல்லது சொல்லுக......
என முடித்தார் கூத்தர். இந்த முடிவுக்கு நுளம்பன் அதிர்ச்சி கொண்டான் இல்லை... அவன் ஏதோ எதிர் பார்த்த நிறைவோடு திரும்பினுன்.

# 2

உதியன் மலைச்சாரல் தந்த வளத்தில் தலைக் காடு தழைத்திருந்தது. சந்தனத்தில் விறகெரிப் பார், தந்தத்தில் மாட்டுத் தொழு அடிப்பார்? தேக்கில் தெருவுக்குப் படி மிதிப்பார். வீம்பு இவர்கள் பிறவிக் குணம்.

வேட்டை அவர்கள் பொழுது போக்கு, பள் ளம் பறித்து, பசுந்தழையால் அதை மறைத்து வேழங்களை ஏய்த்துப்—பிடித்தனர் வனத்தில். புலி களின் வாலைச் சேர்த்து முடித்தாள் அந்தக் கோட் டைக்குத் தலைவி. தலைக்காட்டு வேந்தனுக்கு மகள்.

அவள் குழல் நெளிவில் வண்டிருந்தது. விரல் வளைவில் நண்டிருந்தது.விழிகளில் கெண்டை இரண் டிருந்தது. மொழிகளில் கற்கண்டிருந்தது. நடை களில் வாழைத் தண்டிருந்தது பேரழகில் பெண்மை திரண்டிருந்தது. மலர்செண்டெடுத்துச் செய்த சித் திரப்பாவை அவள்...நெஞ்சில் வீரம் குடி கொண் டிருந்தாள். சரித்திரத்தில் நாச்சியார் கன்னர தேவி எனப்பெயர் கொண்டிருந்தாள். அவள் தான் தலைக்காட்டு நங்கை! அவள் வனத்திருந் தாள். தலைக்காட்டு வாயிலில் செம்பியன் மழவ ராயன் சினத்திருந்தான். நுளம்பன் விடுத்த ஓலை படித்திருந்த வேந்தன் நெஞ்சம் கனத்திருந்தான்.

கடிதம்

வேந்தே!

கலை வளர்க்க, சிலை எடுக்க, ஆறை நகர்க்கு எனை விடுத்தீர்... அங்கே பகை வளர்க்க கொலை நடத்த படை எடுக்க வகை பார்த்திருந்தார். பதை பதைத்தேன். காவிரியின் பெரு வெள்ளம் கல்லணையை உடைத்ததற்கு நம்மை அவர் குற்றம் சொன்னார். நட்டத்துக்கு விலை கேட்டார். நானதன் வளத்துக்கு வரி கேட்டேன். சிரித்தே கழுத்தறுக்கத் தெரிந்த சோழன் சினந்தான்!

சளுக்கர் உறவை அறுத்து ஹொய்சளர் நட்பை முறித்துக் கொள்ளுங்கள் ... இன்றேல் சோழர் பகைத்து வருவாரென்றார். இது நேரம் வந்திருப்பார்கள்...மற்றபடி என் சூழ்ச்சி வட பெண்ணைக்கு இப்பால் நின்றிருக்கும் சோழர்களை வென்றழிக்க சளுக்கரைப் படைஎடுக்கச் செய்திருக்கிறேன். நான் ஹொய்சளப் படையுடன் வருகின்றேன். வந்து விட்ட பகைக்கு நீங்கள் சிந்திக்க வேண்டாம். மானம் பெரிது. (என்றிருந்தது ஓலையில்)

குரல் : தமிழ் மூன்றுக்குத் தலைவன் உலகளந்த நாயகன் குலோத்துங்கப் பேரரசனின் வாளி விடுத்த தூது வந்திருக்கிறது. செம்பியன் மழவராயன் சேனாதிபதி வருகின்றார்!

என்ற அறிவிப்போடு சோழ சேனாதிபதி அவைக்கு வந்தார்.

அர : வரவேற்கின்றேன்... சொல்லுக்குச் சொல் சுரம் போட்டுப் பேச இங்கும் ஆளுண்டு...நீர் வந்த கதை என்ன?...

மழ : நீங்கள் விதைத்து விட்ட வினையை அறுத் தெடுக்க வந்தேன். ஆற்று வெள்ளத்துக்கு ஆள் விடுத்து வரி கேட்டீர்,. எங்கள் வேந்தர் வாள் விடுத்து சுங்கம் விதித்தார்! நாளுக்கு ஆயிரம் பொன்.

அர: மறுத்தால் ?

மழ : நாழிகைக்கு ஆயிரம் பொன்!

அர : எள்ளி நகைத்தால்?...

மழ : வாளுக்கு ஆயிரம் தலை கொண்டு போவேன்

அர : இந்த ஆணவத்துக்கு இன்னும் அதிக விலை கேட்பேன். காவிரி வளர்த்த நன்றிக்கு வாளெடுத்து வந்த போரா? எங்கள் நட்பி லும் உறவிலும் குறுக்கிட்ட தருக்கை மன்னிப் பதில்லை. போருக்கு வரவெடுத்து வந்த புலியே, உனக்கு எத்தனை உயிர்'

என வாளில் கை வைத்தான். வளைத்துத் தாக்கினர் தலைக்காட்டு வீரர். செம்பியன் கை வாள், மின்னலெனச் சுழன்று வந்து தாக்கியது ... அவைக்களம் அமர்க்கள மானது... இமைக்கு முன்னே, வல்வில் ஓரியன் வழி வந்த மரபினர் வில்லெடுத்து அம்புகளை விடுத்தனர். அவையிருந்த பகைப் படையின் உயிர் குடித்து முடிந்தது.

ஒரு கூர் அம்பு மன்னவன் நெஞ்சைப் பிளந்து நின்றது...நெற்றியில் வழிந்த ரத்தத்தைத் துடைத்துக் கொண்டு,

மழ: கங்கரே! இரக்கப்படுகிறேன்—நீர் பிழைத் தெழுந்தால் நுளம்பர்கள் இனி பிறக்க வழி வைக்காதீர். இன்று முதல் இங்கே புலி பறக் கும். ஊருக்குத் தலைக்காடு என்ற பெயரில்லை. சுங்கம் விதித்த சோழபுரம் என வழங்கும். எமது வெற்றிகளை அளப்பதற்குப் படியாக உமதுமுடிஎடுத்துச்செல்லுகின்றேன்.வணக்கம்!

செற்றம் தணிந்து சென்றான் செம்பியன் மழவராயன்...மன்னவன் மகளை நினைத்தான்! துடித்தான்!! உயிர் முடித்தான்!!!

## 3

தந்தை உயிர் பறித்தார்;
தங்க முடி எடுத்தார்;
என்ற சேதி கேட்டாள்.
நஞ்செழுந்த நாகமென
உயிர்த்தாள்! மதர்த்தெழுந்த
யானையாக வளர்த்தெடுத்த,
புலியை மிதித்தாள். வெறித்தெழுந்தாள்
தந்தை எரிந்து தழலான நீரெடுத்தாள்

நெற்றியிட்டாள்? நினைவகன்றாள்?
நடந்தாள். ஒரு குதிரை
ஓடி வந்து குறிக்கிட்டது.
நுளம்பன் குதித்தான்.

நுள : கன்னர தேவி! இது என்ன கோலம்?

நங் : காலத்தின் தீர்ப்பு...

நுள : உன் கண்ணீரைத் துடைக்கத் தான் வந்தேன்...

நங் : நுளம்பரே· எனக்கு அழத் தெரியாது......

நுள : கொதித்திருக்கும் உன் முகத்தில் நெருப்புக் கொழுந்தின் நீலம் தெரிகிறது...

நங் : வெடித்திருக்கும் எரிமலை வெளியாவதற்குள் விலகிப்போ!...

நுள : நுளம்பபாடிக்குத் தேவதையாக அழைக்கின்றேன்...

நங் : நான் பேயாகி விட்டேன்...

நுள : நானே உனக்கு நல்ல பூசாரியாவேன்.

நங் : நொந்த உள்ளத்தில் யாரும் நுழைவதற்கில்லை...

நுள : உன் நோக்காட்டைத் தீர்ப்பதற்கென்றே பிறப்பெடுத்தவன் நான். என்னோடு மன்றுக்கு வா...உன் பகையை வென்று தருகிறேன்...

நங் : இன்று நான் ஒரு அடிமைப் பெண்! என்னை உரிமை கேட்பவன், முதலில் என் மண்ணுக்கு உரிமை கொண்டு வர வேண்டும். சோழனை வென்று என்னைச் சுதந்திரமாக்கு! பிறகு மணம் பேசு!

நுள : கன்னரதேவி, உன்னை எனக்கில்லை என்ற மன்னவன் இந்த மண்ணுக்கே இல்லையாகப் போனார். நீ ஒரு பெண்!

நங் : பொங்கி வரும் கங்கையும் காவிரியும் பெண் என்பார், வானத்தை வாணி என்பார்:
பூமியைத் தேவி என்பார்;
கலையும் மகளாவாள்;
தமிழும் தாயாவாள்,
மலரும் கனியும் மங்கலப் பொருளும்
மங்கையர் வண்ணமடா;
உன்னைப் பெற்ற அன்னையும்
ஒரு பெண்தான் போ; போ.

என இகழ்ந்தாள்; நடந்தாள்; வழி மறித்தான்; வலிந்து எடுத்தான்; இடையிருந்த குத்து வாளை எடுத்தாள்; அவன் நெஞ்சின் ஆழத்தை அளந்தாள்; சபித்தாள்; சாய்ந்தான்.

நங் : வஞ்சனைக்கு நரியே!
நஞ்சிருந்த உன் கறியை
காக்கை கோதாது!
கழுகு தின்னாது!

என வெறித்தாள்; சிரித்தாள்; பழியெடுத்த பழையனூர் நீலியானாள்.

பழையாறை மழவராயனை வரவேற்றது.

மழ : வெற்றி வெல் போர் மும்முடிச் சோழச்சக்ர வர்த்திகள் வாழ்க! அரசே! அவைப்பேச்சு முடிவதற்குள் கங்கர் அவசரப் பட்டார். அவர் மறவர்கள்- வாளால் என்னை வளைத்தனர்; நம் கைக்கோளப்படை என்னைக்காப்பதற்காக வில்லை வளைத்து விட்டார்கள். தலைக்காடு சவக் காடானது. நுங்கள் வாள் எடுத்த தூதுக்கு இந்த முடி எடுத்து வந்தேன்.

அர : மகிழ்ச்சி! உன் வீரத்துக்கு வாழ்த்து, வெற்றிக்குப் பாராட்டு: பழையாறைக்கு ஒரு புதுப்பெயர். இன்றுமுதல் முடி கொண்ட சோழபுரம் என வழங்கட்டும்.

கூத் : ஊருக்குப் பெயர் கொண்டு வந்த ஏறுதி முடி எடுத்து வந்த இந்த நிகழ்ச்சிக்கு நினைவாக என் பாட்டுக்குப் பொருள் எடுத்து வர வில்லையே!

அர : ஆம். என் பாட்டன் கலிங்கத்துப் பரணி கொண்டான். இவர் எனக்கெழுத எழுத்தாணி தீட்டியிருந்தார்.

மழ : இன்னும் எத்தனையோ களங்கள் எதிர் பார்த்திருக்கின்றன பெருந்தகையே!

அர: காளி வருவாள்;
கூளி எழுவாள்;
கிங்கரர் நடம் புரிவார்;
ரத்த ஆறு ஓடும்; பிணமலைகள் குவியும்; எமபுரத்துக்கு அது தலைவாசல். அந்தக் கொடுமைகளை நீர் பாட்டெழுத ஒரு பெரும் போர் நடத்தவேண்டுமா? கூத்தரே...எனக்குப் பரணி வேண்டாம்! ஈசனுக்கே எழுதுங்கள்.

கூத் : ஏடுகள் திருத்தி வைத்தேன். எழுத்தாணி முறி பார்த்தேன். எழுது, எழுது என்று வாணி கூவுகின்ருள். நல்ல தமிழ்ச்சொற்கள் நான் நான் என்று வருகின்றன. தக்கன் பகை யாவான் சங்கரன் வாகை சூடுவான்! யாகத்தைக் கதையாக்கிப் பாடுவேன் தக்கயாகப் பரணி.

அர : எழுதுங்கள்... அதனை அரங்கேற்றி நான் புகழ் பெறுவேன்.

## 5

சில நாட்களுக்குப்பின் பழையாறைக்கு பைரவி என்ற ஒரு கழைக் கூத்தி வந்தாள் அவள் ஏவலுக்குச் சில கிழவர்; காவலுக்குச் சில புலிகள். அந்தரத்தில் பம்பரம் சுழன்ற அதிசயத்தைக் கண்டனர் மக்கள். அவள்கழை

ஏறுகின்ற வேகத்துக்கு அணில் தோற்றது. கலை மிகுந்த அவளுக்குக் கிள்ளை தோற்றது. இளம் பிள்ளைகள் அவள் வித்தைக்குக் கூடினர். இளமைவந்த பிள்ளைகள் அவள் இளமைக்குவாய் பிளந்து நின்றனர். கிழவர்கள் சென்று விட்ட இளமையை நினைவுக்கு இழுத்தனர். பெண்கள் ஊருக்குள் ஒரு மோகினி வந்து விட்டாள் என முணுமுணுத்தனர். சித்திரக்காரன் அவள் நிறத்துக்குச் சாயம் குழைத்துப் பார்த்தான் சிற்பி அவளைச் செதுக்கிப் பார்க்க சந்தனக் கல்லெடுத்து வந்தான். கவிஞன் இது வரை வேறுபுலவன் எழுதாத வார்த்தைகளால் அவளை எழுதிப் பார்த்தான் ஆக, ஊரெங்கும் அவளே பேச்சு! கூத்தரும் வேந்தனைத் துழாவினர்!

கூத்தர் : வேந்தே !... ஆயகலைகள் அறுபத்து நான்கில் கழைக் கூத்தும் ஒன்றே! அவளை அம்பலத்தில் ஆட வைத்து ஏதோ கொடுத்தனுப்புங்கள். — அவளேன் தெருவெல்லாம் ஆடித் திரிய வேண்டும்?

அரசர் : நம் ஆண்டவனே சுடலையில் ஆடியிருக்கிறன். இவள் தெருவில் ஆடினல் என்ன;

கூத் : போக்குவரத்துக் கெடுகிறது. மக்கள் கவனம் சிதறுகிறது. பள்ளிக்குப் பிள்ளைகள் தப்புகின்றனர். எனக்கே சில சமயம் பாட்டெழுத வரவில்லை.

அர . அவ்வளவு கலை வளமா? என்ன சாயல்? ...

கூத் : விரல் நொடிப்பில்
கேரளத்து மின்னல்;
விழி அசைப்பில்,
கன்னடத்துச் சாயல் ;
அடி எடுப்பில்,
தமிழ் மிடுக்கு ;
அங்க நெளிவில்,
சுந்தரத் தெலுங்கு ;
தெரிகிறது அரசே !

அர : ஆக மொத்தத்தில் தமிழுக்குச் சொந்தமென்கின்றீர்.

கூத் : என் பாராட்டுக்குரியவள் உங்கள் பரிசுக்கும் உரியவள் ஆவாள் என்றே நம்புகிறேன்,

அர : ஆகட்டும்... நம் அவைக் களத்தில் உங்கள் தலைமையிலேயே நடத்திப் பார்ப்போம்

## 6

தேரில்லை: திருநாளில்லை: ஆனாலும்
திருவிழாக் கூட்டமிருந்தது.
கதிரடிக்கப் பறந்து செல்லும்
கிளிக்கூட்டம் போல்,
அவள் சதுரடிக்குக் கூடினார்கள்.
குந்தளக் கொட்டோடு, கழைக்கொம்பு
நிமிர்ந்து நின்றது.
மத்தளம் முழங்க, வளர் சதங்கை

குலுங்க
நட்டு வாங்க நடை தாளமிட்டு வந்தாள்.
நில மகட்கும்
கலை மகட்கும் தலை வணங்கினுள்.
பம்பை பரபரத்தது;
கொம்பு சரசரத்தது; உச்சியில்
நின்ருள்.
மச்சு இடிந்து சரிந்தது! போல்
மக்கள் கை சிவக்கத் தட்டினர். வானத்தின் மீது ஒரு மயிலாடக்கண்டு மகிழ்ந்தனர்.
அந்த ஆடுகளத்திற்கு — மன்னனுக்குஓடும் பிள்ளை, மெய்க்காவலன் கிளியூர் மலையபெருமாள் வரிசைத் தட்டுடன் வந்தான்.

மலை : நட்டுவத் தாத்தனே! நாளைஉன் பேத்திக்குத் திருநாள். அரசர் அம்பலத்தில் அவள் ஆட வேண்டும். நீ பரிசுகளை வாரி அள்ள வேண்டும். அதற்கு வரிசை கொண்டு வந்தேன்.

மழ : மகிழ்ச்சி; மகிழ்ச்சி! (என உணர்ச்சி பொங்க பேத்தியைப் பார்த்தான்.)

பைர : அரண்மனை அழைக்கிறதா? அவ்வளவு பெரிய இடத்தில் ஆடிப்பழக்கமில்லை.

மலை : அந்தக் கலைக்கோயிலில் நீ ஆடக் கொடுத்து வைத்திருக்க வேண்டும். இந்தத் தெருக்கூத்து எதற்கு!...

பைர : இது தெருக்கூத்து என்ருல், உங்கள் பேரவையில் பாடும் புலவர் கூத்தர்: நீங்கள் தில்லையில் தேடும் தெய்வம் ஒரு கூத்தன்; நான் விரும்பவில்லை

மலை : அழைப்பை மறுத்தால், அதிகாரம் வரும்.

பை : கோலெடுத்தால் குரங்காடும், மயிலாடாது.

மலை : மன்னவன் கட்டளைக்கு மறுப்பா?

பை : மன்னவன்! கலைக்கு முன்னால் மிக மிகச் சின்னவன்!

மலை: என்ன சொன்னாய்? உன் நாக்கைத் துண்டிப் பேன்.

பை : நிச்சயம் செய்வாய்!... குத்தும் கொலையும் தானே உங்களுக்குக் கை வந்த தொழில்!

ஊர் மக்களைப் பார்த்து:

ஐயா பெரியவரே!
உங்கள் திண்ணையை எதிர்
வீட்டுக்காரன் இடித்தால்
பார்த்துக் கொண்டிருப்பீரா?

ஒருவர்: அது எப்படி?

பை : அரசன்- அடுத்த நாட்டுக் கோட்டையை இடித்து, எரித்து, கழுதை ஏர் பூட்டி கள்ளியும், முள்ளியும் விதைத்து வருகின்றானே... அதில் இருக்கின்ற கலை என்ன சொல்லுங்கள் ஐயா! உங்கள் வேலியை பக்கத்து ஆள் நகர்த்தினால்?

மற்றொருவன்: அது எப்படி?

பைர : அரசன் எல்லை கடந்து, இனம் கடந்து, ... மொழி கடந்து, அடுத்த மண்ணை வளைத்துப் பிடிக்கிறானே— அதில் எங்கே கலையிருக்கிறது?

நீங்கள் இங்கே சச்சரவிட்டால் அதைக் குழப்பம் என்பார். அரசன் படைதிரட்டி, கொடி போட்டு, வெட்டிச் சாய்த்தால், அதற்குப் பெயர் வீரம் என்பார், வெற்றி கீதம் பாடுவார்... அந்த சோகத்தை எழுப்புகின்ற சூழ்நிலைக்கு முன் ஆட அஞ்சுகிறேன். கொள்ளிக் கண் படைத்த அந்தக் கொடியோர்கள் பார்வை பட்டாலே கலைக்குக் கண் படும். போ... போ... !!

என மறுத்து விட்டாள்! மலைய பெருமாள் திகைத்தபடி சென்றான்.

## 7

மன்னரும் கூத்தரும் மாளிகைச் சோலைப் புறத்திருந்தனர். மலையபெருமாள் கூம்பிய முகத்தோடு வந்து கரம் கூப்பினான்.

மன் : மலையபெருமாள்!... அவள் மறுத்து விட்டாள் என்பதற்கா தலை குனிந்தாய்? ...

மலை : அதிகம் பேசிவிட்டாள்.

அர : அறியாமை, வெகுளித்தனம், குறும்பு கலந்த பேச்சு...

மலை : அரசே! நமது வீதியில் நம்மை இகழ்ந்தாள்!

அர : நீதியில் பெரியது சோழபரம்பரை! (கூத்தரைப் பார்த்து) புலவர் பெருந்தகையே!...நம் அவைக்கு வந்து அவள் ஆட

மறுத்தாள். அவள் ஆடுகளத்துக்கு நாம் செல்வோம்.

கூத் : அரசே.! வீதிக்குச் சென்று நீங்கள் வேடிக்கை பார்ப்பதா?

அர : ஆம். ஆவலை வளர்த்து விட்டீர்களே!

கூத் : இது என்ன அரசியலோ? அமைச்சியலில் வள்ளுவர் சொல்ல மறந்த ஒன்று!

என நகைத்தான்!

## 8

முடி கொண்ட சோழபுரத்து வீதிகளில் ஓரே பரபரப்பு. அன்று ஆடுகளத்துக்கு மன்னவன் தேரேறி வந்தான். மக்க விழி மலர மனம் பூரித்து வரவேற்றனர். அவள் ஆடுவதை நிறுத்தினாள். சலங்கை கழற்றினாள்.

ஒருவன் : என்ன செருக்கு! மன்னவனைத் துச்சமென நினைக்கின்றாள்!

2 வது : இது மிகத் துடுக்கு,

எனக் கொதித்தனர் மக்கள். மன்னவன் புன்னகை பூத்து மக்களுக்குக் கையமர்த்திப் போனான்.

## 9

மறுநாள் வந்தது.

மன்னவன் குதிரையில் வந்தான்.

பிடித்த பதம் பாதியிலே நிறுத்தினாள்.

அரசன் சிரித்து விட்டுச் சென்றான்.

ஒருவன்: ஆடல் மகளே! அவனி முழுதுடைய அரசனுக்கு எதிர் நிற்கின்றாயா? இரக்கப் படுகின்றேன்.

என ஒரு புலவன் சொல்லிப் போனான்.

## 10

மூன்றாம் நாள்.

பாடல் பெற்ற பட்டீச்சுரத்துக் கோயிலுக்கு முன்,
ஆடல் பெற மக்கள் காத்திருந்தனர். வீதி நடுவிருந்த வேங்கை மண்டபத்தில் வேந்தன் வீற்றிருந்தான்.

ஒருவன்: இரண்டு முறை நிறுத்தி விட்டாள். இன்று மட்டும் என்ன?

2: வது அவள் ஆடல் கூடாது என்பதற்கே அரசர் வந்து கொண்டிருக்கிறார்.

3: வது மன்னன் நினைத்தால் மாதவி மறுபிறப் பெடுத்து வருவாள். இந்த மமதைக்கு......

4: வது சரியான பாடம் கற்பிக்கச் சமயம் பார்த்திருக்கிறார். பொறுத்திருங்கள்; அதோ சலங்கை ஒலி.

அவைக்கு வந்தாள்;

அஞ்சலி செய்தாள்;

அரசன் இருப்பை அறியாதவள் போல ஆடினாள்.

வேந்தன் முகத்தில் வெற்றி ரேகை படர்ந்தது.

இடக்கரம் மீசை முறுக்கிற்று. வலக்கரம் தாளமிட்டது. வண்டு சுழன்று வருவது போல் வந்தாள். அவன் கைத்தாளத்துக்கு மத்தளம் எடுத்துக் கொடுத்தாள். கார் வையை உதிர்த்தாள். அவன் கைவேகத்தை அவள் கால்கள் அளந்தன. அவன் தாளவரிசைக்கு சதிர் வரிசை காட்டினாள். அவள் விழிகளில் ஆயிரம் பம்பரம் சுழன்றன. மக்கள் மெய் மறந்தனர். மின்னல் வேகத்தில் வேங்கை மேல் மான் பாய்ந்தது. மன்னன் வேடம் கலைந்தது. கிளியூர் மலையபெருமாள் தலை கிறு கிறுத்து நின்றான்!!

மக்கள் இந்த விந்தைக்கு மலைத்தனர். அவள் வெற்றி நடை போட்டு வீர முரசு கொட்டினாள். ஆக; அன்று என்றுமில்லாத பெரு கோடு முடித்தாள்.

## 11

அரச மாளிகைக்குப் பரபரப்போடு கூத்தர் வந்தார்.

கூத்தர் : அரசே,... மலைய பெருமாள் ஒரு மலையளவு ஏளனத்தைக் கொண்டு வந்திருக்கிறான்.

அரசர் : மன்னனுக்கு முன் ஆடி விட்டாள் என்ற மதிப்போடு அவன் நழுவியிருக்க வேண்டும். அரச வேஷத்திலிருந்த ஆசையில் அகப்பட்டுக் கொண்டான்:

தாளமிட்டான்: மத்தளம் கொடுத்தாள்—
ஜதி வரிசை கேட்டான்:
அலங்கார வரிசை காட்டினாள்.
அதற்கு மேலும் நின்றான். அவள் வென்றாள்.

கூத் : இந்த நாடகத்தில் உங்களுக்கென்ன பங்கோ?

அர : முதல் நாள் இவனுக்கு நான் தேரோட்டினேன். நேற்று— குதிரைச் சேணம்பிடித்தேன்? இன்று மெய்க்காவலனாக நின்றேன்.

கூத் : நன்று— நன்று
உங்கள் நாடகம்!

அர : புலவர் பெருந்தகையே! முதல் அங்கம் இன்றுதான் முடிந்திருக்கிறது. இந்த நாடகத்தில் (எனச் சிரித்தான்... சிரித்தார்!)

## 2

முடிகொண்ட சோழபுரத்துப்புறநகர் தாராசுரம்! ஆங்கே, சாவடிகள், மடங்கள், சமய மன்றங்கள், வாணிபக்கிடங்குகள் வழிப் போக்கர் விடுதிகள், வாடகைக் குடில்கள் அமைந்திருந்தன.

வெளியூர் முகங்கள்: வேற்று மொழிக்குரல்கள் அதிகம் தெரியும்.

தோணித்துறைப் பகுதியில் ஒரு தோட்ட வீடு. அது பேயிருந்த குடில் என்று பூட்டிக் கிடந்தது. பைரவி அதை இடம் பிடித்திருந் தாள்.

ஒரு நாள் இரவு, நெடுநேரம் புதுக்கூத்துக்கு ஒத்திகைபார்த்திருந்தாள். அப்போது பின்புற சுவரில் காற்று மடைதிறக்கின்ற அசைவு கண்டாள்

எலி பிடிக்கப் பூனை எதுவோ நுழைகிறது என்றிருந்தாள்.

ஆனால் புறநடையில் கட்டியிருந்த அவள் புலி புதுவானை பிடித்துக் காட்டியது.

அதைப் பார்க்காதவள் போல் பார்த்தாள்; காற்று மடையில் இருபளிங்குகள் தெரிந்தன. காட்டிக் கொள்ளாமல் பின்புறம் வந்தாள் ஒரு பெரிய கரிய உருவம்- சுவரோடு சுவராக நின்று- காற்று மடையை எவ்விப் பார்த்துக் கொண்டிருந்தது.

பைரவி: இது என்ன சோரம். இதுவும் ஒரு சோணாட்டு வீரமோ!

எனச் சிரித்தாள்.

அவள் அஞ்சாமைக்கு அஞ்சினான் கள்வர் கோமான்! அவளை அச்சுறுத்தும் மிடுக்கோடு அருகே வந்தான்.

பைரவி : என்ன வேண்டும்? எனக் கேட்டாள்.

கள்வன் : நான் யாரென்று தெரிந்தால்?

பைரவி : இது பேயிருக்கும் வீடென்று தெரிந்தே இருப்பவள் நான்... நீ?

கள்வன் : கள்வர் கோமான் கழுதமலை இருளப்பன்!

பைரவி; கொல்லைப் புறமாக வருகின்ற ஒரு கோழை! எங்கள் மலைத்திருடர்கள் நேரம் சொல்லி வருவார்கள் (என ஏளனமாக பார்த்தாள். அதற்கு நாணுற்றவன் போல் பின் நகர்ந்தான்.)

கள்: நீ யார்?

பை: கொல்லிமலை மழவன் மகள்

கள்: மழவன் எனக்கினிய நண்பன். இந்த மன்னனுக்காக உயிர் கொடுத்த மறவன்! அவன் மகளா நீ?

நீயேன் ஆடிப் பிழைக்கின்றாய்?

பைர: நீயேன் திருடிப் பிழைக்க வேண்டும்?

கள்: இது கள்வர் குல மரபு.

பைர : இது என் கலை மரபு, உள்ளே என்ன பார்த்தாய்?

கள் : உன்னைத்தான் பார்த்தேன்.

பை : நீ கொள்ளையிட என்ன இருக்கிறது?...

கள் : கள்ளின் குடங்கள் இரண்டிருக்கின்றன
உன் கண்களில்; முத்துகளைச் சிந்துகின்ற
மோகனச் சிரிப்பிருக்கிறது
உன் இதழ்களில்.

பைர : நீ என்ன கவி படித்தக் கள்ளனு?

கள்: கவியரசன் வால்மீகி வேடன் என்றால் கலை படித்தவளே! நான் கவி படித்திருக்கக் கூடாதோ?

பை: இன்னும் படிக்கலாம். இந்தத் திருட்டு வழியை விட்டு தெரு வழியாக வா: உனக்காக வாசல் திறந்திருக்கும்...

கள்: வழியில், புலி கட்டி வைத்திருக்கிறாயே?

பை: அது பொல்லாதவர் நுழையாமலிருக்க.
என்றாள். திரும்பிச் சென்றான். சிறிது நேரம் சிந்தனைத் தேரேறி நின்றான் அந்தக் கள்வர் கோமான். பின் இருளில் மறைந்தான்.

## 13

நடைத் திண்ணையில் நட்டுவத் தாத்தன் பாக்கு இடித்துக் கொண்டிருந்தான்:

கிழ: பேத்தி, பின் புறத்தில்
வந்தது யார்?

பை: கள்வர் கோமான்
கழகு மலை இருளப்பன்.!

கிழ, என்ன ஆனான்?

பை: நமக்குக் கையாள்
ஆனான்.

கிழ : நம்பிக்கைக்கு உரியவனா?

பை : இன்னும் பரிட்சைகள்
வைக்கவில்லை. பார்ப்போம்,
இன்றிரவுக்கு நன்றி;
எனச் சொல்லி முடித்தாள்.

## 14

கிளியூர் மலைய பெருமாள் சேனாபதி மழவராயனைச் சந்தித்தான்.

மலை : சேனாபதி! வணக்கம்.

சேனா ; மலைய பெருமாள்! என்ன கொண்டு வந்தாய்?

மலை : கள்வன்— கழகுமலை இருளப்பன் ஊருக்குள் வந்திருக்கிறான்; அந்தக் கழைக் கூத்தி அவனுக்குக் காதலி!!

சேனா : எப்படித் தெரிந்தது?

மலை : நேற்றிரவு தோட்டத்தில் நெடுநேரம் பேசியிருந்தார், அவள் கொல்லி மழவனுக்கு மகள் என்பதும் கண்டு கொண்டேன்.

சேனா : எனக்குத் தலை சுழலுகிறது, கொல்லி மழவனுக்கு மகள் ஏதையா?

மலே : அவளே சொன்ஞள்!

அர : ஊருக்குத் தெரியாத உறவுக்குப் பிறந்தவ ளாக இருப்பாள்!...

எனச் சொல்லிக் கொண்டு, மன்னவனும் வந்து கலந்து கொண்டான் அவர்கள் பேச்சில்.

சேஞ : அரசே, மலேயபெருமாள் ஒரு புதுச் செய்தி கொண்டு வந்திருக்கிருன்.

அர : கழகுமலே இருளப்பனேப் பற்றி என்ருல் எனக்கும் தெரியும். அவன் கன்னம் வைக்க வரவில்லே; காதலிக்க வந்தவன் என்று திரும்பி விட்டேன்:

மலே : நான் முற்றும் தொடர்ந்தேன், ஒட்டும் கேட்டேன்.

அர : முன்னம் அவள் கூத்துக்குத் தாளம் போட்டு வேஷத்தை இழந்தாய்; காதலுக்கு இடையில் புகுந்து காதை இழந்து விடாதே!.

விடுகாதழகிய பெருமாள் என்ெருரு புலவர் இருக்கிருர், போதும்.

காதில்லா மலேய பெருமாள் என்ற பெயர் உனக்கு வேண்டாம்:

என நகைத்தார்.

மலே : உங்களுக்கு நான் ஒரு சிரிக்கும் பொருள்.. அவ்வளவுதானே! மகிழ்ச்சி,

என அவனும் சிரித்து விட்டான்.

நிலவு வந்து வெகுநேரமாயிற்று. பைரவியின் வீட்டுக்கதவு திறந்தபடி இருந்தது.

கழுகுமலை இருளப்பன் வந்தான். படுத்திருந்த புலிகள் பசித்த நோக்கோடு பார்த்தன.

பைரவி பழச்சாறு பிழிந்து கொண்டிருந்தாள்.

பை : வருக; வருக
கழுகு மலைக் கள்வனே வருக!

கள் : கொல்லிப் பாவைக்கு ஆயிரம் வாழ்த்துக்கள்

பை : வாயால் சொல்லிப் பயனில்லை.

கள் : இந்தக் கரங்கள் நிறைவேற்றக் காத்திருக்கின்றன. சொல்...

பை: திறமுடைத்தா என்று எனக்குத் தெரிய வேண்டும்...

கள் : தெரிந்து கொள்வாய்... உன் புலிகள் என்ன சைவமா! பழம் பிழிகின்றாய்?...

பை : கள் வெறியில் நீ என் கண்களைப் பறிக்காமல் இருப்பதற்குப் பிழிகின்றேன்.

கள் : மகிழ்ச்சி

என அவள் கொடுக்காமலே எடுத்துக் குடித்தான்.

கள் : சுள்ளென்றிருக்கிறது... ஈரக்கறியும், கள்ளும் கலந்த சுவை!

பை : புளித்த மலைத்தேன் படி கலந்தேன்...

கள் : கொல்லி மலைக் குறும்பு கண்ணிலும் இருக்கிறது, சொல்லிலும் இருக்கிறது...

ஒரு புலிக்குருளை அவளிடம் வந்தது, எடுத்து மடியில் வைத்துக் கொண்டாள்.

கள் : இந்தப் புலிகள் என்ன உனக்குச் செல்லப் பிள்ளைகளோ

பை : கொல்வதற்கென்றே வளர்க்கின்றேன்.

கள் : வளர்த்துக் கொல்ல வேண்டிய வஞ்சம் என்னவோ!

பை : வார்த்தைகளால் அதைச் சொல்ல முடியாது என அப்பால் எழுந்து சென்றாள் அவனும் தொடர்ந்தான்
(அங்கே ஒரு பலகையில் வேலைப்பாடுடைய வில்லொன்றிருந்தது.)

கள் : இது என்ன சித்திரவில்லா?

பை : விசித்திரவில்.

கள் : உனக்கும் விற்பயிற்சி உண்டு என்று சொல்; என எடுக்கப் போனான்.

பை : வேண்டாம்... அது அரக்கு வில்; ஒடிந்துவிடும். மெதுவாகத் தொட்டான். விரலால் அசைத்தான் என்னவென்றுணர்ந்தான்.

கள் : ஏய்க்காதே பெண்ணே! இதற்குள் இரும்புக் கம்பியிருக்கிறது.

எனச் சொல்லிக் கொண்டே எடுத்து வளைத்தான்.

கள் : எங்கே ஒரு குறிகாட்டு!
அவனறிவை வியந்த அவள்

பை : நீ என்ன பாரதத்துக் கர்ணனு? பார்த்தனு? வளைத்த வில்லுக்கு குறி கேட்கிறுய்!

கள் : இது இதிகாசக்கதை! வரலாறு பேசும் வல்வில் ஓரி பிறந்த மண்ணில் பிறந்தேன்!
சுழலும் சக்கரத்துக்குள் தான்
அந்த பார்த்தன் திறம்
காட்டினுன். வானவட்டத்தில்
பறக்கின்ற பறவைக்கு அதன்
நிழல் பார்த்தடிப்பேன்...
எதை அடிக்க வேண்டும்?

என வீரம் பொங்கக் கேட்டான் அவனும் உள் வாசல் முற்றத்துக்கு வந்தான்.

பை : அதோ... பறக்கின்ற புலியைப்பார்!

என்றுள். வடக்கு வாயில் கோட்டை முகப்பில் பறந்தாடிய புலிக்கொடியை குறி காட்டினுள். அவனும் மறுக்க வில்லை— நாணை இழுத்து விட்டான், ஒரு கணத்தில் கொம்போடு கொடி அறுந்து விழுந்தது. காவல் மறவர்கள் பதறினர்; கொம்பெடுத்து ஊதினர். ஊதலுக்கு ஊதல் எதிரொலித்தது. எங்கிருந்து எழுந்தனரோ!! பழையாறை பாசறையாயிற்று. பார்வைக்குப் பார்வை போர் மறவரே நின்றனர்.

பைரவி: (கழுகு மலைக்கள்ளனைத் தன் இரு விழிகளாலும் அள்ளி விழுங்கினுள்.)
இந்த வீரத்துக்குச் சூட்ட

கையில் மாலையில்லையே
என்றாள்.

கள்: உன்கைகளையே சேர்த்துக் கோர்த்துப் பார்—
எனச் சிரித்தான்.

பை: விளையாட்டுப் பேச்சுக்கு
இது நேரமல்ல. அதோ
வீரர் நடை போட்டு
வருகிறார்கள். நீ—
எப்படியோ... தப்பிவிடு

எனப் பின் வாசல் திறந்து விட்டாள். கழுகு மலைக் கள்ளன் இருளில்மறைந்தான்.

## 16

செம்பியன் மழவராயன் சிறுத்தை நடைப் போட்டிருந்தான். கிளியூர் மலையபெருமாள்... சிறிந்த படத்தைச் சுருக்க முடியாத நாகம் போல் நெளிந்தான். கூத்தர் பதை பதைத்து நின்றார்.

கூத்தர்: தலை நகரில் கொடியறுக்கும் பகை நுழைந்ததென்றால் நம் தலை முறைக்கே இது இழுக்கு!

கிளியூர்: அப்போதே வந்து சொன்னேன். ஒரு கள்ளன் ஊருக்குள் வந்திருக்கிறான் என்று.

மழவ: அரசர் அவன் காதலுக்கு வந்தவன் என்றார்

புலவர்: இப்போது அரசர் எங்கே?

அரசர்: இதோ வந்து விட்டேன் பெருந்தகையே!

புலவர் : வெட்கப் படுகின்றோம்— வேதனை எங்கள் நெஞ்சை அறுக்கின்றது. அரசே! இந்த கொடுமைக்குப் பின்னால் இருப்பதென்ன?

அரசர் : மலையபெருமாள்... உன் கருத்தென்ன?

மலை ; ஈழத்துப் பராக்கிரம பாகுவின் சூழ்ச்சி என்று நினைக்கிறேன்...

மழ : மேலைச்சாளுக்கியர் கை வரிசையாக இருக்கலாம்.

அரசர் : இல்லை— இந்த வில்லாண்மை வேறு நிலத்துக்கு இருப்பதற்கு இல்லை. ஒரு தமிழன் இழுத்த நாணை அறுத்திருக்கும்!

புலவர் : உள்ளே பகையிருக்கிறதா?

அரசர் : உடம்பிலேயே நோய் இருக்கிறதே.

அப்போது கோட்டைத் தளபதி ஏரகப் பாடி குமாரதேவன் வந்தான்.

குமர : வேந்தே—[illegible] வீட்டு புறக் கடை திறந்து ஒரு ஆள் ஓடியிருக்கிறான். சாட்சியம் கிடைத்தது

அவன் காலடிச் சுவடும் பார்த்தோம்.

இந்த வில்லை அவன் வீட்டிலிருந்து எடுத்தோம். அதனால் அவளையும் அவள் குழுவையும் பிடித்துச் சிறை வைத்திருக்கிறோம்; அவள் புலிகளை நம் கொடிக்குச் சின்னம் என்பதால் கொல்ல வில்லை: விலங்குச் சாலையில் விட்டிருக்கிறோம்.

மலே : அரசே; அன்றே சொன்னேன். அவள் காதை அறுப்பாள் என்றீர்கள்.

கூத் : அவள் நம் அழைப்பை மறுத்ததிலிருந்தே எனக்கு ஐயம்

அர : காலத்தின் தீர்ப்புக்கு நாம் காத்திருப்போம் என்றான் மன்னவன். மற்றவர்களும் பேச்சை முடித்துக் கொண்டனர்.

# 17

அன்றிரவு நல்ல மழை. இடி மேல் இடி தொடர்ந்தது. இருளைக் கிழித்துக் கொண்டு மின்னல் படர்ந்தது.

இருளப்பன் சிறைக்கு மேல் இருந்தான்—

அவளிருந்த அறைக்கு மேல் ஓடுகள் அகன்றன. காற்றும் மழையும் கலந்து உள்ளே நுழைந்தன அவள் நனைந்தாள்.

அது அரசன் தவறென்று நினைத்தாள்.

ஆர்ப்பரித்துக் காவலனை அழைத்தாள்.

பை : சிறைக்கு ஆள் பிடிக்கச் சொன்ன அரசன்... மச்சுக்கு ஓடு போட ஏன் மறந்தான்? எனக் கேட்டாள்.

காவ : உன் கேள்வி துடுக்கு ...நீ என்ன கருப்பட்டி வட்டா கரைந்து விட— நனை!···

என அதட்டிக் கேட்டான் மச்சிலிருந்து கரு நாகம் நெளிந்து வருவது போல் அவளுக்குத் தெரிந்தது.

பை : பாம்பு: பாம்பு:

என அலறினாள். பதைத்து வந்தனர் காவலர். இருளப்பன் விட்ட கயிற்றை இழுத்துக் கொண்டான்.

காவ : குட்டி! நீ கூத்துப் போட இது மேடையல்ல...

உன் குறும்புத்தனத்தை இத்தோடு நிறுத்திக் கொள்.

என அவளை முறைத்துச் சென்றனர். அவள் அச்சத்தோடு மச்சின் வழியையே பார்த்திருந்தாள். அவளுக்குப் பழக்கமான பனிங்குகள் தெரிந்தன. பயம் தெளிந்தது, கயிறு வந்தது. அவள் கை பற்றியது. மேலிருந்து கள்ளன் மெள்ள இழுத்து வாங்கினான். இருளில் கலந்து மறைந்தனர்.

பை : இதை நான் எதிர் பார்க்கவே யில்லை.

கள் : இந்த சிறையனுபவத்தையா?

பை : நீ சிறை மீட்டதை!

கள் : என் திறம் தெரிந்ததா?

பை : உன் திறமையைவிட
மழையின் உதவியதிகம்!

கள் : நன்றிக்கு வார்த்தையே தெரியாது போலிருக்கு.

பை : வெற்றியின் திசைக்குத் தான் வந்திருக் கிறாய்:

கள் : செல்ல வேண்டிய இடம் எதுவோ?

பை : சோழன் கோட்டைக்குள்.

கள் : அங்கு உனக்கு ஆக வேண்டியது என்ன?

பை : அந்த வேந்தன் அணிந்திருக்கும் வீர கடகத்தைக் கொண்டு வர வேண்டும்.

கள் : கொல்லாபுரத்துத் தங்கச் சுரங்கத்துக்கு ஒரு தனி வழி வைத்திருக்கிறேன். தலைக்காட்டு இருப்பறைக்குச்சாவி உண்டு என்னிடம். அந்தக் கடகம் என்ன ஆயிரம் கழஞ்சி இருக்குமோ?

பை : சோழனுக்கு முன்னால் உன் ஆற்றல் என்ன? அறிவு என்ன? நானறிய, வேறு வழி என்ன?

கள் : அதற்கு மேல்.

பை : சோதனையில்லை.
நிபந்தனைகளிருக்கும்.

கள் : அப்படியா!
எனப் பேசிக் காவதத்துக்கு மேல் நடந்து விட்டனர்.

# 18

கதிரவன் எழுந்தான். காவிரிக்கு வடக்காக கொள்ளிடக் கரையிருந்த புறம்பியம் பள்ளிப் படைக்கு வந்தனர். அது அடர்ந்த மாந்தோப்பு. பதுமையில் யானைகள் குதிரைகள் அணி வகுத்து நின்றன.

வெற்றிப் புகழ் நிறுத்திய வீரர்கட்கு வேற் கம்புகள் நிறுத்தியிருந்தனர்.
அங்கே பயமற்று அவனை இருக்கச் சொன்னான்.
கட்டித்தயிரும் கருப்பங்கட்டியும் புட்டும் ஆப்பமும் கொண்டு வந்தான் கோயில் பூசாரி-அவன் இருளப்பனுக்கு கையாள்.

கள் : பூசாரி என்னவன்,
துணையிருப்பான்.
உனக்கும் துணிச்சலுண்டு நிலவுக்கு முன் கடகத்துடன் வருகிறேன்.
என விடை கேட்டான், அவன் விழிகள் விடை அனுப்பி வைத்தன.

## 19

மன்னவன் மாளிகை முன்வாயிலில்......... மழவராயன். மறவர்களை முன் வைத்துப் பேசினான்.

மழ : காவலிழந்ததா! ஆறை நகர் வாளெல்லாம் புல்லறுக்கச் சென்றதா? பார்த்திருக்கும் போதே பகைவர் நம் கொடியறுத்தார்: விழித்திருக்கும் போதே ஒரு பெண் சிறை கடந்து சென்றாள். வெட்கப் படுகிறேன். அதற்கு வடக்கிருந்து நான் சாக வேண்டும்.

கூத் : வந்த பகைக்கு இதுவும் ஒரு வெற்றியாகும்:
நம் மன்னர் என்ன நினைக்கிறார்!

மாற : இந்த ஏமாற்றத்தை எப்படி தெரிவிப்ப
தென்றே தெரியவில்லை.

கூத் : இது ஒன்றும் அவருக்குப் புதுச் சேதியாக
இருக்காது.

மாற : அவர் ஆற்றலுக்கு அது சிறப்பு:
நம் கடமை என்னுவது?

கூத் : நான் முன்னின்று பேசுகிறேன்.
வருக...

என்றழைத்துப் போனார் கூத்தர்.
மன்னவன் தன் கூடத்தில் ஒற்றையில்
சதுரங்கம் ஆடியிருந்தான்!

கூத் : வேந்தே, இது என்ன விந்தை, உங்கள் விருப்
பத்துக்கு நகர்த்துவதும், வெட்டுவதும்
சதுரங்கமா?...

அர : அரசியல் யூகத்திற்கு இது ஒத்திகை,
அவள் அம்பலத்தில் ஆடிக் காட்டினாள்.

கூத் : நீங்கள் அறையில் ஆடிப் பார்க்கிறீர்கள்...
அவள் அம்பலத்தில் ஆடிக் காட்டினாள்.
இப்போது நம் காவலும் பொய் யென்று ஓடிக்
காட்டுகிறாள்.

அர : புள்ளிமான் என்னதான் ஓடினாலும் புலிக்கு
அது விருந்தாவதே இயற்கை... காலத்தின்
தீர்ப்புக்குக் காத்திருப்போம்.

மழ ; வேந்தே! இந்த நிகழ்ச்சிகள் என் திறமைக்குப்
பெரிய பழுது! மக்கள் என்ன நினைப்பார்கள்?

அர : நட்டுவக்கிழவனையும், அவன் குழுவையும்
நீயாக ஓட விடு. முன்னர் 'அவள் ஓடியதும்
உன் ஏற்பாடென்று நினைத்துக் கொள்வார்
கள்.

கூத் : வேந்தே
வள்ளுவன் சொன்ன அரசியல் அரிமா
நோக்குடைத்து.

அர : மேலே பூத்து உள்ளே கனிந்திருக்கும் நெருப்
பின் திறமும், நண்டு வளைக்குள் நெளிந்து
வரும் நாகத்தின் திறமும், இரவையே விலை
பேசும் கணிகைத் திறமும், நன்றி என்ற
சொல்லே தெரியாமல் வாழும் திறமும், இதய
மற்று உயிரோடிருக்கும் திறமும் அரசியல்
என்றவர்களும் உண்டு.

கூத் : இந்த மண்ணுக்குப் புறம்பான பண்பு அவை!

அர ; மாட்டுக்குச் சூட்டுக்கோல் போடும் மருத்து
வத்தில் இரக்கம் என்ற பேச்சுக்கு இடம்
எங்கே?

கூத் : இலக்கணத்தில் நான் சிலம்பெடுத்து விளை
யாடுவேன், தலை வழுக்கையாகும். இந்த அரசி
யலுக்கு நான் ஆளல்ல, விடுங்கள்.
எனக் கூத்தர் அரசரிடம் தோற்றார்.

## 20

பள்ளிப் படையில் பைரவி தனித்திருந்தாள். அவள் நெஞ்சத்தில் ஆயிரம் ஆயிரம் நினைவின் அலைகள்! தன் வஞ்சத்தை தீர்த்து வைக்க வந்தொரு தெய்வம் கழுகு மலைக் கள்ளனென்ற நம்பிக்கையை வளர்த்திருந்தாள். அவன் வந்து நின்றான். அவள் செவ்விழிதல் ஒரு மாதுளை முத்துத் தெரித்தது. இமை கனத்திருந்த ஓரப் பார்வை அவனைக் கொன்றது.

கள் : சிந்தனை என்ன பெண்ணே?

பைர : சோழன் மனைக்குள் உன்னைப் போகச் சொன்ன பிழைக்கு வருந்தியிருந்தேன்.

கள் : அச்சம் பெண்களுக்கு உடன் பிறப்பு என்பதையே காட்டுகிறது இந்தப் பேச்சு.

பைர : அஞ்சுவது, அஞ்சாமை பேதமை என்ற பெருஞ் சொல் எனக்கும் பாடம் உண்டு.

கள் : சோழன் வலிமை பெரிது, காவல் அதிகம் என்ற புத்தி எப்போது வந்தது?

பை : நிறுத்து, புலியின் தோலைத்தான் உடையாகத் தரித்திருக்கிறான் சிவன்! புலியின் சித்திரத்தைத்தான் கொடியாகப் பிடித்திருக்கிறான் சோழன்; உயிர்ப்புலியுடன் விளையாடுபவள் நான்! எனக்காக நீ ஏன் இறக்க வேண்டும் என்பதற்கே அச்சப்பட்டேன்.

கள் : உறக்கத்தில் கனவு காண்பது உலகத்து இயற்கை! நீ மயக்கத்தில் கனவு காண்பவள்.

பை : சோழனுக்குக் கோட்டை பெரிது படை மிக அதிகம்.

கள் : என் ஆற்றல் அதனிலும் பெரிது; நீ கேட்ட கடகம் இதோ பார்!
எனக் கொடுத்தான்.

ஆவேசப்புயல் கூளத்தை வாரி எடுப்பது போல் எடுத்தாள். இருப்புக் குறடு நெரிப்பது போல் கடகத்தை நெளித்தாள்- பற்கள் நற நறத்தன. அவள் வேதனையின் தொடுவானத் துக்கு அப்பால்,

குலோத்துங்கனின்போர்க்களங்கள்தெரிந்தன. அவள் தந்தையிழந்த தங்கமுடி தெரிந்தது, தழலான சுடலைத் தீ கொழுந்து விட்டு எரிந்தது. கருங்கல்லெடுத்து நொறுக்கினாள்; தூள் தூளாக அள்ளி ஊதினாள்.

பைர : வீரமணிக்கடகம் இதோ தூள்: தூள்.
எனச்சிரித்தாள், தொடர்ந்து:

கள்வர் கோமானே; கழுகு மலைத் தேவனே; என் பகை முடிக்க வந்த தெய்வம் நீ...

கள் : பகை என்ன சொல்?
பழி என்ன கூறு.?

பை : நான் ஆடுகளமகளல்ல: தலைக்காட்டு நங்கை! தார் வேந்தன் கங்கனுக்கு ஆவி நிகர் மகள்: பகை முடிக்க வந்த கொல்லிப் பாவை! பழி

பொறுத்து வந்த பழயனூர் நீலிக்கு நிகர் எங்கள் தங்க முடி எடுத்து வந்த சோழன் உயிர் குடிக்க வந்தேன்.

காவிரிக்கு சுங்கம் விதித்த அவன் சிரத்தை எங்கள் காளிக்குச் சூலத்தில் நிறுத்த வந்தேன். எங்கள் குல முடியை நீ மீட்டுத் தர வேண்டும். உன் முடிக்கு நான் முடியாவேன். உன் குடி வளர்க்கும் கொடியாவேன்:

[illegible] நின்றிருந்த ஒரு வேலில் தன் பெரு விரலைக் கீறித்து, வழிந்த ரத்தத்தால் அவன் நெற்றியில் திலகமிட்டாள்.

[illegible] : சோழன் எடுத்த எங்கள் முடியும், அவனு யிரும் எனக்குத் தேவை! தந்தேன் என்ற சத்தியத்தை எனக்குத்தா!

[illegible] நீட்டினுள். கொற்றவை போல் நின்று கொதித்த அவளுக்கு முன் ஒரு வீர பக்தன் ஆனுன் இருளப்பன்.

[illegible] ! எங்கள் மகளே, உங்கள் முடி மட்டுமல்ல. சோழன் திருமுடி என்ன சிவன் சடைமுடி யானாலும் பறித்து வருவேன்.
சோழன் உயிர் பறிக்கின்ற வேலையை உனக்கே வைத்துக் கொள். அப்போதுதான் உன் வஞ்சம் தீரும். நான் துணை நிற்பேன்.
எனக் கை போட்டுக் கொடுத்தான் மெய் மறந்தான். அவளுடல் அவன் மேற்சாய்ந்தது. உள்ளம் வென்றும் பதத்தில் வான் கடந்தான்...

## 21

தலை நகரில் சிறைக் கதவு திறந்தது, நட்டுவக் கிழவன் தன் குழுவுடன் விடுபட்டான்.

## 22

பள்ளிப் படையில் தலைக்காட்டு நங்கை இனந் தெரியாத பெருமிதத்தோடிருந்தாள். இருளப் பன் அவள் இதயத்தின் ஆழத்தை எண்ணிப் பார்த்திருந்தான்.

கள் : இளவரசி, ஒரு தகவல் சொல்ல மறந்தேன்.

பை : நீ ஒன்று சொல்ல மறந்தாய். நான் இந்த உலகத்தையே மறந்தேன்.

கள் : நட்டுவக்கிழவனை நேற்று விட்டு விட்டார்கள்.

பை : ஏன் அழைத்து வரவில்லை?

கள் : அந்த விடுதலை நமக்கு விரித்த வலை.

பை : கண்ணகி தன் காற்சிலம்பைத்தான் உடைத்தாள். நான் சோழன் கடகத்தையே உடைத்திருக்கிறேன்.

கள் : அப்படியென்றால், கொடியறுத்த கள்ளனும், முடியெடுக்க வந்த மோகினியும், ஒன்றாகி

இருக்கின்றேம் எனத் தகவல் கொடுப்போமா!

மை : அந்த வெற்றித் திருநாள் வரத்தான் போகிறது. அதற்காக நட்டுவக்கிழவனை நுளம்பபாடி— ஹேமவதிக்கு அனுப்ப வேண்டும்.

கிள் : அங்கே நுளம்பன் இல்லை என்று கேள்வி!

மை : அவன் இவ்வுலகத்திலேயே இல்லை— என்னோடு இருப்பதாக எண்ணியிருக்கிறார்கள்.

கிள் : என்ன ஆனான்?

மை : மண்ணோடு மண் ஆனான்

கிள் : இந்த சாகசத்துக்கு முன்னால் சதுரங்க சேனை என்ன செய்யும்?

மை : வெறும் புகழ்ச்சிக்கு நான் தோற்பதில்லை

கிள் : ஆவேச உணர்ச்சிக்கு......

மை : இது அன்பின் வெறி, பைந்தமிழ்த் தேர்ப்பாகனே. நீ என் சிந்தனைக்கு முன் செல்!

கிள் : முடி கொண்ட சோழபுரத்துக்கே செல்வோமா?

மை : கழைக் கூத்தியாகவோ?

கிள் : தமிழ்க் கூத்தனிடம்

மை : நான் யார்?

கிள் : நல்லூர் பவநந்திக்கு மகள்; நான் உனக்குத் துணை வந்த சிவஞானக் கிழவன்.

மை : இது நல்ல சூழ்ச்சி எனத் தீர்மானித்தாள்.

கூத்தர் மாளிகையில் ஏடும் எழுத்தாணியு மாக இருந்தார். கிளியூர் மலையபெருமாள் ஓலையுடன் வந்தான்.

மலை : பெருந்தகையே, விருந்து வந்திருக்கிறது. மன்னருக்குத் திருமுகம் கொண்டு வந்தனர். அவரில்லை— இங்கு அழைத்து வந்தேன். ஓலை தந்தான்.

கூத் : மகிழ்ச்சி.

சிவஞானக்கிழவன்: வணக்கம்... குவாளல புரத்தி லிருந்து வருகிறோம்.

கூத் : உங்கள் அரசர் நன்மைக்கு ஆண்டவனை வேண்டுகிறேன்.

கிழ : நன்றி! அமராபரணன் சீயகங்கனுக்கு நான் சித்தாந்த போதகன், சிவஞானக் கிழவன் என்பார் 'என்னை.' இவள் நன்னூல் பவநந் திக்கு மகள். எழுத்தலங்காரம் என்பது இவள் பெயர்.

கூத் : வாழ்க.

கிழ : உங்கள் பரணி கேட்க வந்திருக்கிறோம்.

கூத் : இன்னும் முற்றுப் பெறவில்லை.

கிழ : நீங்கள் முடிக்கும் வரை உடனிருந்து சுவைத் திருப்போம்.

[illegible] : [illegible] உமையும் சேர்ந்து வந்து கேட்ட [illegible] சிந்தை குளிர்கின்றேன். மலைய பெருமாள் இது தமிழுக்கு வந்த விருந்தென்று [illegible] வந்ததும் சொல்லிவிடு

[illegible] வணக்கம்.

[illegible] சிறப்புறும் எழுத்து அலங்காரமும் [illegible] விருந்தினர் விடுதியில் தங்கினர்.

## 24

[illegible] புறநகரில் பைரவி குடியிருந்த வீட்டில் முன் வாசல், பின் வாசல் திறந்திருந்தன. நடுவே கிழவன் கை, பாக்கையிடித்துக் கொண்டிருந்தது. பார்வை யாரையோ எதிர்பார்த்திருந்தது. அவன் பணியாளொருவன் [illegible] கேட்டான்.

பணி : [illegible]... இப்படி இடித்துக் கொண்டே இருந்தால்... உலைச் சோறு இலைக்கு வந்து விட்டது.

கிழ : சோற்றை இலைக்குக் கொண்டு வந்து விட்டாய். என் சொத்து...?

பணி : [illegible] மலைக்கள்ளன் எந்தக் குகையில் கொண்டு வைத்திருக்கிறானோ?

கிழ : அவன் வருகைக்காகத்தான் நான் வாசல் திறந்து வைத்திருக்கிறேன்.

பணி : வழியெல்லாம் சோழன் வாளை உருவி வைத்திருப்பான்.

கிழ : அவன்— விழியிற் புகுந்து வரும் வீர மறவன்; சோழற் கொடியறுத்த சூரன்; கழுகு மலைக் கள்ளன் நம் கள்வர் கோமான்.

பணி : இன்னும் ஏன் நம்மைச் சோதித்துக் கொண் டிருக்கிறான்?

கிழ : என்ன சூழ்நிலையோ! இல்லை தலைக்காட்டு நங்கை யிட்ட கட்டளை வேறு என்னவோ!

பணி : பின் சிந்தனையெதற்கு? ஆறுகின்ற சோற்றைப் அள்ளி பருக வாருங்கள்.

கிழ : ஆறை நகரையே அள்ளி விழுங்க வந்த வனடா?

எனச் சொல்லிப் பின் போனான்.

## 25

அரச மாளிகையில் கூத்தர்.

கூத் : ஏதாவது தடம் தெரிந்ததா?

அர: அவள் சரித்திரமே தெரிந்து விட்டது, தலைக் காட்டு நங்கை அவள் கங்கன் உயிருக்கு விலை கேட்டு வந்திருக்கிறாள்.

கூத் : அப்பன் ஆற்று நீருக்கு விலை கேட்டான். மகள் காற்றோடு கலந்த மூச்சுக்கு விலை கேட்டு வந்தாளா?

அர : குலோத்துங்கன் உயிரையே விலையாகக் குறித்திருக்கிறாள்.

கூத் : இதைக் கேட்டு, சிரிப்புக் கூட வரவில்லை. எனக்குச் சீற்றம் எப்படி பிறக்கும்?

அர : நம் கொடியறுத்த கள்ளன் அவள் கையிலிருக்கிறான்.

கூத் : அவன் ஆற்றலும் வீரமும் இருட்டிலும் மறைவிலுந்தானே! சபை நடுவே வரும் திறம் அவனுக்கேது;

அர : நான் வணங்கும் தெய்வம், தங்களுக்கே அவளுடன் உறவென்ற பேச்சு...

கூத் : இது என் நெஞ்சிலிட்ட நெருப்பு!

அர : உங்கட்கு பெயரிலே கூத்திருக்கிறது, அவள் கலையிலே கூத்திருக்கிறது என்பதற்குச் சொன்னேன்.

கூத் : இந்த மண்ணுக்குப் பகை என்றால் என் ரத்த அணுக்களெல்லாம் கொதித்து எழும். விளையாட்டுக்கும் இனி அப்படிப் பேச வேண்டாம்.

அர : மன்னிக்கவும், சிவஞானக் கிழவன் எப்படி இருக்கிறார்?

கூத் : நம் தமிழ் ஞானத்தைச் சுமக்கத் தன் தலைக்கு வலுவில்லாமலிருக்கிறார்.

அர : எழுத்தலங்காரம்?

கூத் : என் பாட்டுக்குப் படி எடுக்கிறாள்,

அர : நன்று — தலைக்காட்டுக்குப் பங்காளியான அமராபரணன் தமிழ்ப் பாட்டுக்கு ஆள் விடுத்திருக்கிறான்.

என வேந்தன் இளநகை புரிந்தான்.

கூத் : அரசே, உங்கள் ஒவ்வொரு சிரிப்புக்கும் பொருளிருக்கும், இதிலென்ன அரசியலோ! யானறியேன் பராபரமே!

என பதிலுக்குச் சிரித்தார்.

## 26

கூத்தர் மனையில்-எழுத்தலங்காரம் பரணிஏடுகளைப் படி எடுத்திருந்தாள். இடையிடையே தனக்காக சில ஏடுகள் எழுதினாள். அவையாவன.

ஏடு :—கலிங்கத்துக் காவலனே! என் கண்ணீர் மேல் ஆணை வைத்த ஆர்வலனே! ஆடி பதினெட்டு-அன்னை காவிரி பொங்கி வரும் பெருநாள்!

அன்று-முக்கொம்பில் காவிரியின் வடகால், கொள்ளிடத்துத் தலைவாசல் சங்கிலிகள் அறுக்கப்படும். மதகுகள் அடைக்கப்படும்! காவிரியின் புரட்சி கல்லணையை உடைக்கும். அதனால் பொன்னிக் கரை புனல் நாட்டு 1800 ஊரும் ஆற்றோடு! சோழனின் ஆற்றல் வண்டல் சேற்றோடு!

அந்த வெற்றிக்கு மறு விருந்தாக நுளம்பனின் மேலைச் சீமையை உனக்குச் சொந்தமாக்கு கிறேன்.

ஒல்லையூர் சென்று விட்ட நெல்லைப் பாண்டியரே!. மதுரைக்கு நீரே உரியவர்— போருக்கு இதுவே காலம்... விடுதலைக்கு எழுவீர்... வெற்றி மகள் தேடிவருவாள். இப்படிக்குத் தலைக்காட்டு நங்கை! நாச்சியார் கன்னர தேவி எனப்பல ஓலைகளை எழுதி முடித்தாள். தனித்துப் படித்துச் சரி பார்த்துக் காதணிச் சுருளாக்கி வைத்தாள்

## 27

அந்தி வந்தது. மந்தாரை— குருக்கத்தி மலரெடுத்து மாலை தொடுத்திருந்தாள். எழுதலங்காரம் ஏடும் எழுத்தாணியுமாக சிவஞானக் கிழம்வந்தது.

எழு : பரணிக்கு உரை எழுதி வருகின்றீரா?

சிவ : தரணி முழுதுடையான். உலகளந் குலோத்துங்கன் புகழுக்குப் பாட்டெழுதி பார்த்தேன். கேள்.

எழு : அறம் வைத்த சரமகவி என்றால் படிக்க. மற்றபடி பகைவன் புகழ் கேட்க எனக்கு செவியில்லை

சிவ : எல்லாப் புகழ்ச்சியும் நம் சதுரங்கத்துக் அடிக்கோடு கட்டத்தான்.

ஆறை நகரில் அடித்த மணல் மேட்டோடு அழுது நிற்பான் குலோத்துங்கன்!! அதுவே நேரம். நும்பாட்டன் அனங்கவர்மனுக்கு நேர்ந்த அவமானத்தைத் துடைக்க, கரிக்கொடி பறக்க கலிங்கத்திலேபுரட்சி நடத்து.

வாரங்கல் அரசே! மேலைக்கங்கன் மகளுக்கு நீர் தந்த வாக்கை நிறைவேற்ற நாள் வந்து விட்டது. காவிரியில் வெள்ளப்புரட்சி. கலிங்கத்தில் விடுதலைப்புரட்சி நடக்கின்ற நேரம்- நுங்கள் படை ராஜமகேந்திரத்து இடைகழி நாட்டின் மேல் நடக்கட்டும் ··· அந்த வீரச் செலவுக்கு நுளம்பனின் கீழைச்சீமை தும்கூர் கூற்றம் நும்மைச் சேரும். குவளலாபுரத்து அமராபரணரே சீய கங்கன்- என்ற நும் பெயர் சிறக்க இது நேரம். பொன்னை பாய்ப்பு! சோழனின் நீர் வள நாடு நீருள் மூழ்கி ருக்கும்... நீவீர் காளத்தி பற்றி காஞ்சி மேல் ருக. இந்த நன்றிக்குக் கொப்பத்து பொன் யலுக்கு மேலை கங்கர்கள் உரிமை கோருவதில்லை ன்ற உறுதி தருகிறேன்.

கல்யாணபுரத்து ஹொய்சள குமார விஷ்ணு க்கு நலம் வேண்டுகிறேன். உன் தங்கைக்குத் ங்கையான தலைகாட்டு நங்கைக்கு நீ செய்யும் ர்:

தலைக் காட்டில் செம்பியன் மழவராயன் றுத்தி வந்த சேனையைச் சவக் காட்டிற்கு அனுப் க்கொடு!

எழு : கோடு கட்டுவதோ— கூடு விட்டுக்கூடு பாய்வதோ கொண்டு வரவேண்டுவது தலைக்காட்டு மகுடம்;

சிவ : நீ குறிக்காத விரைவில் கிடைக்கும்.

எழு : ஆடி பதினெட்டுக்கு நாள் வைத்திருக்கிறேன்.

சிவ : அதற்கு முன் பட்டீச்சுரத்து முத்துப் பந்தலில் உனக்கு நான் முடி சூட்டிப் பார்ப்பேன். இது கேட்டுப் பூரித்தாள். அதுவேளை ஒரு தோழி பூசைத்தட்டுடன் வந்தாள். புறப்பட்டனர் பட்டீச்சுரத்துக்கு.

## 28

வெறித்த நோக்குடன் வேங்கை மண்டபத்தில் காத்திருந்தான் நட்டுவக்கிழவன்—கூத்தர்வீட்டு ரதத்தில் வந்த நங்கையை இனம் கண்டு கொண்டான். அவள் காணாதவள் போல் மின் வெட்டு வேகத்தில் கோயிலுக்கு வரக் குறிப்பு காட்டிப் போனாள். புலவர் வீட்டு விருந்து என்பதால் பவனந்தி மகளுக்குத் தனி வழிபாடு நடத்திக் கொடுத்தனர். கொற்றவைத் திரு முன்பில் மெய்மறந்து உயிர்கலந்து நின்றாள். கூட்டத்தின் பெருக்கில் அவள் குறிப்புக்கு எதிர்பார்த்திருந்தான் கிழவன். அவள் மடியில் மறைத்திருந்த ஓலைச்சுருளை நழுவ விட்டு நடந்தாள் அவள். எடுத்து மறைந்தான் கிழவன்!

அவன் கால்கள் சிறகுகளாயின. விடுதிக்கு விரைந்தான். விளக்கின் சுடரைத் தூண்டினான் ஓலைச்சுருள் பிரித்தான். அதில் முதலேடு அவனுக்கிருந்தது.

ஏட்டில் இருந்தவை: காளியின் வீரக்கழல் போற்றும்-தாத்தனே...பாடு தீர்ந்தது-இருளப்பன் எனக்காகத் தன்னுயிரும் தருவான்; மகுடம் எடுக்கும் பொறுப்பு அவனுக்கிட்டிருக்கிறேன். மற்றபடி தென்னோடு என்னோடாக ஓலை கொண்டு செல்லும் வேலை உனக்கு,

எனப் படித்ததையே உணர்ச்சிப் பெருக்கோடு படித்துப் பார்த்தான். நெஞ்சு நிமிர்ந்தது. அவன் எதிர்பாராதபடிக்கு இருளப்பன் வந்து நின்றான்.

கள்: என்ன கிழவா...இன்னும் இருக்கின்றாய்?

கிழ: எமன், என்னைக் கேட்காமல் நாள் வைப்பதற்கில்லை அதனால் இருக்கிறேன்.

கள்: செம்பியன் மழவராயன் ஆள் வைத்து விட்டான். சிறிது நேரத்தில் இந்த விடுதி வளைக்கப்படும்...

கிழ: கழுகுமலை இருளப்பன், வந்த பிறகு எனக்குக் கவலை ஏன்?

கள்: என் குதிரைக்கு உன்னையும் சுமக்க வலுவுண்டு, புறப்படு.

என்றான் இருளப்பன். புறப்பட்டனர் அரசிலாற்று நாணற்காட்டில் மறைந்து புறம்பியம் பள்ளிப் படைக்கு வந்து சேர்ந்தனர்.

## 30

எரிகள்ளி வெளிச்சத்தில் பூசாரி குளிர் காய்ந்திருந்தான்.

பூசாரி: வணக்கம், இருளப்பனே, வருக. இவர் யார்? நான் எதிர்பாராத விருந்தாளி.

கள்: உன் விருந்தை எதிர்பார்த்து வந்திருப்பவர் நாமேன அவர்.

பூசா: வெண் பொங்கலுண்டு. பசும்பாலும் தருகிறேன்.

கள்: பசும்பால் என்றால் ஒரு நோப்பு காணாது.

இள: குளிக்கவா?...

கள்: நீந்த...

இள: பேசியே கொல்லுவீர்கள் போலிருக்கிறது.

பூசா: இதோ ஒரு நொடியில் கோழிக்கறியுடன் வருகிறேன்.

கள்: கோழி கூவுவதற்குள் நான் அவரை அனுப்ப வேண்டும்.

எனச் சிரித்தபடி,

கள்: தாத்தனே; என்னுல் பொறுத்திருக்க முடியாது, பசி.

கிழ: நீர் என்ன கண்ணனு? மண்ணைத் தின்ன!

கள்: கண் மூன்றுடையவன் எனக்கு அண்ணல்; அவனுக்கினிய வில்வம் இருக்கிறது.

என அங்கிருந்த வில்வத் தழைகளை உருவித் தின்ருன். நட்டுவக்கிழவனுக்கு அது விந்தையாக இருந்தது.

## 31

பூசாரி தலை வாழை இலையுடன் வந்தான். பரிமாறிஞன். உண்டனர்.
சுவைப்பெருக்கத்தில் விலாப்புடைத்தது உறக்கத்தின் பெருக்கத்தில் விழிகள் ஓய்ந்தன.
கிழவன் இருந்தபடி தூங்கிஞன். இருளப்பன் சிரித்தபடி.

கள்: வில்வமே, நீ வாழ்க ! என்ருன்.

கள்: குருத்தோலையும், எழுத்தாணியும் கொண்டு வா !

எனப் பூசாரியைப் பணித்தான்.
கிழவனின் இடையைத் தடவி மறைந்திருந்த ஓலைச்சுருள்களை எடுத்தான். வரைந்திருந்த விவரங்கள் அவனைத் துணுக்குற வைத்தன. தனக்குத் தானே சிரித்துக் கொண்டு சிந்தித்தான்.

கள்; ஆடிப் பதினெட்டுக்கு நீ நாள் வைத்தால் நான் ஆனி முதலுக்கே முந்திக் கொள்கிறேன் என ஏடுதிருத்தி எழுதினான்.

ஏடு: கலிங்கத்துக் காவலனே, நம் கவலை தீரக்காலம் வந்தது. ஆனி முதல் நாள் நம் அவலம் தீரும் திருநாள். ஆறை நகர மக்கள் சத்தி முற்றத்திருந்து பட்டீச்சிரத்துக்கு முத்துப் பந்தல். எடுக்கின்ற மோகத்திலிருப்பார்கள். திருவிழாக் கூட்டத்துக்குத் திசை தெரியாது. இந்த ஆராவாரத்தில் அன்றொரு நாள் கொடியறுத்த வீரன் எங்கள் முடி எடுத்து வருவான். குலோத்துங்கன் சரித்திரத்தை முடிக்க நீவருக. உன் பாட்டன் அனங்கவர்மனுக்கு நேர்ந்த அவமானத்தை துடைக்க நாள் வந்து விட்டது. வாளெடுத்த வீரர் ஆயிரவர் அப்பரின் தொண்டர் போல் அவதாரமெடுத்து உழவாரப் படையுடன் தேவாரம் பாடி வரட்டும். மற்றபடி நம் வெற்றிக்குத் திருநாள் நடத்துகின்ற பொறுப்பில் நானிருக்கிறேன்.

வாரங்கல் அரசே-! வடபுலத்தில் மேலாதிக்கம் செலுத்து கின்ற சோழர்களுக்கு முற்றுப் புள்ளி வைக்க வருக! அவர்கள் முத்துப் பந்தலெடுக்கின்ற நேரம்- சோழ மாளிகையில் நம்

வெற்றிக் கொடி பறக்க விடலாம்.
சூழ்ச்சிக்குப் பெரும் படை எதற்கு?...ஆயிரம் பேர் அப்பரின் தொண்டராக வரட்டும்.

மற்றப்படிநம் முன்னை பேச்சுப்படி நுளம்பாடி, கீழைச் சீலம், தும்கூர் பகுதி உமக்கே உரித்து.

குவளாபுரத்து அமராபரணரே! போர்த்திறத் திலும் புத்தியின் திறமே பெரிது என்பது புரிய ஒரு பொன்னான வாய்ப்பு. காளத்தியும் காஞ்சியும் உனக்காக. அங்கெல்லாம் நீர் கல்வெட்டும் மெய்க் கீர்த்தியும் கொள்ள—ஆனி முதல் நாள் ஆறை நகர்க்கு நின் மெய்க்காவலர் ஆயிரவருடன் வருக. நாவிலே தேவாரம் கையிலே உழவாரம் நாடெல் லாம் அப்பரென போற்றுங்கோலம்! நன்கு விளங் கட்டும்: வெற்றியின் சாதனைக்கு அடிகோலி விட் டேன். அந்த **வீர** சாகசத்தின் முன்அறிவிப்பே கொடியறுப்பு. உங்கள் நன்றிக்கடனுக்கு என் பங்கு கொப்பத்துத் தங்கச் சுரங்கத்தில் பங்கு கோர மாட்டேன்.

ஹொய்சள குமார விஷ்ணுவுக்கு என்வாழ்த்து. ஆறைநகர் அழிவைக்காண ஆயிரம் மழவரை அப் பராக்கி அழைத்து வருக. சோழன் மகள்—அம் மங்கையை உனக்குத் துணையாகப் பிடித்து வைத் திருக்கிறேன்.

நுளம்பனின் மேலைச் சீமையைச் சீராகத் தரு வேன்:

என் சிற்றன்னை மகனே! தலைக்காட்டு முடி மீட்கும் திருநாள்.

ஆனி முதல் நாள். தருக்கோடு வருக; வெற்றிச் செருக்கோடு மீள்வோம்.

ஒல்லையூர் சென்று விட்ட நெல்லை பாண்டியரே...இனி தில்லை வரை உமக்காகும் திருநாள் ஆனி முதல் நாள் உங்கள் 'அப்பர்கள்' உழவாரப் படையுடன் ஆறை நகர்க்கு வரட்டும்.

நாமர்க்கும் குடியல்லோம் என்ற தேவாரம் தெருவெல்லாம் முழங்கட்டும்.

சோழன் நம் பேரவையில் சிறையாவான்-மற்றபடிஅவர் சரித்திரத்தை முடித்துவைப்போம்.

இப்படிக்குத் தலைக்காட்டு நங்கை நாச்சியார் கன்னரதேவி.

என எழுதி முடித்து-முன்னைச் சுருள் போல் மடித்து கிழவனின் மடியில் எடுத்த இடத்தில் வைத்து விட்டான். அவள் எழுத்தை மறுபடியும் படித்து விட்டு எரிந்து கொண்டிருந்த சுள்ளியோடு எரித்து விட்டான். கோழி கூவிற்று-குறிப்புணர்த்தினன். பூசாரி கிழவனை. உசுப்பினன். எழுந்த கிழவன் இருளப்பன் உறங்கிக்கொண்டிருக்கக் கண்டான்.

கிழ; நல்ல உறக்கம். கலைக்க வேண்டாம். நான் விடை பெறுகிறேன். எழுந்ததும் இருளப்பனுக்குச்சொல்லிவிடு.

எனப் புறப்பட்டான் கிழவன். கள்ளப்பார்வையும் எள்ளல் சிரிப்பும் இருளப்பன் முகத்தில் தேங்கியது.

ஆனி முதல் நாள் ஆறை நகர்க்கு வந்தது! தேர் நடத்தும் வீதி எல்லாம் தாரெடுத்த வாழைகள்... போரெடுத்த வீரர் போல் அணி வகுத்து நின்றன. திண்ணை வாரமெல்லாம் தென்னங்குலை வரிசை. பாக்கும் நுங்கும் பந்தலிட்டு நிழல் செய்தன!

குருத்தோலைப் பின்னலும், கொத்துமஞ்சளும், குலுங்கும் கனி வகையின் மாலைகளும் பழையாறை நகரை ஒரு பழச்சோலையாக்கிப் பார்த்தன.

பழுத்த விளங்கனியைப்பையல்கள் பந்துருட்டி ஆட உடைத்தெழுந்த மணம் ஊரே கமகமத்தது.

செடியிலும் கொடியிலும் சிரித்தது போது மென்று மங்கையர் சடையிலும், மழலை முடியிலும் பூத்துக் குலுங்கின மலர்க்குலம்.

ஒரு புது மணப்பெண்ணைப் போல்பழையாறை விழாக்கோலம் கொண்டது.

தென் பொதிகைத் தேனில் குளித்து, தென்ன வன் வைகைத் தமிழில் திளைத்து, செந்தாழை மட லில் சிலிர்த்து, செங்கரும்பின் சோலையிலே திரிந்து சேயிழையார் நடையிலே பொலிந்து, யாழிலே குழைந்து குழலிலே இழைந்து-கல்லா மழலையிலே கனிந்து எழுந்த தென்றல் இசை அலைகளாய் ஆறை நகரை வலம் வந்தது.

திரும்பிய திசையெல்லாம் சிவ சிவ என்ற முழுக்கு முனைப்பு: நமச்சிவாய வாழ்க; நாதன் தாள் வாழ்க; என்ற குரல் எடுப்பு;

நாமார்க்கும் குடியல்லோம் என்ற பரபரப்பு; ஆக ஆறை நகர் அன்று சிவமயமாய் ஆகியிருந்தது.

சத்தி முற்றத்து தலைவாசலிலிருந்து பட்டீச்சுரத்துக்கு. ஆளுடை பிள்ளை' எழுந்தருளினார். அந்த பசுங்குதலை மழலைச் செல்வத்துக்கு நிழல் செய்ய சிவன் விடுத்த விருதாக முத்துப் பந்தல் எடுத்தனர். அந்த தெய்வத் திருவிழாப் பெருக்கில் சிவஞானக்கிழவனும் பவனந்தி மகளும் கலந்து நடந்தனர். ஆயிரம் ஆயிரம் அப்பரின் தொண்டர்கள் அணி அணியாக சாரி வந்தனர். ஆக அங்கே பக்தியும், யுகதியும் பவனி வர அரசன் திரு முன்னிலையில் தக்கயாகப் பரணிக்கு அரங்கேற்றம் என்ற அறிவிப்பு முரசொலித்தது

சோழ மாளிகையில் கூத்தர் பேரவை கூட்டினார். அப்பரின் தொண்டர்கள் அங்கே முதலிடம் பிடித்தனர்.

அவர்களைத் தள்ளி நெருக்கிக் கொண்டு புலவர்கள் புகுந்தனர்.

சைவம் வாழ்க, தமிழ்வாழ்க என்றஒலியலைகள் மோதின.

ஆங்கே கூத்தர் தோன்றினர். கையமர்த்தினர். அவையில் ஒரு பேர் அமைதி!

கூத்தர் : சிவஞானச் செல்வங்களே! தமிழ் ஞானச் செம்மல்களே! சோழர் பேரவை உங்களை வரவேற்கின்றது. வாழ்த்துகிறது! அப்பர் பெருமானின் ஒப்பரிய கோலம் தாங்கி வந்தஉங்கள் பெருமை அளப்பரிது. பாராட்டுகிறேன். நகரெங்கும் நாமார்க்கும் குடியல்லோம் என்ற வாசகத்தை வாய் நிறையச் சொன்னீர்கள். நமனுக்கு ஒரு நாள் குடியாக வேண்டும் என்பதை மறந்தீரா? சிவனுக்கினிய வேஷத்தைத் தரித்த செம்மல்களே! சிவப்புரத்துக்கு நீங்கள் செல்ல வழி சொல்லும் என் பரணிக்கு வேளை வந்து விட்டது! அதோ! தக்கன் வேள்விக்கு வந்த வீரபத்திரன் போல் வருகிறார்- சிவஞானக் கிழவன். அதோ- உமையவள் பவனந்தி மகளாகத் தமிழ் கேட்க வந்து விட்டாள். மற்றவை மேல் நடக்க மன்னன் வருவார்!

அப்போது கிளியூர் மலையபெருமான் பதட்டத்துடன் வந்தான்.

மலை : கூத்தர் பெருமானே! நம் கொற்றவன் எங்கே?

கூத்: அவர் வருகைக்கே வழிபார்த்திருக்கிறோம்

மலை: பழி நேர்ந்து விட்டது. பழையாறை இருப்பறைக்குள் கழுகுமலை இருளப்பன் கை வரிசை

காட்டி விட்டான். தலைக்காட்டுத் தங்க மகுடம் பறி போயிற்று!

கூத்: என்ன?

அது கேட்டு அவை அதிர்ந்தது. தினவோடு அப்பரின் தொண்டர்கள் நிமிர்ந்தனர். பவனந்தி மகளுக்குப் பரவசம்! சிரித்து விட்டாள்.

கூத் : மகளே!

பவனந்தி மகள்; கூத்தரே—உமையவள் ஒரு கோழை! நெருப்பிலே விழுந்தாள். நான் வேதனை வெறியிலே சிரித்து விட்டேன், வெட்கம்! இருளப்பன். அன்று பறந்த கொடியறுத்தான். இன்று இருந்த முடி எடுத்தான். எதற்குக்கு நீங்களெல்லாம் இருக்கின்றீர்.

மழ: உணர்ச்சி மிக்க கேள்வி. நாங்கள் உயிரையே விலையாகத் தர வேண்டிய சூழ்நிலை...

எனச் சொல்லிக் கொண்டே மழவராயன் வந்தான்

கூத்: மழவராயா?

மழ: மலையபெருமாள் சொன்னது உண்மையிலும் உண்மை. மற்றபடி நானும் ஒரு சேதி கொண்டு வந்திருக்கிறேன். பொன் விளையும் நிலத்து பூபதி குவளலாபுரத்து-அமராபரணன் ஆசை மறந்து அரசு துறந்து நாடு கடந்து துறவியாகி விட்டார்.

கூத்: எல்லாம் சிவன் செயல்.

மழ; அதிலும்-ஒரு [அப்பரின் தொண்டராக- இந்த அவைக்கே வந்திருக்கிறார்.

அடிகளே வருக! அமராபரணத் தவச் சுடரே! வருக!

என அஞ்சலித்து—அவை நடுவே அவரை இழுத்து நிறுத்தினான். காவலர் வளைத்து நின்றனர்.

கூத்: சித்தாந்த போதகரே! நீர் தந்த சிவஞானம் பழுத்து விட்டது பாரீர்.

என நகைந்தார். அப்போது குமாரதேவன் வந்தான்.

குமா: கூத்தர் பெருமானுக்குக் கோடி வணக்கம்!

கூத்: குமார தேவா!—நீ என்ன கொண்டு வந்தாய்?

குமா: இது நேரம்: வாரங்கல் அரசன் ஊரில் இல்லை. அங்கே நுளம்பன் படையோடு நுழைந்து விட்டான்! கோட்டை சரிந்தது, கொடி மரம் பற்றி எரிந்தது.

வார; ஆ! இது என்ன கதை. நடக்க முடியாத பேச்சு...

மழ: போடக் கூடாத வேஷத்தை நீர் போட்டு வந்திருக்கும் போது இது ஏன் நடக்க முடியாது...வேந்தர் பெருந்தகையே...உங்கள் வேஷம்கலைந்து விட்டது. எங்கள் கம்பருக்கு நீர் நண்பர் என்பதால் தமிழுக்கு நல்ல அன்பர். வருக! வருக!!

என- கைலாகு கொடுத்து அழைப்பது போல் - அவனை நடுவே இழுத்து நிறுத்தினுன். அப்போது சிற்றம் பலமுடையதேவன் சீற்றத்துடன் வந்தான்.

சிற்: பேரவைக்த வணக்கம், பெருந்தகையே, வேந்தர் ஆணை முடித்து வந்திருக்கிறேன். அரசியல் சதிகாரர் ஐயாயிரவரை அடைக்க இடம் கேட்டார். ஐம்பதினுயிர வரைப் புதைக்கக காடு திருத்தி ஆயிற்று.

கந்: ஆறை நகருக்குள் சதிகாரரா ?

சிற் : ஆம்...இதோ - அம்பரின் கோலத்தில்.

குரல் : இது — அநீதி.

மழ : இவர்களை உயிரோடு புதைக்க— கல்லோடு கட்டி கடலிலே விட— நீற்றுக் காளவாயில் எரிக்கக்—கட்டளை பெற்றிருக்கிறேன்.

அப்பரின் கோலத்திருந்தவர்கள் - பதைத்தனர். மழவாரப் படை உருவிய வாளாயிற்று. அப்போது மழவராயன் சிரித்து-

மழ : இதோ...! உங்கள் தலைகாட்டு நங்கை! அவள் உயிருக்கு விலை—அமைதி! மற்றபடி இங்கே வாளுயர்த்தினல் அங்கே குவளலாபுரத்து கோட்டை சரியும்! ஹொய்சள அரியணையில் —இந்த குமார விஷ்ணுவுக்த பதில்,
விஷ்ணுவர்த்தனின் ஒன்று விட்ட தம்பி—
உதய குமாரன் அமர்த்தப் படுவான்!
தில்லையை விரும்பி வந்து ஒல்லையூர் பாண்டி

யர்க்கு, இனி நெல்லையும் இல்லை!
வாரங்கல் என்றொரு அரசு வரலாற்றிலிருக்காது.
கலிங்கத்தை—அசோகன் எரித்தது கதை.
எங்கள் கருணாகரன் எரித்தது காவியம்.
இன்று எரிப்பது—உங்கள் தலைக் கொள்ளி!
என நகைத்தான்.

அப்போது சிவஞானக் கிழவன் சினந்து எழுந்தார்.

சிவ: சீறும் சிறுத்தையே நிறுத்துக! கழுத மலைக் கள்ளனை நீர் கண்டிருக்க மாட்டீர்—!

மழ: கேட்டதுண்டு!
சிவஞானக் கிழவன்—
இப்போது பார்த்துக் கொள்ளும்- தலைக் காட்டில் நீர் எடுத்து வந்த கங்கர் முடி இது தானா? இந்த நங்கைக்கு நான் கொடுத்த வார்த்தை! இந்தப் பகை நடுவே—இவளுக்கு முடி சூட்டு

என அவளுக்கு முடி சூட்டினான்! அப்போது முரசு அதிர்ந்தது.

குரல்: தலைக்காட்டு நங்கை வாழ்க!

சிவ: சோழ மறவர்களே! என்ன அதிர்ச்சி! இந்த பகை நிகழ்ச்சிக்கு ஏது முரசு?... அன்று ஒரு நாள் கொடியறுத்தேன். இவளைச் சிறை எடுத்தேன். இன்று முடி கொடுத்தேன்! நான் நினைத்தால் இப்போதே இவளோடு தப்பிச் செல்லுவேன். அப்பரின் வேஷத்திலிருக்கின்ற இந்த அப்பாவிகளை!...

[illegible]: மீட்பதற்கு விலையாக என் உயிரையே தருகிறேன்.

[illegible]: இனி உனக்கென்று தனி உயிர் ஏது பெண்ணே! கழுகு மலைக் கள்ளனுடன் கலந்து விட்ட உயிர் மூச்சு நீ!

நட்டு: எங்களை நம்ப வைத்து கழுத்தறுத்த இருளப்பா! பரணிக்கு அரங்கேற்றம் என்று பறைசாற்றிப் பகைவர்களை யாகம் செய்ய நினைத்த உன்னை இந்த கங்கர்பாடி ஒற்றர் தலைவன் காங்கேயன் மன்னிக்கவே மாட்டான்

என இருளப்பனைக் குத்து வாளால் தாக்கினான் நட்டு வக்கிழவன். தடுத்துத் தேக்கினாள். கன்னர தேவன். அப்போது இருளப்பன் வேஷம் கலைந்தது. [illegible] கவசமணிந்த வேந்தன் தெரிந்தான். அவை சலனமுற்றது.

அர: தலைக்காட்டு நங்கையே.! உன் சபதத்தில் ஒரு பாதி முடித்து வைத்தேன்; மறுபாதி சோழன் உயிர்; நீ எடுத்துக் கொள்!

என வாளைக் கொடுத்தான். அவள் அவன் தாளிலிட்டுத் தலை குனிந்தாள்!

அர: பகைப் புலத்து வேந்தர்களே! கங்கர் மகள் பரணிக்கு வழி வகுத்த ஓலைதான் உங்களுக்கு விடுத்தாள்! என் சூழ்ச்சி அப்பராக அழைத்தது. அதற்கு மன்னிக்கவும். வணக்கத்திற்குரிய அப்பர் வேஷத்தில் வந்திருக்கின்ற

உங்கள் பெருமைக்கு இங்கே ஒரு மாசும் நேராது... நீங்களெல்லாம்... முத்துப் பந்தல் விழாவுக்கு அன்பர்— இவள் முடி சூட்டுக்கு நண்பர்— எனக்கினிய விருந்தினர்! இன்று முதல் இவள் உரிமை பெற்ற தலைக்காட்டுக்குத் தனியரசி!

கூத் : தமிழ் நாட்டுக்கே பேர் அரசியாக நான் வாழ்த்துகிறேன்.

பாண் : கன்னர தேவி... தென்னாடு உன்னுடாக நீ கண்ட கனவு பலித்து விட்டது. இந்த நல்லுறவுக்கு நான் பெருமைப்படுகிறேன்.

அமர : கங்கர் மகள்— எங்கள் பங்காளி வீட்டுப் பெண் அவளுக்குச் சீராகக் கொப்பத்துத் (கொல்லாபுரத்து தங்கச்) சுரங்கத்தை ஒப்படைக்கிறேன்.

வார : இது சோழ பெருந்தகையின் பண்பின் வெற்றி... தலைக்காட்டு நங்கைக்கு அன்பின் வெற்றி... இந்த மகிழ்ச்சிக்கு என் காணிக்கை. கவிச்சக்கரவர்த்தி கம்பரை சோழர் பேரவைப் புலவராகத் திருப்பித் தருகிறேன்.

கலி : ஆண்டுக்கு ஆயிரம் யானைகள்; சோழர் படைக்கு எங்கள் கலிங்கத்தின் காணிக்கை!

அர : இந்த நன்றிக்கு மகிழ்ச்சி! இந்த நிகழ்ச்சிக்கு நினைவாக அன்று விதித்த சுங்கத்தைத்தவிர்க்கி

றேன்! காவிரிக்கு மட்டுமென்ன...என் அரசில் எந்தப்பொருளுக்கும் இனி சுங்கமில்லை.

கூத் : சுங்கம் தவிர்த்த சோழன் வாழ்க!

அனைவரும் : சுங்கம் தவிர்த்த சோழன் வாழ்க!

என வாழ்த்துகின்றனர்.

சோழர் பேரரசியாகத் தலைக்காட்டு நங்கை முடி தரிக்கிருள்.

தமிழ் வாழ்க

தமிழர் தம் நலம் வாழ்க!

ஏ.கே.வேலனின்

# நாடகங்கள்

காவிரிக் கரையினிலே
மீனாட்சி நாடகத் தமிழ்
கங்கைக்கு அப்பால்

# என்னுரை

சரித்திரங்களெல்லாம் இலக்கியம் ஆவதில்லை. இலக்கியங்களை எல்லாம் சரித்திரம் என்று ஏற்பதற்கு இல்லை. ஒரு சில உருக்கமான நிகழ்ச்சிகளையும் சுவையான செய்திகளையும் வலுவான கருத்துக்களையும் மையமாக வைத்து இலக்கியம் பிறப்பதுண்டு. அப்படிப்பட்டதொரு வரலாற்றுச் சுவட்டில் ஊற்றெடுத்த இலக்கியப் பெருக்கே **கங்கைக்கு அப்பால்.**

சங்காலத்துக்கு முன்னால் செங்கோன் என்ற ஒரு தென்புலத்து வேந்தன் வடபுலத்தின் மேல்படை நடத்திச் சென்றான் என்பர். சங்ககாலத்தில், பட்டினப்பாலையின் பாட்டுடைத் தலைவன் ஆன கரிகாற் பெருவளவன் இமயத்தின் முதுகு நெளிய படை நடத்தி புலி பொறித்து வந்தான் என்பர். பாண்டியரில் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் உண்டு. சேரத்து செங்குட்டுவன் கங்கைக் களத்தில் பதினெட்டு நாழிகையில் பகை முடித்து கனக விஜயர் தலை நெறிய கண்ணகிக்கு கல்லெடுத்து வந்தான் என்பர்.

இப்படி வடக்கு நோக்கி நாம் சென்றது மட்டும் வரலாறல்ல. வடக்கிருந்து அசோகன் கலிங்கம் வந்திருக்கிறான். ஹர்ஷன் நர்மதை வரை வந்திருக்கிறான். மாலிக்காபூர் மதுரைவரை வந்திருக்கிறான். ஔரங்கசீப் அகில இந்தியாவையும் ஒரு குடைக்கீழ் கொண்டு வர துடித்திருக்கிறான். அவன் துடிப்பில் விழுந்த துண்டுகளே தென்னாட்டு நவாப்புகள். இப்படிப்பட்ட போர்ச் செலவுகள் ஒன்றில் காவிரியும் கங்கையும் மோதிக் கொண்டிருக்கிறது. அந்த சித்தரிப்பே இந்த **கங்கைக்கு அப்பால்.**

திருச்சி மாவட்டத்தில் ஜெயங் கொண்டம் உள்வட்டத்தில் சரிந்த கோட்டையும் இடிந்த கோபரமும் பிளந்த லிங்முகமாக கங்கை கொண்ட சோழபுரம் என்றதொரு பழமையான சிற்றூரும் வானுயர்ந்த கோயிலும் இன்றும் நம் சரித்திரப் புகழுக்கு சாட்சி தந்து கொண்டிருக்கின்றன. அங்கிருந்து ஒன்றிரண்டு கல்மேற்காக தகர்ந்த கரையோடு தூர்ந்து கிடக்கும் பெரியதொரு நீர்த் தேக்கம் கடலெனப்பரந்து கிடக்கிறது. அதன்பெயர் **சோழகங்கம்** அந்த கோயிலும், கோட்டையும் ஏரியும் ஏற்பட்ட வரலாற்று விளக்கமே இந்த **கங்கைக்கு அப்பால்.**

**ஏ. கே. வேலன்**

# கங்கைக்கு அப்பால்

## 1

பனிமலையின் உச்சியிலே தமிழ் நிறுத்தி பட்டினப்பாலைக்குப் பாட்டுடைத் தலைவனாகி, காவிரிக்குக் கரை எடுத்த கரிகாலன் கொடி வழியில், விண்ணிலே புலி பறக்க தான் பெற்ற போர்ப்புண்ணிலே புகழ் பறக்க தஞ்சையைத் தலைநகராக்கினான் விஜயாலய சோழன். அங்கே வளர்ந்து வந்த வல்லமைக்கும், வரலாற்றுக்கும் எடுத்துக்காட்டாக நிமிர்ந்து நின்றது பெரிய கோயில்; அந்தக் கலையோடு வளர்ந்த காவலன் ராஜராஜன். அவன் புகழ் முடித்த பின் பொன் முடிசூடினான் ராஜேந்திரசோழன். கீழ்த்திசையில், கதிரவன் எழுகின்ற களம் காணவோ கடல் மேல் தமிழ் நிறுத்தவோ--அலைகடல் கிழிய நெடுங்கலம் செலுத்தினான். ஈழம் தமிழகமாயிற்று சாவகம் பணிந்தது. பூவகம் உரிமைப் பட்டது. இந்துச் சீனகம் திரை கொடுத்தது. ஐராவதி வெள்ளத்தில்எதிரேறி நீந்தினான். பிரம தேயக் கடாரப் பெருநகர் பிடிப்பட்டது. வெற்றித் திருமகள் அவன் உரிமைப் பெண் ஆனாள். இந்த

ஆழ்வார் அருளிய நாலாயிரங்களும்
இசைத் தமிழ் என்பார் ஏற்கின்றேன் ஆயினும்
பண்களை மறந்தார், தாளங்களைத் தேடுகின்றார்
தியாகராய, தீட்சத, சாத்திரிகள்
தென்னவன் இசைக்கு தெலுங்கில் உயிர் கொடுத்தார்
கர்நாடகமெனக் கன்னடத்தில் பெயர் கொண்டது
நாடகத் தமிழைப் பற்றி நான் என்னென்பேன்
சிலம்பு உண்டு என்று, சிலிர்த்து எழுவாருண்டு
கம்பன் பாத்திரங்கள் பேசுவது நாடகமென்பார்
சுந்தரம் பிள்ளையின் மனோன்மணியைச் சொல்வார்
நாட்டிய மகளிர் ஆடலும் நாடகமென்பார்
அரனும், அம்பலங்களில் ஆடினான் என்னே
நாடகத் தந்தை சங்கரதாசர்
இதிகாச புராணங்களிலிருந்து சில எழுதினார்
பம்மல் சம்மந்தர் மேலை நாடகங்களை
தமிழாக்கிப் பார்த்தார், "தூக்குத்தூக்கி
சதாரம், பகாவலி, அலிபாதுஷா" என்று சில
பார்சி நாடகங்களும் மேடைக்கு வந்தன
அறிஞர் அண்ணாவும், தம்பிகளும் எழுதினார்
அன்றாட நாளேடுகளாக அழிகின்ற
நாடகங்களும் அரங்கேறிப் பார்க்கின்றன
ஆயினும் விரல் விட்டு எண்ணுவதோ நாடகத்தை
தில்லை அம்பலவன் திருக்கூத்தில் இருந்து
தெருக்கூத்து வரை நாடகத் தமிழைத் தேடுகின்றேன்
நாடகத் தமிழுக்கு என் எழுத்தின் முதற்படியாக
தருகின்றேன் மீனாட்சி நாடகத் தமிழ்.

ஏகே வேலன்.

கீர்த்திகட்கெல்லாம் மெய்க்கீர்த்தி எழுக காவிரி யின்காவலன் கங்கை மேல் காதல் கொண் டான். நிலப்படை வடபுலம் நோக்கி நடந்தது.

தமிழ்ச் சிங்கங்கள் வங்கம் சேர்ந்தன. ஆங்கே இமயம் சரிந்து ஒரு நதியாக நகர்ந்து கொண்டிருந்தது. அதன் பேர் கங்கை!

சங்கரன் முடிப்பிறந்த
கங்கைப் பெண்ணே!
எங்கள் சங்கத்தமிழ்
நாட்டுக்கு உன்னைக்
கொண்டுபோக வந்தோம்.

என அள்ளி எடுப்பது போல் கங்கையின் வெள் ளத்தில் காவிரியின் வீரர்கள் துள்ளி ஆடினர்.

இன்று வங்கமென வழங்குவது அன்று லாடம். அதற்கு முன்னைப் பழம் பெயர் விராடம்! அதற்குத் தலைவன் தருமசேனன் அவன் போதி மரத்துப் புத்தன் வழி நின்ற பெருமகன். அவனரச மாளிகை ஒரு புத்தர் கோயிலெனப் பொலிந்தது. ஆங்கு போர் வந்த சேதி கேட்டு பொங்கினர்.

நாகநந்தி: இங்கே அரசில்லை இருப்பதெல்லாம் புத்த மடங்கள். வீரர்கள் பிட்சுகளாக்கி விட்டனர். என்ற எண்ணத்தில் படைகொண்டு வந்தார்கள். அவர்கள் கொடியிலே புலி கொண்டிருந்தால் நாம் போரிலே புலிகள்.

அர: நாகநந்தி! உன் வீரத்தை வரவேற்கிறேன்.

# பாயிரம்

தமிழ்ப் பெரு மகனே, தமிழ்ப் பெரு மகனே,
மூன்றுக்கு மேற்சென்று எண்ணத் தெரியாதோ
மும்மூர்த்திகளென்றாய், மூவேந்தர்களென்றாய்
முழு முதற் கடவுளுக்கு மூன்று கண் வைத்தாய்
அவன் எரித்தது முப்புறம் என்றாய்,
அவன் தேவியும் திரிபுர சுந்தரியே,
மொழியையும் முத்தமிழாக வகுத்தாய்
எழுத்திலும் மூன்று இனமே பிரித்தாய்
எழுத்து, சொல், பொருள் அதிகாரமென
உன் தொல் காப்பியமும் மூன்றுடைத்தே
திருக்குறளும் முப்பாலுக்கு அப்பாலில்லை
பெமைக்குரிய பேரிலக்கியமான சிலம்பும்
பூம்புகார் மதுரை வஞ்சிக் காண்டமே
உன்னுள் ஓடும் நாடியும் மூன்று.
கொண்டு நடத்தும் குணமும் மூன்று.
ஐம்பெருங் காப்பியத்தில் இரண்டை இழந்தது
மூன்றில் உனக்குள்ள மோகமோ அறியேன்
வள்ளுவன், இளங்கோ, கம்பனென்று
மூவரையே பாரதியும் பாராட்டிச் சொன்னான்
முத்தமிழ், முத்தமிழ் என முழங்கும் தமிழா
தொல் காப்பியத்திலிருந்து ஆத்திச்சூடி வரை
பத்துப் பாட்டு, எட்டுத்தொகை
பதினென் கீழ்க்கணக்கு காப்பிய, காவிய
இதிகாச புராணங்கள் இயற்றமிழுக்கு உண்டு
தேவாரத் திருவாசகத் திருவிசைப் பாக்களும்

## காட்சி எண். 1

### மதுரை ரத வீதி

மதுரா நகரத்து ராஜகோபுரம் ஒன்றிலிருந்து கொட்டாரத்து யானை முரசு ஒலித்து வருகிறது. அதன் பிடர்த்தலையில் இருந்த திருமந்திர ஓலை நாயகம், யானையை ஒரு முக்கூட்டில் நிறுத்தி ஓலையைப் படிக்கிறான்.

மதுரைப் பெருமக்களுக்கு ஒரு மகிழ்ச்சிகரமான அறிவிப்பு. நிலவின் குலத்தோன்றல், வேம்பார மார்பன், மீனவன், வீரபாண்டியன், மன்னர் மன்னன் மலையத்துவஜன் வருகிற பௌர்ணமித் திருநாளில் 100வது அஸ்வமேத யாகத்துக்கு நாள் குறித்திருக்கிறார். போர் வேள்விக்குப் புறப்படும் புரவிக்கு வரிசை கொடுத்து, உறவாகும் வேந்தர்க்கெல்லாம் தென்பாண்டிப்பேரவையில் இடமுண்டு. எதிர்ப்பாருக்கு படுகளமும் கழுமரமும் பரிசாகும். இதுகேட்ட சாரணர்கள் தங்கள் தங்கள் அரசுக்கு அறிவிக்க. இதுபடித்தான் திருமந்திர ஓலைநாயகம்.

அரசப் பிரகடனத்தை கேட்ட மதுரை மக்கள் முகத்திலே மகிழ்ச்சி பொங்குகிறது. அவர்களில்...

**ஒருவன் :** ஆஹா நம் தென்பாண்டி மறவன் தேவேந்திர பூபதியாகப் போகிறான்.

பிரகடனத்தைக் கேட்ட தேவதூதன் ஒருவன் அதிர்ச்சி அடைகிறான்.

**மக்களில் இன்னொருவர் :** சூரியன் இனி நமக்கு சுடாத நெருப்பாவான்.

**இன்னொருவர் :** இனி மழைக்கு அதிகாரி நம் மலயத்துவஜ பாண்டியன் தான்.

**இன்னொருவர் :** அரம்பையும் ஊர்வசியும் இனி நம் அம்பலம் தோறும் ஆடுவார்கள்.

இந்தப் பேச்சுக்களை தேவ சாரணர்கள் கேட்டுத் திகைக்கிறார்கள். வீதியின் மற்றொரு முக்கூட்டிலிருந்து முரசின் முழக்கமும் பிரகடனமும் தொடர்கிறது.

## காட்சி எண். 2

### தேவேந்திர சபை

இந்திரன் தன் பரிவாரம் புடைசூழ அமர்ந்திருக்கிறான். இசைபிறக்கும் தாளக்கட்டும் கலகலக்கிறது. அரம்பையர் ஆடி வரிசை காட்டுகின்றனர். அந்தப் பரவசமான கட்டத்தில் மதுரையில் கண்ட சாரணன் ஒருவன் சபைக்கு வருகிறான். இந்திரனை அணுகி அச்சத்தோடு அவன் காதுகளில் ஓதுகிறான்

தேவேந்திரன் அதிர்ச்சியடைகிறான். நடனத்திற்கு இடையில் எழுந்து போகிறான். நடனம் தடைப்படுகிறது. தேவர்கள் முகந்தோறும் கேள்விக் குறியாகிறது.

## காட்சி எண். 3

## இந்திரன் மாளிகை

மனம்கலங்கி வருகின்ற இந்திரனை இந்திராணி எதிர்கொண்டு அழைக்கிறாள்.

**இந்திராணி :** பிரபு என்ன நடந்தது. ஏன் இந்தக் கலக்கம் மீண்டும் தேவாசுர யுத்தமா? புதிய அசுரன் எவனாவது பிறந்துவிட்டனா?

**இந்திரன் :** [வேதனை கலந்த இளம் சிரிப்புடன்]

வயது நூறு என்று வரம்பு கட்டப்பட்ட மானிடன், தேவர்க்கும் மன்னவனாக திட்டமிடுகிறான்.

**இந்திராணி :** எந்த தெய்வம் வரம் கொடுத்ததோ?

**இந்திரன் :** இல்லை. அசுவமேத யாகப்பலன் 100-வது யாகத்திற்கு வந்துவிட்டான் மலையத்துவஜன்...

**இந்திராணி .** அது நடக்காமல் தடுத்துவிட்டால்!

**இந்திரன் :** அது நடப்பது எப்படி?

உன் மன்னவன் எங்கள் தென்னவன் புகழ் வளருது, வளருது அம்மா... அவன் ஆசைக்கோர் அளவில்லை...உன்மேல், இந்த மண்மேல், இப்போது விண்மேலும் சென்றுவிட்டதம்மா. வேள்விக்கு நாள் குறித்தான். வெற்றிக்கே போர் குறித்தான்.

ராணி : இதெல்லாம் தெரிந்தகதைதானே !

குற : தெரிந்தாலும் தெரியாத கதை ஒன்று உண்டு பெண்ணே, உன் கணவன் கரத்திலே வாள். களத்திலே வெற்றி. எத்தனைதான் பெற்ருலும், நீ என்ன பெற்றவளா? பேர் சொல்ல ஒரு பிள்ளையைப் பெற்றவளா? செதுக்கிவைத்த உன் சிலையிலெல்லாம் யாழி இருக்கு. செதுக்காத சிலையே! உன் கரத்திலே மழலை சிந்த ஒரு குழந்தை எங்கே? உன் கணவன் மல்லாண்ட திண்தோளில் மணியாரம் ஆயிரம் புரண்டாலும், ஒரு பிஞ்சுக்கரத்தின் சுகம் அவன் கண்டதுண்டா? இந்தக்குறைதீர என்ன தவம் செய்தாய் பெண்ணே! என்ன தவம் செய்தாய்! பதவிக்கு அவன் 100 வேள்வி பண்ணினுலும் இந்த பிறவிக்கு என்ன சொல்லம்மா சொல்!

[அரசிக்கு அவள் சொல்லிக்காட்டக் காட்ட, உள்ளம் வெதும்புகிறது.]

தோழி : போதும் உன் புலம்பலை நிறுத்து! குறம்பாடுன்னு கூப்பிட்டா, அவங்க மனம்நோக பேசிட்டியே...

குற : உள்ளதைத்தான் சொன்னேன். நல்லதைத்தான் சொல்வேன்.

அரசி : பிள்ளைக்கலிதீர என்ன பரிகாரம்? அதைச்சொல்.

குற : தீர்த்தயாத்திரைபோனுல் தீருமம்மா இந்தக்குறை! மனக்குறையுள்ள நீ யாக பத்தினி ஆகமுடியாது.

வார்த்தைநான் சொன்னேன். மற்றபடி தெய்வம் விட்ட வழி...!

குறத்தி சொல்லிமுடித்து விடைபெறுகிருள். அரசி அவளுக்கு பரிசு கொடுத்து அனுப்புகிருள்.

## காட்சி எண். 5

### அரச மாளிகையில் அரசனின் பகுதி

காஞ்சனமாலை கவலைதோய்ந்தவளாக அரச மாளிகைக்கு வருகிருள். மன்னன் மலயத்துவஜன் ஆர்வத்துடன் அவள் கரம் பற்றி வரவேற்கிருன். அவள் வாட்டத்தைக்காணுகிருன்.

**அரசன் :** தேவி! இது என்ன நான் காணுத புதுமை! உன் கண்கள் அழுதிருக்கின்றன.

**அரசி :** ஆம் பிரபு. என் நெஞ்சம் இன்னும் அழுதுகொண்டு தான் இருக்கிறது.

**அரசன் :** குறம் சொல்லவந்தவள் ஏதும் குறைசொன்னுளா?

**அரசி :** பதவிக்கு நீங்கள் 100 வேள்வி பண்ணினுலும், இந்தப்பிறவிக்கு என்ன பலன் என்று கேட்டுவிட்டாள்.

**அரசன் :** வெற்றியின் சிகரத்தின் திருவிளக்கு ஏற்றுகிறேம். விண்நாடு நம்நாடு ஆகிறது. நானங்கு தேவர்க்கும் தேவனுக வீற்றிருப்பேன். நீ என் அருகில் இருப்பாய். நெருப்புக்கு அதிபனும், நீருக்கு அதிபனும், காற்றின்

காவலனும் நம் ஏவலுக்கு காத்திருப்பார்கள். தேவகுரு நமக்கு பஞ்சாங்கம் படிப்பார். கற்பகத்தரு நீ கேட்டதெல்லாம் கொடுத்திருக்கும்.

**அரசி :** எத்தனை பெரிய செல்வாக்கு பெற்றாலும், அவையெல்லாம் தாய் என்ற பெருமையை தருவதில்லை.

**அரசன் :** நாட்டு மக்களெல்லாம் நம் மக்கள் என்று இருப்போம்.

**அரசி :** ராஜ நீதிக்கு அது நல்ல தத்துவம். வாழ்க்கை விளக்கத்திற்கு தாலாட்டுப் பாடித்தான் ஆகவேண்டும். (என்று உருக்கமாகச் சொல்லுகிறாள்.)

**அரசன் :** இறைவன் நமக்கு எத்தனை பெரிய குறை வைத்து விட்டான் தேவி!

**அரசி :** குறத்தியின் வார்த்தைகளால் அந்தக் குறைதீர வழியும் சொல்லிவிட்டாள். நாம் தீர்த்தயாத்திரை புறப்பட வேண்டும்.

**அரசன்:** வேள்விக்கு நாள் வைத்து விட்டோமே.

**அரசி :** குறத்தியின் கேள்விக்குப் பதில் சொல்லித்தானே ஆகவேண்டும்! மனக்குறையுள்ள நான் யாகபத்தினி ஆகமுடியுமா?

**அரசன் :** இறைவா... நினைப்புக்கும் நடப்புக்கும் இடையே எத்தனை பெரிய அகழியை வெட்டுகிறாய்?

[அரசன் நகர்ந்து அப்பால் சென்று அழைப்பு மணியை அடிக்கிறான். அரண்மனைத் தலைவன் வந்து பணிகிறான்.[

**காவலன் :** தென்பாண்டி கொற்றம் சீரோங்கி வாழ்க, எங்கள் வேந்தன் பிரான், பொன்னுர் திருவடிகட்கு ஆயிரம் ஆயிரம் வணக்கங்கள்.

**அரசன் :** இதுசமயம் அஸ்வமேத யாகம் நிறுத்தப்படுகிறது. உங்கள் அரசனும் அரசியும் தீர்த்த யாத்திரை புறப்படுகின்றனர். எங்கள் முதல் முழுக்கு சேதுக்கரை. ஆவன செய்க.

(காவல் தலைவன் ஆணையை ஏற்றுச் செல்கிருன்).

காட்சி எண். 6

## இடம்: சேதுக்கரை

.சேதுக்கரை மணல் பரப்பில் பவளத்தால் படகு போல் மேடைகட்டி, முத்தால் குடை நிறுத்தி இருக்கின்றனர். அரசனும் அரசியும் யாத்திரையாக வந்து சேருகின்ருர்கள். சேதுகாவலனும், படையாளர்களும் மீனவர்களும், தாரை தப்பட்டை முழக்கத்தோடு அரசனையும் அரசியையும் வரவேற்கிருர்கள். அந்தக் கூட்டத்தில் ஒரு மீனவ மங்கை ஒரு இளமீனவனை முத்தெறிந்து வம்புக்கு இழுக்கிருள்.

**மங்கை :** மீனவனே, மீனவனே, எனக்கென்று ஆனவனே நெடுங்கடலில் நீ பிடிக்கும் மீனெல்லாம் கரையேறி நீந்துமோ? பாண்டியத்து மீனைப்பார். பறக்குது பறக்குது வானத்திலே!

(மீனவனும் அவளைப்பற்றி இழுத்து அவை முன்னால் நிறுத்துகிறான்)

அவன்: கல்வி படிக்கின்றவளே கள்ளி! உன் வல்லடியும் சொல்லடியும் இனியும் செல்லாதடி, இந்த மண்ணில். வழக்குரைப்பேன். பதில் சொல்லடி. சொல்லடியோ.

அவள்: அது தீராத வழக்கு இந்த ஜகத்துக்கு மாறாத பிணக்கு.

அவன்: கண்டசரம் ஒன்று, நான் காணுவதும் உண்டு. உந்தன் கழுத்துக்கு அது வந்த விதம் என்ன? கொண்டவன் நானிருக்க தந்தவன் யாரடி பெண்ணே?

அவள்: முத்துச்சுமையெடுத்து முதுகுளத்தூர் வழி நான் போகையிலே, கழுத்து வளையக்கண்டு நம் காவலனும் அங்கே கொடுத்த பரிசமடா... கொடுத்த பரிசமடா.

அவன்: கொல்லும் விழியுனக்குக் கொடுத்தவன் யாரடி? அவனைக் கொல்லத் துடிக்கிறேன், பேரைச் சொல்லடி! கொஞ்சம் நெருங்கி நில்லடி.

அவள்: வெல்ல நினைத்தாயோ மாறனை! அவனை வெல்லத் தகுமோ! சிவனை செந்தில் குமரனை பாரடா.

அவன்: கள்ளாலும் வாராத மயக்கம் உன்னைக் கண்டாலே வருவதென்ன கிறக்கம்.

அவள்: சொன்னாலும்புரியாத சுவைதான். சுவைத்தாலும் தீராத சுவைதான்.

அவன்: முத்தெடுக்க நான்அழைத்தால், முறுக்குவதென்ன பெண்ணே, நீ முறுக்குவதென்ன பெண்ணே.

அவள்: பெற்றெடுக்க ஆசை இன்னும் பிறக்கவில்லை. அதனால், இது தீராத வழக்கு. இந்த ஜகத்துக்கு மாறாத பிணக்கு.

மீனவப்பெண் ஆட்டத்தின் முடிவில் மன்னவன் முன்னிலையில் தன் இடையில் சொருகியிருந்த பையை எடுத்து, முத்துக்களை காணிக்கையாக செலுத்துகிருள். மற்ற மற்ற மீனவர் களும் கடல்படு பொருள்களை தங்கள் காவலனுக்குக் காணிக்கையாக வைக்கின்றனர். சேதுகாவலன் பெரிய மலர் மாலைகளைச் சூட்டுகிருன்.

சேதுகாவலன் : தென்னவர் தலைவா, தென் பாண்டி அன்னையே! உங்கள் பொன்ஞர் திருவடிகட்கு வணக்கம். இந்த சேதுக்கரை செய்தபுண்ணியம், அரசனும் அரசியும் இங்கே காட்சி தந்திருக்கிறீர்கள். வேங்கடத்தைத் தமிழால் அளந்து, இமயத்தை வாளால் அளந்து, வானத்தை அஸ்வமேத யாகத்தால் அளந்து, இந்திர பதவியை அளந்து கொண்டிருக்கிற ஏந்தலே, உங்கள் பெருமைக்கு எல்லையில்லை. இந்தக் கடலை உவமை சொல்லலாம். சொன்னல் அது கரிக்கும். உங்கள் கருணை அவ்வளவு இனிமையானது. இமயத்தைச் சொன்னல் அதன் உச்சிக்கும் எல்லையுண்டு. உங்கள் புகழ் வளர்ந்து கொண்டேயிருக்கிறது. நீங்கள் தேவர்க்கும் தேவர். திருமாலுக்கும் நிகர் ஆனவர்.

[அரசன் கையமர்த்துகிருன். சேதுகாவலர் இடையில் பேச்சை நிறுத்துகிருர். அரசன் சேதுகாவலனைப் பார்த்து]

அரசன் : சேதுகாவலரே! நான் புகழுக்கு சுமைதாங்கியல்ல. என் ஆற்றலின் அளவு எனக்குத்தெரியும். எங்கே அலை அருகே ஒரு ஆசனமிடுங்கள்.

என்று சொல்லிவிட்டு அரசன் எழுந்து அலையருகே செல்லுகிருன். அனைவரும்

அவனைத் தொடர்கிறார்கள். காவலர்கள் ஆசனத்தை அலையருகே கொண்டு போடுகின்றனர்.

## காட்சி எண். 7

அரசனும் அரசியும் தண்ணீர் அருகே போடப்பட்டுள்ள ஆசனத்தில் அமருகிறார்கள்.

**அரசன் :** சேதுகாவலரே. இந்த மண்ணுக்குச் சொந்தக்காரன் யாரென்று சொன்னீர்கள்.

**சேது :** தாங்கள் தான் பிரபு.

**அரச :** இந்தக் கடல்?

**சேது :** உங்கள் சொத்து. வருணன் உங்கள் உத்தரவுக்குக் காத்திருப்பான்.

[அரசன் நகைக்கிறான். ஒரு பெரிய அலை கரையை நோக்கி எழுந்து வருகிறது.]

**அரச :** அலையே, அலையே, அப்படியே நில். நில், மலையத்துவஜன் கட்டளையிடுகிறேன். ஏன் கூச்சலிடுகிறாய்? ஒதுங்கித் திரும்பு. உள் வாங்கிப்போ, போ.

[ஓங்கிச்சொல்கிறான். ஆனால் அலை, அரசன் அரசி மற்றவர்களையும் நனைத்து விடுகிறது. அரசன் மீண்டும் கடகட வென சிரித்துவிட்டு இளக்கமாக சேதுகாவலரைப் பார்க்கிறான்.]

அரசன் : சேதுகாவலரே, என் உத்தரவுக்கு இந்த உப்புக் கடல் ஓசை அடங்கமறுக்கிறது. அரசர்க்கும் அரசன் என்று மதிக்காமல் என் ஆடைகளையும் நனைத்து விட்டது. தெரிந்துகொள்ளுங்கள், மனிதனின் ஆற்ற லுக்கு எல்லையுண்டு. இயற்கையை அவன் வெல்ல முடியாது. அதை அனுசரித்து பயன்படுத்திக்கொள்ள லாம். அது மிஞ்சினால் இவன் மிஞ்சமாட்டான். வர்ணித்து வர்ணித்து மனிதனை தெய்வமாக்க நினைக் காதீர்கள். அவனுக்கு மரணமுண்டு. உங்கள் பாராட்டுக்கு நன்றி. பிள்ளைக்கலிதீர நாங்கள் புனித நீராட்டத்துக்குத்தான் வந்தோம்.

[என்று கூறி முடிக்கிறான்.[

கடல் நோக்கி அரசனும் அரசியும் சென்று நீராடுகிறார்கள்,

## காட்சி எண். 8

## ஆலயம்

அரசனும் அரசியும் ஆலயத்துக்குச் செல் கிறார்கள். பூரண கும்ப மரியாதையுடன் வேத பாராயணம் செய்கின்றனர். ஒருபுறம் நாதஸ்வர இன்னிசை பின்னணி செய்கிறது. தீபஆராதனை நடத்துகின்றனர். அந்த ஆடம்பரமானசூழ்நிலையை அரசன் விரும்பவில்லை. அரசன் அரசியிடம் மெது வாகச்சொல்கிறான்.

அரசன் : தேவி, இப்படி நாம் பரிவாரம் புடைசூழ புறப்பட்டால் பக்தியும் புண்ணியமும் நமக்குக் கிட்டாது. வரவேற்பும் வைபவமும்தான் நடக்கும்.

அரசி : ஆம் பிரபு, மற்றவர்கள் கண்டுகொள்ளாமல் மக்களோடு மக்களாக நாம் மாறிவிட்டால்?

]அரசன் சிறிது யோசித்துவிட்டு]

அரசன் : நல்லமுடிவு...

[அங்கிருந்து புறப்படுகிறார்கள்.]

### காட்சி எண். 9

### வழிநடை

மலையத்துவஜனும் காஞ்சனமாலையும் தங்கள் அரசகோலங்களை மாற்றிக்கொண்டு கணவனும் மனைவியுமாக பயணம் செய்கின்றனர். பச்சைப் பட்டு விரித்ததுபோன்ற பசும்புல் வெளிகள், ஜடை போட்ட கன்னியரின் மங்கல நடைபோல் கதிர் சாய்ந்தாடும் வயல்கள், கனி குலுங்கும் தோப்புக்கள். தாமரை பூத்த தடாகங்கள். மீன்கள் துள்ளி வழிமறிக்கும் ஏரிக்கரைகள், ஆகிய பாண்டி நாட்டு வளங்களைப் பார்த்து பரவசப்பட்டவர்களாக ஒரு கொடிவழியே பொங்கி வழியும் அருவிகளைப் பார்த்தபடி குற்றாலம் நோக்கி நடக்கிறார்கள். அரசனும் அரசியும் நடந்து வரும் வழியில்....

### காட்சி எண். 10

### அருவிக்கரை

அருவிக்கரையில் மக்களோடு மக்களாக கலந்து நீராடுகின்றனர். ஒரு குன்றின் மீது நின்றிருந்து

குள்ளமுனிவர் அகத்தியர் அவர்களைப்பார்த்து ஆசீர்வதித்தபடி புன்னகை புரிகிறார். மலையத்து வஜனும் காஞ்சனமாலையும் சென்று பணிகிறார்கள்.

**அரசன் :** தவமுனியே, உங்கள் தாள் பணிகின்றோம் அருவியில் ஆடிவிட்டு ஆசிரமத்திற்கு வர இருந்தோம்.

**முனிவர் :** உங்கள் வருகை அறிந்துதான் வந்தேன் வாழ்க. [பேசியபடி ஆசிரமம் நோக்கி நடந்து செல்கிறார்கள். ஆசிரமத்தை அடைகிறார்கள்.]

## காட்சி எண். 11

### ஆசிரமம்

அகத்திய ஆசிரமத்தில் பேரமைதி நிலவுகிறது இவர்கள் வருகையைக்கண்ட சில சீடர்கள் முனிவரின் குறிப்புக்கண்டு இருக்கைக்கு மணை போடுகின்றனர். உணவுக்குக் கனிவகைகளும் தேனும் பரிமாறுகின்றனர். ஒருசீடர் புதுப் பாலுக்குப் பசுக் கறக்கிறார். இவைகளையெல்லாம் பொருட்படுத்தாமல் ஒரு இளம் துறவி ஏடும் ஓடும்கையுமாக எழுதிக்குவித்தபடி இருக்கிறார்.

**முனி :** காஞ்சனை, விருந்தோம்பல் உங்களுக்கு பிறவிக் குணம் இந்தத் துறவிக்கு இதற்குமேல் முடியாது.

**காஞ்சனை :** எங்கள் அரண்மனை விருந்தில் ஆரவாரமும் சம்பிரதாயமும்தான் அதிகம் இருக்கும். இங்கே அன்பும் கருணையும் நிறைந்திருக்கிறது ஸ்வாமி.

**அரசன் :** தமிழும் கலந்திருக்கிறதென்று சொல்.

முனி: [எழுதிக்கொண்டிருந்த இளந்துறவியைக் காட்டி] அதோ பார். என் தமிழ் வளர்ந்துகொண்டே இருக்கிறது

[எழுதிக்கொண்டிருந்த இளந்துறவி ஒரு கட்டிலிருந்து சில ஏடுகளை உருவி கீழேபோடுகிறார்.]

[அதை எடுத்து அரசன் படித்துப் பார்க்கிறான். பிறகு அகத்தியரை நோக்கி]

அரசன்: என்ன ஸ்வாமி, தங்கள் அகத்தியத்தின் ஏடுகளை எடுத்து எறிகிறார்?

அகத்: ஆம், நான் எழுதியவற்றில் தள்ளுவன தள்ளுகிறான்.

அரச: உங்கள் எழுத்திலும் தவறு கண்டா . . .

அகத்: இல்லை. நான் சங்கரன் காலத்து மொழிக்கு இலக்கணம் வகுத்தேன். அவன் சங்ககாலத்தமிழுக்கு இலக்கணம் சொல்லுகிறான். என் எழுத்திலே கொள்வன கொண்டு நான் சொல்லாததை அவன் சொல்லி தொல்காப்பியம் எழுதுகிறான்.

அரசன்: இலக்கணம் என்றீர்கள், காப்பியம் என்கிறீர்கள்?

அரசி: காப்பியம் என்றால் கதையும் பாட்டும் கலந்தது தானே.

முனி: காப்பு என்றால் காவல் என்ற பொருளுமுண்டு. அதனால் தமிழுக்குத்தொன்றுதொட்டு வரும் காவலைச் சொல்லுவது தொல்காப்பியம்.

அரசன்: பொருத்தமான பெயர். தேவையான இலக்கணம்.

முனி: எழுத்துக்கும் சொல்லுக்கும்தான் இலக்கணம் பெற்றிருக்கின்றன பிற மொழிகள். இங்கே அகத்துக்கும் புறத்துக்கும் பொருளிலக்கணம் பேசுகிறது தொல்காப்பியம்.

அரசன்: அவர் பெயர்.

முனி: அவன் அப்பனிட்ட இடுகுறி பெயர் நமக்கெதற்கு! அவன் ஆக்குகின்ற தொல்காப்பியமே அவனுக்கும் பெயராகும்.

அரசன்: இந்த அரியபெரிய முயற்சிக்கு நானும் நாடும் கடமைப் பட்டிருக்கிறோம் ஸ்வாமி.

முனி: எமக்குத் தொழில் தமிழும், துறவும்தானே!

அரசன்: வணக்கம். எங்களுக்கு ஆசிகூறுங்கள். நாங்கள் விடை பெறுகிறோம்.

முனி: எங்களைப்பற்றியே பேசிக்கொண்டு இருந்து விட்டேன். உங்களைப்பற்றி . . .

அரசன்: பிள்ளையில்லை என்பது இவளுக்குப் பெரிய குறை. புனித யாத்திரையாகப் புறப்பட்டோம்.

முனி: கங்கையும், காவிரியும் கடலும் கடமை தவராத உங்களைத்தேடி வராதா! இங்குள்ள காடுமேடெல்லாம் சுற்றிப் போக வேண்டாம். கடமை உங்களுடையது. கருணை அவனுடையது, ஊருக்குப் போங்கள்.

[அரசி திடுக்கிட்டு]

அரசி: ஸ்வாமி! யாத்திரையை இடை வெளியில் நிறுத்தலாமா?

முனி: எழுத்துக்கும் சொல்லுக்கும்தான் இலக்கணம் பெற்றிருக்கின்றன பிற மொழிகள். இங்கே அகத்துக்கும் புறத்துக்கும் பொருளிலக்கணம் போகிறது தொல்காப்பியம்.

அரசன்: அவர் பெயர்.

முனி: அவன் அப்பனிட்ட இடுகுறி பெயர் நமக்கெதற்கு! அவன் ஆக்குகின்ற தொல்காப்பியமே அவனுக்கும் பெயராகும்.

அரசன்: இந்த அரியபெரிய முயற்சிக்கு நானும் நாடும் கடமைப் பட்டிருக்கிறோம் ஸ்வாமி.

முனி: எமக்குத் தொழில் தமிழும், துறவும்தானே!

அரசன்: வணக்கம். எங்களுக்கு ஆசிகூறுங்கள். நாங்கள் விடை பெறுகிறோம்.

முனி: எங்களைப்பற்றியே பேசிக்கொண்டு இருந்து விட்டேன். உங்களைப்பற்றி . . .

அரசன்: பிள்ளையில்லை என்பது இவளுக்குப் பெரிய குறை. புனித யாத்திரையாகப் புறப்பட்டோம்.

முனி: கங்கையும், காவிரியும் கடலும் கடமை அறியாத உங்களைத்தேடி வராதா! இங்குள்ள காடுமேடெல்லாம் சுற்றிப் போக வேண்டாம். கடமை உங்களுடையது. கருணை அவனுடையது, ஊருக்குப் போங்கள்.

[அரசி திடுக்கிட்டு]

அரசி: ஸ்வாமி! யாத்திரையை இடை வெளியில் நிறுத்தலாமா?

மீனாட்சி—2

என்பார், தயை என்ருல் கருணை என்பார். ஈரமும் கருணையும் எங்கேயம்மா? எங்கேயம்மா...

அரசி அர்ச்சனை செய்து கொண்டே போகிருள். அர்ச்சனை பாட்டாகிறது. அந்தப் பாட்டுக்கிடையில் ஒரு சின்னஞ்சிறு பெண் குழந்தை பந்தல் காலைப்பற்றிக் கொண்டு வந்து நிற்கிறது, காவல் நின்ற தோழியர் அந்தக் குழந்தை யாரென்று புரியாமல் ஒருத்தியை ஒருத்தி பார்த்துக் கொள்கிருர்கள். அவர்களில் ஒருத்தி அந்தக் குழந்தையை மெல்ல இழுத்து அப்பால் விடப்போகிருள். குழந்தை அரசியின் மடியில் போய் உட்கார்ந்து கொள்கிறது. அவர்களை பார்த்துப் செல்லமாக சிரிப்பு காட்டுகிறது. அரசிக்கும் அந்தக் குழந்தை யாரென்று புரியவில்லை. அவளால் அகற்றவும் முடியவில்லை. அவள்மனம் அந்தப் பிள்ளை மேல் செல்கிறது. கைகள் பூப்போட தடுமாறுகின்றன. குழந்தை பூஜை மலரை கைநிறைய அள்ளுகிறது. அரசி மலர்களை அதன் இடமிருந்து வாங்க முயற்சிக்கிருள், அது அவள் மடியில் இருந்து நழுவி ஓடுகிறது. அவளும் பூசையை மறந்து அந்தப் பிள்ளையைத் தொடர்ந்து ஓடுகிருள். பரிவாரங்களும் அரசியைத் தொடர்ந்து வருகின்றன.

## காட்சி எண் 13

### ஒரு கோயில் வாசல்

கொஞ்ச தூரத்திற்கு அப்பாலிருந்த பெரிய கோவிலுக்குள் குழந்தை சென்று விடுகிறது, அரசி தேடுகிருள். அதை அங்கே காணவில்லை. திகைக்

கிருள். திடுக்கிடுகிருள். பூஜை தடைபட்டு விட்டதாக வருந்துகிருள். குள்ள முனிவர் யாத்திரையை நிறுத்திஞர், குழந்தை பூசையை நிறுத்தி விட்டது என்று குறைபட்டவளாக மனம் கனிந்து பாடுகிருள்.

[பாட்டின் முடிவில் ஒரு முதிய அர்ச்சகர் பூசைக்கான மலர்களோடும் பழத் தட்டுக்களோடும் அங்கே வருகிருர். வந்தவர் தேவியின் கழுத்தில் மாலை யிருப்பதைப் பார்த்து]

அர்ச்ச : பாண்டிமா தேவி! நீ பெரிய பாக்கியசாலி. கௌரியின் திருக்கரத்திலே உள்ள பூஜை மலரைப்பார், அம்பிகையே உன் குழந்தையாக உன் மடியில் வந்து அமர்ந்து விளையாடியிருக்கிருள்.

[இதைக் கேட்ட அரசி திடுக்கிட்டவளாய் மெய்சிலிர்க்க உணர்ச்சி வசப்பட்ட வளாய்]

அரசி : தாயே! உன் கருணையே கருணை! உன்னை அறியாத என் அறியாமையை மன்னித்துவிடு தாயே! கௌரி.

அர்ச்ச: உன் யாத்திரையும் விரதமும் பூர்த்தியாகிவிட்டன. தாயே! இந்த மகிழ்ச்சிக்காக குழந்தைகளின் பாலுக்குப் பசுவும், குமரிகளுக்கு குங்குமமும் மஞ்சளும், அந்தணர் கட்கு சோறும் மடியும், புலவருக்குப் பொன்னும் மணியும், தேவர்களுக்கு வேள்வியும் நடத்திக் கொடு. உன் குறை எல்லாம் தீரும்.

[என்று பிரசாதம் கொடுக்கிருர்]

## காட்சி எண் : 14

## அரண்மனை

*அரண்மனை விழாக்கோலம் பூண்டிருக்கிறது. குழந்தையும் கையுமாக வந்து நின்ற ஏழைத் தந்தையர்க்கெல்லாம் கரவைப்பசு தருகிறார்கள். மங்கலப்பெண்களுக்கு மஞ்சளும் குங்குமம் தருகின்றார்கள். அந்தணர்கள் பந்தி பந்தியாய் விருந்து உண்ணுகிறார்கள். ஆடை மணிகள் அபாரமாகக் குவிந்து கிடக்கின்றன. புலவர் பெருமக்கள் பொன்னும் மணியும் புதுப்பட்டும் தட்டோடு பெற்றுச் செல்கிறார்கள். இந்த சூழ்நிலையில் வேதமுழக்கத்தோடு வேள்விக்கு மீள்கிறார்கள். அரசனும் அரசியும்யாகத்தலைவர்களாய் வேள்விக்குமுன் அமர்ந்து, நெய்யும் பொரியுமிட்டு வேள்வி வளர்க்கிறார்கள். வேள்வித்தீ கொழுந்து விட்டு பளபளத்து ஜொலிக்கிறது. வேதமுழக்கம் மிடுக்காகிறது. அந்த நிலையில் சிவந்த அனலிலிருந்து ஒரு தங்கத்தாமரை மொட்டாக தலைதூக்கி எழுகிறது. தண்டு உயர்ந்து மன்னவன் பக்கம் தலை சாய்க்கிறது. அரசன் தாமரை மொட்டை ஏந்தி எடுக்கிறான். அனைவரும் வியப்படைகிறார்கள், அரசன் தாமரையை அரசியிடம் கொடுக்கிறான். குழந்தையின் குவா குவா என்றகுரல் கேட்கிறது. அரசியின்கரத்தில் தாமரை மலர்கிறது. அதிலே தளதள வென்ற அழகான குழந்தை கன்னங்குழிய குறுநகை புரிகிறது. அரசனும் அரசியும் மெய்மறந்து பூரிக்கிறார்கள், அவைக்களத்திலே மகிழ்ச்சி வெள்ளம் பெருகுகிறது.*

**குரல்கள் :** வாழ்க! வாழ்க! வாழ்க! மதுராபுரி தெய்வம் மகளாக வந்துவிட்டாள். அன்னை கௌரி அன்புமகளாக வந்துவிட்டாள். தென்னவர் நாட்டுக்குப் பெண்ணரசி

பிறந்துவிட்டாள். பிள்ளைக்கனியமுதே...பேசும் பொற் சித்திரமே... சித்திரை நிலவே,... சிரிக்கும்தாமரையே... செந்தமிழ்த்தேனே...திகட்டாததெள்ளமுதே...ஞானச் சுடரே... மீனக்கொழுந்தே மீனாட்சி... மீனாட்சி... மீனாட்சி...

என்ற குரல்கள் எதிரொலிக்கின்றன. அரசனும் அரசியும் குழந்தையை மடிமாற்றி மடிமாற்றிப் பரவசப் படுகிறார்கள். அதுபோது அரசன் குழந்தையை வைத்த கண் வாங்காமல் பார்க்கிறான்.

**அரசி :** என்ன அப்படி பார்க்கறீங்க!...கண்பட்டுவிடும்

**அரசன் :** தேவி! இது என்ன விபரீதம்! மானிட அமைப்புக்கு மாறான பிறப்பு

(அதிர்ச்சியடைந்த தேவி)

**தேவி :** ஆம் பிரபு...

(என்று கூறி ஒரு பட்டுத் துணியால் அதன் மார்பகத்தை மூடுகிறாள் தெய்வம் விளையாட்டு காட்டுகிறதா?

**அரசன்:** இல்லை தேவி! சிரித்தது போதுமென்று சிந்திக்க வைத்துவிட்டது.

**அரசி;** உலகம் பலவிதமாக பேசுமே! கௌரி உன் விரதத் தில் மகிமை இதுவா!

]மனங்குறுகியவளாக, கண்ணீர்வழிய]

**அரசன்:** தெய்வத்தின் கருணைக்குப் பொருள் புரிவதேயில்லை தேவி!

[என்று கூறிச் செல்கிறார். அப்போது வானொலி கேட்கிறது.]

ஒலி: மன்னா! மனங்கலங்காதிரு. அவளுக்கு வாய்த்த மணவாளன் வருகின்றபோது அந்த வேண்டாத உறுப்பு மறைந்துவிடும். அதுவரை அவள் நாணம் என்பதை அறியமாட்டாள். ஆணுக்கு ஆணாக வளர்வாள். இந்த அகிலமெல்லாம் கட்டி ஆள்வாள்.

[ஆனந்தக் கண்ணீரோடு, தெய்வமே துணையாக மண்டபத்திலிருந்து குழந்தையை எடுத்துக்கொண்டு அரசனும் அரசியும் அரச மாளிகைக்குப் புறப்படுகிறார்கள்.]

## காட்சி எண். 15

## அரச மாளிகை

அரச மாளிகையில் குழந்தைக்குத் தொட்டி லிடுகின்றனர். பிள்ளைத்தமிழ் பாட்டாகிறது. தாலப் பருவம், முத்தப் பருவம், அம்புலிப்பருவம், சப்பாணிப் பருவம், செங்கீரைப் பருவம், எனப் பாட்டுத் தொடர, மீனாட்சி வளர்ந்து ஓடி ஆடும் குட்டிப் பெண்ணாகிறாள். ஆடும் குதிரை, யானை முதலிய மரப்பாவைகளும், அவள் வயதுப் பிள்ளைகளும் அம்பலம் அழகனடி என்ற காவலர்களும் அவளுக்குத் துணையாகின்றனர்.

## காட்சி எண். 16

## அரண்மனைக் கொட்டாரம்

சிரிப்பும் குதிப்புமாக குழந்தைகள் பந்து போட்டுப்பிடிக்கின்றன. பந்து உருண்டு பட்டத்து யானையின் காலடிக்கு ஓடிவிடுகிறது.

**ஒருகுழந்தை :** பந்து ... பந்து

**மற்ரெரு :** போச்சு போச்சு

[என்று கதறுகிறார்கள். அப்போது மீனு]

**மீனு :** அழகு ... அந்தப் பந்தை எடுத்தா

**அழகு :** [பயந்தகுரலில்] அய்யோடா ... யானை மிதிச்சா என்னைக்கூட்டி எடுத்தா ஒரு குன்றுமணிக்கூட தேற மாட்டேன்.

[மீனு சிரித்துக்கொண்டே அம்பலம் நீ எடுத்துக்கொடேன்.]

**அம்பலம் :** அதுவேணு போகட்டும்மா ... இந்தா பாரு புதுப்பந்து...பூப்பந்து ...

[என்று இன்னெரு பந்தை அவளிடம் தர முயற்சிக்கிறான்]

**மீனு :** ஊ ஹூம் ... எனக்கு என் பந்துதான்வேணும்.

[என்று சிணுங்குகிறாள்]

**அம்பலம் :** வேண்டாம்மா

அழகு : [அம்பலத்தைப் பார்த்து] குழந்தை கேக்குது. போயேன், உன் உசிரு என்ன வெல்லமா ...

அம்ப : கருப்பட்டி, வாயேன். இரண்டு பேருமா சேந்து போவோம். ஒரே மிதி, சதக். அப்புறமா இந்த லோகத்தைவிட்டு இந்திரலோகத்துக்கே போவோம்.

மீனு : பயந்தாங்கொள்ளிகள்!

[என்று அவர்களைப் பாத்து எள்ளிநகையாடிவிட்டு யானையை நோக்கிப் போகிறுள். அழகும் அம்பலமும் தடுக்கப் போகிருர். குழந்தை ஓடி யானையின் துதிக்கையைப் பற்றிக் கொள்கிருள். துரத்திச்சென்ற இருவரும் தூரத்திலேயே நின்று விடுகிருர்கள்.]

[மீனு அவர்களைப் பார்த்து கிண்டலாக]

எங்கே என்னைப்பிடிங்க பாக்கலாம்.

என்று இப்புறம் அப்புறம் ஓடுகிருள். அப்புறமும் இப்புறமும், யானைக்கு அடியிலுமாக ஓடியாடி ஆட்டம் போடுகிருள். அழகும் அம்பலமும் பயந்து நடுங்கி குழந்தையை பிடிக்கமுடியாமல் தங்களைத் தாங்களே பிடித்துக்கொள்ளுகிருர்கள். கடைசியாக குழந்தை யானையின் துதிக்கையிலமர்ந்து எம்புகிருள். யானை அவளை ஊஞ்சலாட்டுகிறது. மற்றக்குழந்தைகள் மகிழ்ச்சிபெருக்கோடு கைகொட்டி ஆரவாரிக்கின்றனர். மீனு இறங்கி குழந்தைகளிடம் ஓடிவருகிருள். யானை மீனுவுக்குப் பந்து பொறுக்கிப்போடுகிறது.

## காட்சி எண். 17

### ரதவீதி

ஒரு வீதி முனையிலிருந்து திருமங்கல ஓலை நாயகம் முரசுகொட்டி ஒரு பிரகடனத்தைப் படிக்கிறான்.

மதுரைப் பெருமக்களுக்கு ஒரு மகிழ்ச்சிகரமான அறிவிப்பு. மாட்சிமைமிக்க நம் மன்னர் பிரான், அரசிளஞ் செல்வி மீனாட்சிக்குச் சுவடி தூக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். ஆயகலைகள் அறுபத்திநான்கிலும் ஆற்றல் மிக்கஅவர்கள் ஆசானாக வரவேற்கப் படுகிறார்கள். தகுதி மிக்கவர்கள் வருக. வருக.

[இதுபடித்தான் திருமங்கல ஓலைநாயகம்.]

## காட்சி எண். 18

### ஒரு புலவர் வீடு

புலவரின் மனைவி ஏட்டுச்சுவடிகளை அள்ளி அடுக்கி ஒரு கட்டாகக் கட்டிக்கொண்டிருக்கிறாள். அதைக் கண்ட புலவர்

புலவர் : அடிசிறக்கினியாளே. எதுக்கு இத்தனை சுவடி களையும் எடுத்துவைத்துக்கட்டுகிறாய்?

புலவி : நீங்கதான் அதிகம் படிச்சவரின்னு அரண்மனைக்குத் தெரிய வேண்டாமா?

புலவர் : இதைச் சுமந்து கொண்டு போகச் சொல்றியா?

புலவி : அப்பதான் நீங்க அரண்மனை வாத்தியார் ஆகலாம்! நான் முத்துலே சரடு, பவளத்துலே வங்கி, தங்கத்துலே காப்பு, வெள்ளியிலே கொலுசு வித விதமாப் போட்டுப் பார்க்கலாம், புறப்படுங்க.

[என்று சுவடிக் கட்டை தூக்கி அவர் தலையிலே வைக்கிருள். சலித்துக்கொண்ட புலவர்]

புலவர் : அட ஆண்டவா! என்னே இவள் நகைதாங்கியாக என்னை நகைப்புக்கு ஆளாக்குகிருளே!

தன் தலையிலே தட்டிக்கொண்டு புறப்படுகிருர். என்று

## காட்சி எண். 19

## அரண்மனை கொட்டாரவாசல்.

தலையில் பெரிய முண்டாசுக்கட்டும், கையில் பிரம்புமாக ஐந்தாறு குழந்தைகளுடன் ஒரு பெரியவர் அரண்மனைக்கு வருகிருர். அம்பலம் அவரை வரவேற்கிருன்.

அம்பலம் : வாங்கய்யா ... வாங்க. உங்க புள்ளைங்களையும் இங்கேயே சுவடிதூக்க அழைச்சாந்தீங்களா.

பெரியவ : இல்லே இல்லே. அரசிளம் செல்விக்கு ஆசானுக பாடம் சொல்லிவைக்க வந்திருக்கிறேன்.

அம்ப : இந்தப் பரிவாரமெல்லாம்!...

[என்று அவரோடு வந்த குழந்தைகளைக் காட்டுகிருன்.]

பெரிய : அப்படிக் கேள் [என்று சொல்லிவிட்டு] எப்போதுமே மேலிடத்துப் பிள்ளைகளுக்கெல்லாம் மேலேகொஞ்சம் காலி. அதிலும் அரசிளஞ்செல்வியை அதட்டமுடியுமா. அடிக்க முடியுமா.

[எனத் தன் குழந்தையைக் காட்டிவிட்டு]

அங்கே பாடம் வரல்லேன்னு இங்கே அடிபட, குட்டுப் பட, முட்டிப்போட! எப்படி என் புத்தி!

[என்று கூட்டிவந்த பிள்ளைகளை அடித்தும் குட்டியும் முட்டிப் போடவும் வைத்தும் காட்டுகிறான். இதைப் பார்த்த அம்பலம்.]

அம்ப : நல்ல ஞானம். யாருக்கு வரும்

பெரிய : ஆகா ... என் பெயரே சிவஞானம்தான்

[அந்த சமயம் பொம்மைகளை சரம்சர மாகச் சேர்த்துக் கொண்டு ஒரு ஓலைப் பெட்டியுடன் ஒருவர் வருகிறார். அவரைப் பார்த்து அம்பலம்.]

அம்ப : வாங்க. பொம்மைக்கடையோடவே வந்திட்டீங் களா?

பொம்மை : புதுமையான கேள்வி! முறையோடு வந்திருக்கிறேன். நான் எழுத்தெண்ணிப்பாடம் சொல்பவனல்ல. கலை விளக்கத்தோடு கற்பிக்க வந்தேன்

என்று தன்னிடமுள்ள ஒவ்வொரு பொம்மைகளை எடுத்து நீட்டிக்கொண்டே ஆடு என்றால் ... மாடுஎன்றால் என்று பொம்மைகளைக் காட்டுகிறார்.[

அம்ப : ஏய்யா ... பொம்மைகளேயா கொண்டு வந்தீங்க. இதுக்குப் பதிலா அதுகளேயே ஓட்டிகிட்டு வந்திருக்கலாமே?

பொம் : குறும்பு என்ருல்...

அம்ப : நீங்களே போதும். பொம்மை வேறே எதுக்கு?

[அப்போது சுவடிக்கட்டை சுமந்து கொண்டு புலவர் வருகிருர்.]

அம்ப : வாங்கய்யா ... இது என்ன கணக்குக் கட்டா?

புலவ : அன்றுஅன்று. யாம் படித்த ஏடுகள். என்னே மிஞ்சி எவனும் படித்திருக்க முடியாது என்பதற்கு எடுத்துக்காட்டாக சுமந்துவந்திருக்கிறேன்.

அம்ப : [நகைத்துக்கொண்டே] அய்யோ பாவம்! தலேக்கு மேலே சுமந்துக்கிட்டிருக்கீங்க. உள்ளே சுமந்திருந்தா நல்லாயிருந்திருக்கும்.

புலவ : யாது புகல்கின்றனே?

[என்று கோபமாகக் கேட்கிருர். சமாளித்துக் கொண்டு]

அம்பலம் : நீங்களெல்லாம் வர்ரதுக்குமுந்தியே அந்த நல்ல முகூர்த்தம் வந்திடுச்சி. அங்கே மீனுட்சிக்குப்படிப்பு ஆரம்பிச்சுட்டாங்க. பரவாயில்லே நீங்களும் கலந்துக்குங்க. சாப்பாடும் தட்சணேயும் உங்களுக்கும் கிடைக்கும்! வாங்க வாங்க.

[என்று எல்லோரையும் உள்ளே அழைத்து செல்கிருன்.]

## காட்சி எண், 20

### அரச மாளிகை

*குழந்தை மீனுட்சி ஒரு மணையில் அமர்ந்திருக்கிருள், அருகே அழகு துணையாக நிற்கிருள், ஆசிரியர்கள் கூட அமர்ந்திருக்கிருர்கள், எழுதிப்பழக புது மணல்பரப்பியிருக்கிருர்கள். புது ஓலைகள் சீவி எழுத்தாணிகள் வைத்திருக்கின்றனர், அரசி குழந்தையின் படிப்பைக் காண உப்பரிகை மேல்தளத்தில் அமர்ந்திருக்கிருள், அரசனும் அந்த விழாவில் கலந்து கொண்டிருக்கிருன். அப்போது தலைமையாசிரியர் கல்வியை ஆரம்பிக்கிருர்.*

ஓம். ஓம். ஹரி. நமோத்து சிந்தம்.

**2ஆசிரியர் :** *அ...ஆவன்ன...... இ...ஈயன்ன...உ... ஊவன்ன எ......ஏயன்ன.... ஐயன்ன...ஒ.....ஓவன்ன...... ஔவன்ன ஔவன்ன...அக்கன்ன.*

**முடிவு தலைமையாசிரியர் :** *உயிர் 12. ஆயுதம் ஒன்று ஆக 13. க் ங் ச் ஞ் ட் ண் த் ந் ப் ம் ய் ர் ல் வ் ழ் ள் ற் ன். இந்த 18* மெய்யே. ககாவென. கிகீவென, குகூவென. கெகே என கையன்ன கொக்கோவென கௌவன்ன உயிரும் மெய்யும் கொண்டு கலப்பது இவ்விதமே.

*[மீனுட்சி அந்த ஓசை நயத்துக்குத் தலையசைக்கிருள்.]*
*எங்கே நீ எழுது.*

*ஓம்......என மீனுட்சியின் கையைப் பற்றி விரலால் மணலில் எழுதுகின்றுர்.*

மீனு ; ஓம்......

[அந்த ஓங்காரநாதம் ஓரே ரீங்காரமாய் எதிரொலிக்கிறது]

ஆசி: ஊம்... அதுக்கும்மேலே

மீனு : ஓம்ன்னு என்ன?

ஆசி : முதல் மந்திரம் பிரணவம்.

மீனு : என்ன பொருள் ?

ஆசி : [திடுக்கிட்டு] பிரும்மனுக்கே தெரியாத பொருள்.

மற்ரெரு : ஈசனுக்கு ஈசனே குமரனிடம் கேட்ட பாடம்.

இன்னெரு : தத்துவப் பொருளெல்லாம் சாத்திரம் படிக்கிற காலத்திலே தானுப் புரியும்... இப்ப உனக்கு நாங்க எழுத்து வரிசையைத்தான் சொல்லி வைக்க வந்திருக்கிறேம்.

[என்று சொல்லுகிருர்கள்]

மீனு எழுத்து வரிசையிலே எதுக்கு இந்த ஓம்!

ஆசி : காலகாலமாக அதைச் சொல்லித்தான் அடுத்த எழுத்து ஆரம்பிக்கிறது வழக்கம்.

மீனு : அதுதான் எதுக்காகன்னு கேக்கறேன்.

மற்ரெருரு : அம்மா! நீ சொல்லிக்கவந்தவளல்ல. சொல்லித் தர வந்தவள். நீயே சொல்...

என்று கேட்கிறூர். சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு நிதான மாக.

மீனு : எழுத்துக்களெல்லாம் ஓசையின் வடிவம். அந்த ஓசைக்கு முதற் தோற்றம் ஓங்காரம். [ஓம். ஓம். எனச் சொல்கிறுள். அனைவரும் ஒருசேர அவளோடு ஓம் என்று சொல்கிறூர்கள். ஓங்கார நாதமாக அது எதிரொலித்து அரண்மனை முழுவதும் கேட்கிறது.]

## காட்சி எண். 21

ஒரு புறம் ஏட்டுச் சுவடிகளை சுமந்து வந்த புலவர் ஓடிக் கொண்டிருக்கிறூர். அவரை வழி மறித்து....

அம்ப : என்ன ஆச்சு...ஏன் குடல் தெரிக்க ஓடுரீங்க?

புலவ : இன்னும் முப்பது பிறவி எடுத்தாலும் அவளுக்குப் படிப்பு சொல்லிவைக்கிற புத்தி எனக்கு வராது.

[அம்பலம் சிரித்துக் கொண்டே கேட்கிறுன்.]

அம்ப : நீர் என்ன ஆவிர்?

அடுத்த : நான் மீனுட்சிக்கு மாணவன் ஆவேன்

[என்றுசொல்லிக் கொண்டே ஓடிக் கொண்டிருக்கிறுன்.]

## காட்சி எண். 22

### சங்கீத மஹால்

அரச மாளிகையில் சங்கீத மண்டபத்தின் இசை ஆசிரியை வீணையும் கையுமாக சுருதி கூட்டு கிருள். மீனுட்சி பாடம் கேட்க அமர்ந்திருக்கிருள். அழகனடி, அம்பலம் உடனிருக்கிருர்கள், சுருதி கூட்டியபடி

ச...ரி...க...ம...ப...த...நி சுவைபட நிறுத்தி சரிகமபதநி நிறைபடச் சொல்லிச்சொல்லி காட்டு கிருள், இவைகள் ஏழும் சுரங்கள்.

**அம்ப :** அதாவது சங்கீதத்துக்கு அரிச்சுவடி

[என்று குறுக்கிட்டுச் சொல்கிருர்.]

**ஆசி :** இந்த ஏழு ஸ்வரங்களுக்கு மேல்தான் இசையே வளர்கிறது.

**மீனு :** (குறுக்கிட்டு) ஏன் ஏழு ஸ்வரங்கள்?

**ஆசி :** அது இலக்கணம். இசைதான் செவிக்கு இன்பம்.

**அம்ப :** (குறுக்கிடுகிருன்) மீனு என்னைக் கேளு நான் சொல் கிறேன்.

**மீனு :** ஆம்...சொல்லு பார்க்கலாம்...

**அம்ப :** இப்ப நான் உன்னைக் கேக்கறேன். ஏன் ஏழு நிறம். ஏன் ஏழு கிழமை?

**மீஞ :** வானவில்லைப் பார்த்து ஏழு நிறம் என்ருர்கள். வானத்திலுள்ள கோள்களை வைத்து ஏழு நாட்கள் வகுத்தார்கள்'

**அம்ப :** அந்த மாதிரி ஏழு சத்தத்தைக் கேட்டு ஏழு ஸ்வரம்னு சொன்ஞங்க.

**மீஞ :** (சிரித்துக்கொண்டே) இல்லே இல்லே. நாதம் ஒன்று அதன் பேதம் ஏழு,

**அம்ப :** யார் சொன்னது?

**மீஞ .** வேதம் சொன்னது? '

**அம்ப :** ஓ...வேதம் சொன்னதா...நீ ஒண்ணும் சொல்லலியா?

**ஆசிரி :** அவள் சொல்வதெல்லாம் வேதம்

[என்று வணங்கியபடி எழுந்து போகிருர்]

**அம்ப :** என்னம்மா இது...நீங்களும் போறீங்களா...மீஞட்சி இனிமே நான்தான் உனக்கு சங்கீதம் சொல்லி வைக்கப் போறேன், அழகு எடுத்தா வீணையை

(அழகு வெடுக்கென்று வீணையை எடுத்துக் கொண்டு) தாயே பராசக்தி. இந்த சண்டாளன் கையிலிந்து நீதான் சங்கீதத்தைக் காப்பாத்தணும்.

[மீஞட்சி கையை நீட்டுகிருள். அழகு வீணையை மீஞட்சியிடம் தருகிருள். மீஞட்சி வீணையை அழகாகப் பற்றி அதன் தந்தியைச் சுண்டு கிருள். அந்த ஓசை நயத்திற்கு ஈடாக

சங்கீதக் கூடத்தில் தூண்களிலேயிருந்து பதுமைகளின் கரத்திலேயுள்ள வாத்யங்களி லிருந்து நாதம் எழும்புகிறது. அழகுக்கும் அம்பலத்துக்கும் வியப்பாகிறது, மீனாட்சி அவங்களை விட்டு அப்பால் நழுவிச் செல் கிறாள்.

## காட்சி எண். 23

## சித்திரக்கூடம்

அரண்மனைச் சித்திரக்கூடத்தில் ஒரு முதிய ஓவியன் பாட்டுச் சொல்லியபடி மீனாட்சியின் படத்தை வரைகிறான். ஈசன் நெஞ்சத்தில் அழகு ஒழுக எழுதிப் பார்த்திருக்கும் உயிர் ஓவியமே. மதுகரம் வாய் மடுக்கும் குழற்காடு ஏந்தும் இளம் வஞ்சிக் கொடியே வருக. வருக.

அப்போது மீனாட்சி வருகிறாள், அவளைக் கவனியாமலேயே மீண்டும் ஓவியர்

மலையத்துவஜன் பெற்ற பெருவாழ்வே. வருக வருகவே.

அப்போது கால்கள் மட்டும் தெரிந்த மீனாட்சி வளர்ந்து பெரியவளாகிறாள். மீனாட்சியை தேடிக்கொண்டு அவள் பின்னாலேயே அம்பலம் வருகிறான். வந்தவன் "அம்மா உன்னை நான் எங்கேயெல்லாம் தேடுகிறது. நீ இங்கேயாம்மா இருக்கே."

அம்பலத்தின் ஒலி கேட்ட ஓவியன் திரும்பிப் பார்த்து விட்டு.

என் தாய் இங்கேயா இருக்கிருள்?
எங்கும் இருப்பாள்.

அம்ப : மீனும்மா, இது கிறுக்கிறது ஒரு வேடிக்கையா? என்று ஓவியரை கிண்டல் செய்கிருன்.

தெருவிலே போட்டா கோலம். செவுத்துலே எழுதினு சித்திரம். அதைப் போய் வேடிக்கை பார்க்குறியே.

முதிய : இவன் நிலையில் எழுதினுல்

[மீனுட்சியிடம் சொல்கிருர்]

மீனு : விதி...

[முதியவர் நகைத்துவிட்டு]

மீனு : அம்பலம் குட்டுப்போதுமா...

[என்று கேட்டுவிட்டு]

எழுத்தில் எழுதினுல்...

மீனு : காவியம்...

முதிய : மீனுட்சி உன்னைநான் என் இதயத்துலே எழுதினுல்

மீனு : அன்பான இதயம்

[என்று கூறிவிட்டு சிரித்தபடி ஓடுகிருள். அம்பலம் மீனுவை பின்தொடருகிருன்.]

## காட்சி எண். 24

### ஆயுதசாலை

ஒரு நாள் அந்திவேளை. ஆயுதசாலையில் வில்லாசிரியர் பலதரப்பட்ட வில்களை சரிபார்த்துக் கொண்டிருக்கிறார். மீனாட்சி அங்கே வந்து ஒருவில்லை எடுத்து நிறுத்தி அதன் நாணைசுண்டு கிறாள்.

ஆசிரி : இளவரசி, நீங்கள் இசைக்கூட்ட இதுயாழில்லை. வில்

[மீனாட்சி அவனைப்பார்த்து]

மீனா : வில்லிருந்து பிறந்ததுதான் யாழ். இதன் ஏழு நரம்புகளை இழுத்துச்சுண்டினால் இசைபிறக்கும். ஒரே நரம்பை இழுத்துச்சுண்டினால் அம்பு பறக்கும்.

[அம்பை வைத்து இழுத்துவிடுகிறாள். அந்த அம்பு தொடுவானத்துக்கும் அப்பால் சென்று கொண்டேயிருக்கிறது. ஆசிரியர் வியப்புற்று]

என்னவிந்தை உங்கள் அம்பு செல்லும் எல்லைக்கு எல்லையே இல்லையம்மா.

[மற்றொரு அம்பை எடுத்து, மேற்திசை வானத்தில் பழுத்துசிவந்து பந்து போல் மிதந்து கொண்டிருக்கிறான். கதிரவன். அதன் திசையை நோக்கி மீனாட்சி நாணேற்றுகிறாள். ஆசிரியர் அதை தடுத்து நிறுத்தி]

ஆ.ரி : வேண்டாம்தாயே. செங்கதிர்ச் செல்வனை உங்கள் கூர் அம்பு பிளந்துவிடும். அவன் கடமை ஒழுங்காகத்தான் செய்து கொண்டிருக்கிருன்.

[என்று வேடிக்கையாக நகைக்கிருர்]

மீனு : கொலைக்கருவியோடு பழகினுலும் கலையுணர்வோடு பேசத்தெரிகிறதே.

[என்று அவனைப் பாராட்டுகிருள்]

## காட்சி எண். 25

## போர் பயிற்சிப்பள்ளி

போர்க்களக்கூடத்தின் மற்ருெரு பகுதியில் இளம் வீரர்கள் ஒருவருக்கொருவர் ஈடுகொடுத்து வாள் பயிற்சி செய்கின்றனர். அவர்களுக்கிடையே வாசிளாரியர் மிகவும் மிடுக்காக வாளைச் சுழற்றி இளம் வீரனுக்குப்போர் பயிற்சி அளிக்கிருர். பயிற்சியின் வேகத்தில் ஆசிரியரின் வாள் தட்டிப் பறிக்கப்படுகிறது. தட்டிவிட்ட மாணவனுக இளவரசி நிற்கிருள். ஆசிரியர் வியந்து பாராட்டி.

ஆசி : வெற்றித் திருமகளே. வீரபாண்டியன் குலமகளே கொற்றவையில் வைரச்சிரிப்பை உன் வாள்வீச்சிலே கண்டேன்.

[என்கிருன்]

மீனு : எல்லாம் நீங்கள் கற்பித்த பாடம்தான்

ஆசிரியர் : இல்லையம்மா. நான் கற்றுக்கொடுத்ததைவிட கற்றுக்கொண்டதுதான் அதிகம்.

[அவள் வாளை வாங்கி முத்தமிடுகிறார்]

## காட்சி எண். 26

## கோட்டை வாசல்வெளி

கோட்டை வாசல் முன் வெளியில் அலங்கார மேடை கட்டியிருக்கிறார்கள். அதிலே அரசனும் அரசியும் கொலுவிருக்கிறார்கள். பரிவாரங்கள் புடைசூழ்ந்திருக்கின்றன. மக்கள், வெள்ளம்போல் திரண்டு மச்சுகளின் மீதெல்லாம் அமர்ந்திருக்கிறார்கள். அதற்கு முன் வெளிவாயிலுக்கு வந்து சேரும் சாலையில் வெகுதொலைவிலிருந்து மின்னல் வேகத்தில் சில குதிரைகள் பாய்ந்து வந்து கொண்டிருக்கின்றன. அவற்றின் வருகையிலே ஆர்வம் உடையவர்களாக மக்கள் ஆரவாரித்திருக்கிறார்கள். வந்த குதிரைகளை வென்று கொண்டு ஒரு வெள்ளைக் குதிரை அகழிக்கு அப்பாலிருந்து பாய்ந்து முன் வெளியில் குதிக்கிறது. அந்த வெளியை தாண்டி வந்து முன்னங்காலை உயர்த்தி மன்னனுக்கும் மக்களுக்கும் வீர வணக்கம் செய்து கனைத்து நிற்கிறது. அந்தக் குதிரையை நடத்திய வீரமங்கையாக மீனாட்சி குதித்து மேடைக்கு வருகிறாள். அரசனும் அரசியும் ஆர்வத்தோடு அணைத்துக்கொண்டு தங்களுக்கிடையே அமர்த்திக் கொள்கிறார்கள். வாழ்க மீனாட்சி வெல்க மீனாட்சி என்ற குரல்கள் வானைத் தொடுகின்றன.

**மக்கள் :** எங்கள் கொற்றவை வாழ்க. வெற்றித் திருமகள் வாழ்க. வீரத்திருமகள் வாழ்க.

[மங்கலப் பெண்கள் ஆரத்திச்சுற்றி திருஷ்டி கழிக்கிறார்கள்]

**அரசன் :** பண்புமிக்க பாண்டியப்பெருமக்களே. உங்கள் அன்புக்கும் ஆர்வத்துக்கும் நன்றி. உங்கள் மகிழ்ச்சிக்கு மேல் மகிழ்ச்சியாக இன்னும் ஒரு செய்தி. என் கோமகள் ஒரு வீரமகளாக வளர்ந்து விட்டாள். நானே இந்த நாடாளும் சுமையால் நாளும் முதிர்ந்து கொண்டிருக்கிறேன். உங்களுக்கும் நன்மையாக எனக்கும் உறுதுணையாக இன்று முதல் மீனாட்சி இந்த நாட்டின் இளவரசியாக பொறுப்பேற்கிறாள். அவள் ஆட்சி தழைக்க ஆண்டவனை வேண்டுகிறேன்.

[அதுபோது ஒருவர் மணிமகுடமும் வீரவாகும் வைக்கப்பட்ட தட்டுடன் முன் வருகிறார். அரசன் மீனாட்சிக்கு அந்த முடியைச் சூட்டுகிறான். வாகை எடுத்துத்தாய் அணிவிக்கிறாள்.]

**மக்கள் :** வாழ்க வாழ்க வாழ்கவே. எங்கள் மீனாட்சி வாழ்கவே. தேனாட்சி புரியவந்த மதுரைமீனாட்சி வாழ்கவே. இளவரசி வாழ்க. கன்னிப்பெண்ணரசி வாழ்க. வாழ்கவே.

[என வாழ்த்துப்பாடல் போர்ப்பாட்டின் நடை மிடுக்குடன் பின்னணி செய்கிறது. படைவீரர்கள் வீரவணக்கம் செலுத்துகிறார்கள்.]

## காட்சி எண்: 27

### அரச மாளிகை

அரச மாளிகையில் ஒருபுரத்தில் அழகு ஒரு போர்க் கவசத்தைத் தூக்கி தன் மார்பில் கட்டிக் கொண்டிருக்கிறாள். அம்பலம் அங்கே வருகிறான். அவளை வர்ணிப்பதாக

அம்பலம் : என்ன எடுப்பு எவ்வளவு பளபளப்பு.

அழகு : அம்பலம் என்ன சொல்றே?

அம்பலம் : நீ கையிலே வெச்சிருக்கிற கவசத்தைச் சொன்னேன் எனக்குன்னு அளவெடுத்து செஞ்சது, இதை அணிஞ்சா வீரம் தானாக பிறக்கும் வீரம் பொறக்கும். ஆனா ஒரு வீரன் பொறப்பானா?

அழகு : ஏய் இது கன்னித் தமிழ்நாடு. இனி இங்கே காதலுக்குப் பேச்சில்லே.

அம்பலம் : அந்த மாதிரி உங்கம்மா நினைச்சிருந்தா நீ பொறந்திருப்பியா. ஒரு பொண்ணுங்கறதையும் நீ மறந்துட்டு இப்படிப் பேசறியே.

அழகு : (கோபமாக) இப்ப நீ என்னதான் சொல்றே?

அம்பலம் : நான் சொல்லலியே கேக்கறேன்.

அழகு : என்ன கேக்கறே?

அம்பலம் : இந்த முரட்டுக் கவசத்துக்கு உன் உடம்பிலே இடம் கொடுக்கறியே உன் மனசிலே கொஞ்சம் இடம் எனக்குக் கொடுக்கக் கூடாதா?

அம்பரு : முதல்லே இந்த வாளுக்கு உன் நெஞ்சிலே இடம் கொடு.

[என வாளை ஓங்குகிறுள் அம்பலம் ஓடுகிறுன்]

## காட்சி எண்: 28

### அரச மாளிகை

அரசன் ஆழ்ந்த சிந்தனையோடு இருக்கிறுன். அரசியின் வருகையை அவன் கவனிக்கவில்லை

**அரசி :** பிரபு என்ன சிந்தனையோடு இருக்கிறீர்கள்?

**அரசன் :** அன்று நிறுத்தி வைத்த அஸ்வமேத யாகத்தை மீண்டும் நடத்தலாமா என்று யோசிக்கிறேன்.

**அரசி :** அதற்கு முன்னுல் நாம் யோசிக்க வேண்டிய ஒரு பொறுப்பிருக்கிறது.

**அரசன் :** எதைப்பற்றிச் சொல்லுகிறுய் தேவி.

**அரசி :** மகளை நாட்டுக்குக் காவலாக்கி விட்டால் போதுமா? அவளுக்குக் காவல்?

**அரசன் :** ஏன் அவள் வீரத்தில் உனக்கு நம்பிக்கையில்லையா?

**அரசி :** அவள் வாழ்க்கையிலே எனக்கு கவலையிருக்கிறது. ஒரு பெண் நாட்டிற்கு அரசி ஆனுலும் ஒரு நாயகனுக்கு மனைவி ஆனுல்தான் அவள் வாழ்க்கை நிறைவு பெறும்.

**அரசன் :** ஆம், உன் தாயுள்ளத்தை நானும் உணருகிறேன்.

அரசி : அவள் அழகுக்கும் ஆற்றலுக்கும் நிகரான ஒரு மணமகன் கிடைக்க வேண்டாமா?

அரசன் : அவளுக்கென்று ஒருவனை ஆண்டவன் படைத்துத் தானிருப்பான். கவலைப்படாதே தேவி நான் ஏற்பாடு செய்கிறேன்.

[என்று தேற்றுகிறான்]

## காட்சி எண்: 29

### அரச மாளிகை

அரசன் இளவரசியின் சித்திரங்களைப் பார்வையிட முதியவர் எடுத்துக்காட்டுகிறார். சில புலவர்கள் உடனிருக்கிறார்கள்,

அரசன் : ஓவியரே உங்கள் திறனை வர்ணிக்க எனக்கு வார்த்தைகளே கிடைக்கவில்லை.

ஓவியர் : இதிலே என் திறமை என்ன இருக்கிறது. அந்த தெய்வ மகளை நான் என் சிந்தையிலே நிறுத்தி யிருந்தேன். இதிலே சித்திரமாகியிருக்கிறாள்.

[புலவர் பெருமக்கள் அந்தப் படங்களைப் பெற்றுக் கொள்கிறார்கள், அவர்களை பார்த்து அரசன் சொல்லுகிறான்.]

அரசன் : புலவர் பெருமக்களே, என் மகளின் அழகுக்கு சாட்சியே இந்தப் படங்கள். அவள் அறிவுக்கும் ஆற்ற

லுக்கும் சாட்சியாக நீங்கள் உடன் செல்கிறீர்கள். பார்க்கின்ற மணமகன் எல்லா வகையிலும் தலைமகனாக இருக்க வேண்டும். அதோடு ஒரு நிபந்தனை. என் மகள் இன்னொரு நாட்டு அரசனுக்கு மனைவியாகப் போக மாட்டாள், வருகின்ற மணமகன் இந்தநாட்டு அரசியின் கணவனாக இங்கேயே இருந்துவிட வேண்டும், இதற்கு சம்மதித்தால்தான் சம்பந்தம்.

[புலவர் ஒருவர் கூறுகிறார்]

**புலவர் :** பிரபு மருமகன் என்பதோடு இந்த மதுரை நகர் ஆளும் திருமகன் என்பதை யாரே மறுப்பார்? எல்லாம் தங்கள் மனம்போல் நடக்கும். நாங்கள் சென்று வருகிறோம்.

[என்று கூறிவிட்டு எல்லோரும் விடை பெறுகிறார்கள்].

## காட்சி எண். 30

## சோழன் மாளிகை

**சோழன் :** மதுரைப் புலவரே, இந்த மகத்தான சம்பந்தத்துக்கு நாங்கள் கொடுத்து வைத்திருக்கவேண்டும்.

**புல :** இதோ எங்கள் இளவரசியின் மலரோவியம். [என்று பட்டுத்துணிபோர்த்திய படத்தைப்பிரிக்கப் போகிறார் ].

[சோழர் கையமர்த்தி]

சோழன் : இருக்கட்டும் அவளை மணக்க வேண்டியவன் பார்க்க வேண்டிய திருஉருவம்.

[எனக் கூறிவிட்டு திரும்புகிருன். அப்போது அங்கு சோழன் மகன் வருகிருன். வந்த மகன் தந்தையைப் பார்த்து]

மகன் : தந்தையே வணக்கம்

சோழன் : மதுரையிலிருந்து பெண்ணின் படத்தோடு புலவர் வந்திருக்கிருர்.

மகன் : ஒப்புதல் கொடுக்க வேண்டியது தங்கள் விருப்பம் தந்தையே.

சோழ : அதை ஒப்புக்கொள்ள வேண்டியவன் நீயல்லவா? முதலில் படத்தைப் பார்.

[புலவர் பிரிக்கிருர். அதைப்பார்த்த சோழ மகன் திடீரென பயங்கரமாக அலறு கிருன்.அவன் கண்ணுக்கு அறையவரும் பேய்போல் ஆங்காரமாக தெரிகிறது].

இளவரசன் : அது பெண்ணின் படமல்ல. பேயின் வடிவம்

[படத்தை எட்ட வீசுகிருன். அரசன் கண்ணுக்கும் பேயாக சிரிப்பதுபோல் தெரிகிறது]

அரசன் . புலவரே நீர் புலவர் என்பதால் என் வாள் உறையோடு இருக்கிறது. நீர் உயிரோடு இருக்கி றீர்கள். மலையத்துவஜனுக்கு என்ன ஆணவம். மணத்துக்கு நாள் குறிக்கவந்தீரா? போருக்கு நாள் குறித்து அனுப்புகிறேன்.

## காட்சி எண். 31

## சேர மாளிகை

[வயது முதிர்ந்த சேரமன்னன் ஆசனத்தில் அமர்ந்திருக்கிருன்]

**மன்ன :** புலவரே அந்த பிரம்மன் என் கையில் அகப்பட்டால் அவன் தலைகளில் ஒன்றை கிள்ளியே தீருவேன். 70 ஆண்டுகளுக்கு முன் என்னைப் படைத்த குற்றத்திற்காக...ஆனுலும் மன்னிக்கிறேன். என்ன சொல்கிறீர்.

**புல :** தாங்கள் சொல்லுங்கள்.

**மன்ன :** உங்கள் இளவரசிக்கு ஏற்ற வயதில் எனக்கொரு பேரன் இருக்கிருன். அவன் வீரத்தில் புலிப்பால் குடித்து வளர்ந்தவன். எங்கே அவனுக்கு நிகரானவளா உங்கள் பெண், காட்டுங்கள் பார்ப்போம்.

[என படத்தை வாங்கிப் பார்க்கிருர். படம் ஒரு பச்சிளங் குழந்தையாகத் தெரிகிறது]

புலவரே என்ன நினைத்தீர்? ஏளனம் செய்ய வந்தீரா... இந்தத் தவழும் குழந்தைக்குத் தாலி கேட்டனுப்பிய உங்கள் தார் வேந்தன் ஆணவத்தை அடக்கியே தீருவேன்.

[என வாளை உறுவுகிருன். புலவர் திகைத்துப் பின் வாங்குகிருர்]

## காட்சி எண். 32

## மற்ருெரு அரண்மனை

[மாளிகையில் இளவரசியை மதுரைப்புலவர் வர்ணிக்கிருர்.]

**புலவர் :** வானவில்லைப் பிழிந்து அதன் நிறங்களை எடுத்து வந்தாலும் எங்கள் இளவரசியின் அழகு முழுவதையும் எழுதிக் காட்ட முடியாது. சிரித்தால் நிலவை ஒக்கும். நடந்தால் தாமரை மலரும். நாவசைத்தால் யாழின் அமுதம் சிந்தும். பெண்மையின் அழகுக்கு இலக்கணம். இதோ பாருங்கள்.

[படத்தைப் பிரித்தபடி தருகிருர். படம், அவன் கண்ணுக்குப் படம் விரித்தாடும் நாகமாகத் தெரிகிறது. அரசருக்குக் கோபம் வருகிறது]

**அரசன் :** என்ன துணிச்சல், பெண் என்று மணமென்று பேசி வந்த உன் நாவை அறுத்தாலென்ன? அந்தத் திருட்டு மலையத்துவஜனை களத்திலே சந்திக்கச் சொல். போ

[என்று அதட்டி அனுப்புகிருன்]

## காட்சி எண். 33

## மற்ருெரு அரண்மனை

**புல:** அரசே எங்கள் இளவரசி ஆற்றல் மிக்கவள் மட்டு மல்ல. அடக்கத்துக்கும் இருப்பிடம். ஆயகலைகள்

64ம் அவளிடம் அடைக்கலம் பெற்றிருக்கின்றனர். [படத்தை அரசன் பார்க்கிருர். கையிலே ஒரு குழந்தை கழுத்தைப்பற்றிக்கொண்டு ஒன்று, காலைச் சுற்றிக் கொண்டு ஒன்று, கர்ப்பவதிபோலவும் இருக்கிறது.]

என்ன துடுக்கு ... கையிலொன்று ... கழுத்திலே ஒன்று திருமணம் ஒரு கேடா. சேசேபோபோ ... இனி என் வாள்தான் பேசும்.

## காட்சி எண் 34

## வேருெரு அரண்மனை

ஒரு அரசன் தன் மனைவியிடம் படத்தைக் காட்டுகிருன்.

அரசன்: பெரிய இடத்துச் சம்பந்தம். தேடி வந்திருக் கிறது, பார் தேவி.

[படத்தைப் பிரித்துப் பார்த்த அரசி கன்னத்திலே போட்டுக்கொண்டு கண்களிலே ஒத்திக்கொண்டு கை கூப்புகிருள். படம் அவள் கண்ணுக்கு பத்ரகாளியாகத் தெரிகிறது.]

புல : தங்களுக்கு மருமகளாக வரவேண்டிய பெண் தாயே!

அரசி : என்ன சொன்னுய். அவள் விழித்தப் பார்வையிலே வீசும் கனலைப் பார். நெரித்த புருவத்திலே அவள் வளைத்தவில்லைப் பார்.

மிதித்த மிதியிலே மகிஷாசுரனைப்பார். ரத்தச் சுவை சொட்டச் சொட்ட தொங்கும் நாவைப் பார். ஒரு கரத்திலே உருவிய வாள். மறுகரத்திலே அவள் அறுத்த தலை, ஒரு கரத்திலே திரிசூலம், அடுத்த கரத்திலே சுக்குமாந்தடி என பதினாறு கரம் உடையாள் பத்ரகாளி படபத்ரகாளி, ரணபத்ரகாளி தாயே, வணக்கம்.

அரச : புலவா, என்ன ஆணவம், உங்கள் பாண்டியன் எதற்காக எங்கள் பகையை வேண்டுகிறான்? பதில் சொல்லித்தான், நீ நகரவேண்டும்.

[காவலர்கள் புலவரை ஈட்டி முனையிலே வளைக்கின்றார்கள். புலவர் புரியாமல் திகைத்து நிற்கிறார்.]

## காட்சி எண். 35

## வேறொரு அரண்மனை

மற்றொரு அரசன் படத்தைப் பார்க்கிறான். மண்டைஓடுகள் அணிந்த துர்க்கையாகத் தெரிகிறது. அவன் கண்களிலே கனல் தெரிக்கிறது. கை வாளை உருவுகிறது. புலவர் நடுநடுங்கிப் பின் வாங்குகிறார்.

## காட்சி எண். 36

### வேறொரு அரண்மனை

*மற்றொரு அரசன் படத்தைப் பார்க்கிறான். யாளிபோல் தெரிகிறது. அரசருக்குக்கோபம் வருகிறது.*

**அரசன் :** என் உறவுக்கு மிருகமா? உங்கள் கோட்டையிலே எங்கள் கொடி பறக்கும். போர், போர், போர்.

*[எனக் கொக்கரித்துச் சிரிக்கிறான். ஒருசில படங்கள் தெய்வப் படங்கள் ஒன்றன் பின் ஒன்றாக தொடர்ந்து கொண்டே வருகின்றன.]*

## காட்சி எண். 37

### மதுரை மாளிகை

*பாண்டியன் மலையத்துவஜன் முன்னர் மணமகன் தேடிச்சென்ற புலவர்கள் தலை கவிழ்ந்து நிற்கிறார்கள். அரசன் உள்ளம் கூனிக்குறுகி நிலை தடுமாறிப்போய் நிற்கிறான். சென்ற, சென்ற இடங்களிலெல்லாம் புலவர்கள் கேட்ட வசைமொழிகள் பேரிரைச்சலாக எதிரொலிக்கின்றன.*

மலையத்துவஜனுக்கு என்ன ஆணவம், பெண்ணுக்கு நான் குறித்து அனுப்புகிறேன். தவழும்

குழந்தைக்குத்தாலி கேட்டனுப்பிய அவன் செறுக்கு அடக்குவேன். கிழட்டு மலையத்துவஜனை களத்திலே.

சந்திக்கச்சொல்...திருமணம் ஒரு கேடா... சேசே...இனி என் வாள்தான்பேசும் புலவா என்ன ஆணவம்...உங்கள் கோட்டையிலே எங்கள் கொடி பறக்கும். போர் போர் போர்...

[எனக்கொக்கரிப்புகளும் எக்காளச்சிரிப்புகளுமாக எதிரொலித்து பாண்டியனை பதைக்கவைக்கின்றன.]

**பாண்டியன் மனத்தின் குரல்:—**

நீ பெண்ணென்று வளர்த்தவளை பேயென்று சொல்லிவிட்டார்கள். கண்ணென்று வளர்த்தவளை கனலென்று ஒதுக்கிவிட்டார்கள். உன் மகளுக்கு இனி மணக்கோலமில்லை. மதுரை பிணக்காலாக போகிறது. போச்சுது, பேச்சுது மானம் போச்சுது. மதுரையின் புகழ் போச்சுது, போச்சுது.

[இந்த வேதனை உணர்வுகளின் தாக்குதல் தாளாமல் அரசன் தலைசுற்றி ஆசனத்திலிருந்து சாய்கிறான்.]

**காட்சி எண், 38**

**சுடுகாடு**

சுடலையில் தீ கொழுந்துவிட்டு எரிகிறது. அந்த ஜ்வாலைக்கு முன்னால் மீனாட்சி உக்ரமாக நிற்கிறாள்.

படைவீரர்கள்அணியணியாக காவலனுக்கு கடைசி வணக்கம் செலுத்தியவர்களாக கண்ணீர் வடிய நின்றுகொண்டிருக்கிறார்கள். மீனாட்சி திடீரென பேய் போலச் சிரிக்கிறாள்.

## காட்சி எண். 39

## கோயில்

காஞ்சனமாலை, கிருதமாலை ஆற்றங்கரையில் கௌரியம்மன் முன்னிலையில் கண்ணீரும் கம்பலையுமாக நின்றபடி

காஞ்ச : என் விரதத்துக்குப்பலன் இதுவா? என் தவத்திற்கு தண்டனையா? என் மஞ்சள் குங்குமத்தை ஏன் பறித்தாய். பிள்ளைவரம் கேட்ட எனக்கு இல்லை என்றிருந்தால் ஏமாற்றம் மட்டுமே இருந்திருக்கும். இப்போது ஏளனத்திற்கு ஆளாக்கிவிட்டாய். இனி என் மகளுக்குமணமில்லையா? அவள் பெண்மைக்கு அவமானமா? தாயே இது கொடுமை, கொடுமை. அசுவமேத யாகத்தை முடிக்காமலேயே அவருக்கு ஒரு முடிவா?

[பின்னால் வந்த மீனாட்சி]

மீனா : இல்லை அம்மா இல்லை.

[போர்க்கோலத்தோடு நின்றபடி]

என் தந்தை அசுவமேத யாகத்தை முடித்திருந்தால் இந்திரலோகத்தை மட்டுமே பிடித்

திருப்பார். நான் ஈரேழுப்திஞன்கு லோகத்தையும் பிடித்து அவர் சிதைக்கு காணிக்கையாக செலுத்து கிறேன். நம்மைப் பார்த்து சிரித்தவர்களே பார்த்து என் வாள் சிரிக்கும். பழித்தவர்களின் ரத்தத் தால் யாகத்தை முடிக்கிறேன்.

[எனஆவேசமாக சிரிக்கிறுள். படைவரிசை போர்நடை போட்டு புறப்படுகிறது.]

வெற்றியெட்டுத் திக்குமெட்டும் கொட்டு முரசே, வீரம் என்று வெல்க என்று கொட்டு முரசே.

காட்சி எண். 39/ஏ

படை வரிசை செல்லுகின்ற வழியிலே எல்லாம் பகையரசர்கள் வந்து அடி பணிகிறுர்கள் பல கோட்டைகள் சடசடவென சரிகின்றன. பல ஊர்கள் பற்றி எரிகின்றன. பல்வேறு கொடிகள் மாறி மீனக்கொடிகள் பறந்தாடுகின்றன. தோற்றமன்னர் களே ரதத்திலே பூட்டி அம்பலம் ஓட்டிச் செல்கிறுன்.

வெற்றி! வெற்றி!!

வெற்றியெட்டு திக்குமெட்டுகொட்டு முரசே

வீரம்வீரம் என்று வெல்கவென்று கொட்டு முரசே.

## காட்சி எண்.39/பி

## ஆசிரமம்

இந்த ஓசைகேட்டு தவத்தில் இருந்த அகத்தியர் சிந்தித்தவராக எழுகிறார்; சிரித்தவராக நடக்கிறார்.

## காட்சி எண். 39-சி

## ஒரு குன்று

அகத்தியர் ஒரு குன்றில் நின்று படை வரிசையின் நெடு நீளத்தை பார்க்கிறார். அடுத்த கணம் மீனாட்சிக்கு முன் புன்முறுவலோடு வந்து நிற்கிறார்.

**மீனாட்சி :** தமிழ் முனியே வணக்கம்! உங்கள் தவம் வளர்க!

**அகத்தியர் :** மகளே! மீனாட்சி, நீடூழி வாழ்க உன் வல்லரசு-நல்லரசாக வாழ்த்துகிறேன்! பிரளயத்திற்கு இன்னும் நாளிருக்கிறது. அதற்குள் இந்த பெரும் போர் எதற்கு!

**மீனா :** பழிக்குப் பழி

**அகத் :** ரத்தத்தால் தீராது! இவர்களது அறியாமைக்கு இவ்வளவு பெரிய தண்டனையைக் கொடுக்கத்தான் வேண்டுமா? உன்னை மணக்கும் தகுதி - மானிடர்க்கு இல்லையென்பதால் - அவர்கள் கண்ணுக்கு நீ பெண்ணாக

தெரியாமல் பேயாகத் தெரிந்தாய்! யாளியாகவும் காளி யாகவும் தெரிந்தாய்! அது அவர்கள் குற்றமா?

மீனு : என் வேதனை தீர வழியென்ன?

அகத் : உன்னை விபரீதமாக படைத்த தெய்வத்தை கேட்க வேண்டிய கேள்வி! உலகம் சிரித்தது என்று கொதித்து விட்டாய்! எரித்தும் விட்டாய்! காரியம் கண்ணுக்கு தெரியும்! காரணத்தை சிந்தித்துப் பார்! உன் படை வடக்கு நோக்கி கயிலைக்கு நடக்கட்டும்! சிரித்தே திரிபுரமெரித்த அவன் செறுக்கை அடக்கு! உன் சீற்றம் சிவன் மேல் செல்லட்டும்!

காட்சி எண். 39-டி

## கயிலை

பனிக் கோயில்களும் - கோபுரங்களும் - கூடங் களும் - மண்டபங்களுமாக கயிலை காட்சி தருகிறது. தேவ கணங்களும் . பூத கணங்களும் - முனிவர் களும் "சிவே கமென" சஞ்சரிக்கிறார்கள்! வெள்ளி யங்கிரியின் முகட்டில் - பனிக் கட்டியால் ஒரு சிவ லிங்கம் இருக்கிறது. முனிவர்கள் "சிவ! சிவ" என்று அதனை வலம் வருகிறார்கள். நந்தி தேவர் தன் கணங்களுடன் அதை காத்து நிற்கிறார். அந்தச் சூழ்நிலையில் மீனாட்சியின் படை கயிலை நோக்கி வருகிறது. படைமிடுக்கும் - உக்கிரமும் - அனல் காற்றாக கயிலையை தாக்குகிறது. தேவர்கள் நடு நடுங்குகிறார்கள்! "சிவ! சிவ" என்ற நாதம் அடங்குகிறது! தேவர்கள் திகைத்து, நந்தி தேவர்

முகத்தை பார்த்துப் நிற்கிறார்கள். ஒரு பூத கணம் ஓடோடி வருகிறது.

**பூதம் :** தென் பாண்டி பெண்ணரசி மதுரை மீனாட்சி படை நடத்தி வருகிறாள். பூலோகம் அவள் காலடியில்! பொன்னுலகம் சரணடைந்து விட்டது! அவள் கனல் வேகத்திற்கு கயிலை இதோ கரைகிறது. பாருங்கள்! பனிக் கட்டியால் ஆகியிருந்த கூட கோபுரங்களும் - கோயில்களும் - கரைந்து வெள்ளமாக வழிந்தோடு கின்றது! தேவர்களெல்லாம் - பாறை இடுக்குகளிலே நிற்க முடியாமல் தடுமாறுகிறார்கள்.

**ஒரு தேவர் :** நந்தி தேவரே! நிலைமை மிஞ்சிக் கொண்டிருக் கிறது! நீர் நின்று கொண்டிருக்கிறீர். சிவனை எழுப்பி விடும்.

**நந்தி :** அவர் யோகத்தைக் கலைத்து என்னை மற்றுமொரு மன்மதனாக எரியச் சொல்கிறீரோ?

**தேவர் :** கயிலை கரைந்து தேவ கணங்களும் பூத கணங் களும் அழிந்து விட்ட பிறகு சிவனுக்கு என்ன வேலை? அவன் சேவைக்கு யார் மிச்சமிருக்கப் போகிறார்கள்.

[அப்போது சிவலிங்கமும் கரைகிறது. அதனுள் சிவன் தவயோகத்தில் இருக்கிறான். மீனாட்சியின் போர்ப் பாட்டின் ஆர்ப் பாட்டம், நெருங்கி வந்து கொண்டிருக் கிறது! வேறு வழியின்றி நந்தி மத்தளத்தை எடுத்து சிவனுக்குப் பின்னால் நின்று வாசிக்க ஆரம்பிக்கிறார். மத்தளத்தின் வேகம் அதிகரிக்க அதிகரிக்க சிவனின் யோகம் கலைகிறது. மெல்ல விழித்துப் பார்க்கிறார். புன்னகையோடு

எழுகிறார். அந்த தாளக் கட்டுக்கு ஆட ஆரம்பிக்கிறார். ஆட்டத்தின் வேகம் அதிகரிக்க, அதிகரிக்க கரைந்த கோயில் களும் கோபுரங்களும் மறுபடியும் முன் போல கூடி வருகின்றன! தேவ கணங் களெல்லாம் ஆட ஆரம்பிக்கின்றனர். மீனாட்சியின் படை வரிசையும் சிவ தாண்டவத்திற்கு ஒத்து தங்களை யறியாமலே - கையிருந்த ஆயுதங் களோடு ஆடுகிறார்கள். மீனாட்சியும் சிவனின் ஆட்டத்திற்கு ஈடு கொடுத்து ஆட ஆரம்பிக்கிறாள். ஆடி ஆடி ஆட்டத்தின் உச்சத்தில் சிவனும் மீனாட்சியும் நெருங்கி விடுகின்றனர்.

ஆடலின் முடிவில் சிவன் மீனாட்சியைப் பார்த்து ஒரு புன்னகையை சிந்துகிறார். அவளுக்கு நாணமாகிறது. அவளுக்கு மூன்றாவது ஸ்தானம் மறைகிறது. வெட்கத்தால் தோழியின் மேலாக்கைப் பறித்து தன் மார்பகத்தை மூடிக் கொள்கிறாள்! அவள் கண்கள் நிலம் நோக்குகின்றன! சிவன் வைத்த விழி வாங்காமல் அவளைப் பார்த்து பரவசத்தோடு நிற்கிறான். மீனாட்சி வெட்கம் தாளாமல் தன் தோழிக்குப் பின் சென்று மறைந்து கொள்கிறாள்.]

**தோழி :** தலை குனிந்து அறியாத எங்கள் தலைவியை நாண வைத்த ஆணவக்காரனே நீ யார்!

**சிவன் :** (சிரித்த படி)
என்னை சித்தனென்பார்கள்! பித்தனென் பார்கள்! சிவன் என்பாரும் உண்டு

தோழி : என்ன தொழில் உமக்கு!

சிவன் : உயிர்களுக்கு ஜீவனாக இருப்பது எனக்குத் தொழில்!

தோழி : போருக்கு வந்தவர்களை - நேருக்கு நேர் எதிர்க்காமல் ஆடி நிற்பதும் ஒரு வீரமா!

சிவன் : போருக்கு வந்தவளா! இல்லை என் சீருக்கு வந்தவள்! அவள் சிவகாமவல்லி

தோழி : என்ன சொன்னாய்? ஒரு மாட்டுக்கு மேல் மறு மாடு இல்லாத உனக்கு மதுரை நகராளும் மாதரசி மேல் காதலா?

சிவன் : அவள் கண்களை கேள் பதில் சொல்லும்! என் ஒற்றை மாட்டுக்கு பின்னால் எத்தனை மாடுகள் வேண்டும். சீராக கொடுப்பான் அவள் அண்ணன்! அழகர் மலைக்கள்ளன்.

மீனாட்சி : போதுமடி வம்பு! புறப்படலாமா! என்கிறாள்

சிவன் : நீங்கள் மதுரைக்குச் சென்று சேரும் முன்னால் நான் மணவூரில் மணமகனாக வந்து நிற்பேன்.

[சிவன் மீனாட்சியை கடைக் கண்ணால் பார்க்கிறார். அவளும் பார்க்கிறாள். படை திரும்புகிறது. முனிவர்கள் "சிவ சிவ" என்று சஞ்சரிக்கிறார்கள்.

## காட்சி எண். 40 | 41

### மணவூர்

மணவூரில் பிள்ளை வீட்டார் தங்கும் விடுதியில் சிவனும் பரிவாரமும் இருக்கிறார்கள். அகத்தியர் அங்கே வருகிறார்.

அகத்தியர் : நமச்சிவாய வாழ்க! நாதன் தாள் வாழ்க!

சிவ: தென்பொதிகை தமிழ் முனியே வருக.

அக . ஒரு வரம் வேண்டி வந்திருக்கிறேன்.

சிவ : தேவை என்பது முற்றும் துறந்த முனிவருக்கும் தேவையாகி விட்டதோ?

அக : விட்டகுறை...தொட்டகுறை யாரை விட்டது. முன்னம் பார்வதி கல்யாணத்தை பார்க்க நான் தான் கொடுத்து வைக்கவில்லை. தமிழோடு கட்டி அனுப்பி விட்டீர்கள். இப்போது வேறெங்கும் விரட்டி விடாமல் கேட்க வந்திருக்கிறேன்.

சிவ : கயிலைக்கே வந்தவளை அங்கே கை பிடிக்காமல் இங்கே வந்திருப்பது உங்கள் ஆசைகளை நிறைவேற்றி வைக்கத்தான்.

அக : மகிழ்ச்சி...மகிழ்ச்சி...நீங்கள் ஆசை என்றதும் மலைய துவஜனின் ஆசையை நினைவுபடுத்தும் நிலைமை எனக்கு நேர்ந்து விட்டது.

சிவ : சொல்லுங்கள்.

அக : வருகின்ற மருமகன் வீட்டோடு மாப்பிள்ளையாக இருக்க வேண்டும் என்று விரும்பினார்.

சிவ : பெண்காணிக்கு பிள்ளையாகவா? அதற்கு விருப்ப மில்லையென்றால்...

அக : மறுபடியும் கயிலை நோக்கி எங்கள் மீனாட்சி படை நடத்துவாள். உங்கள் பனிக்கோட்டை பகுதிகளெல் லாம் உருகி நீராகி ஆறாக ஓடிவிடும். தென்னகத்து அம்பலந்தோரும் நீங்கள் ஆடி நிற்க வேண்டியிருக்கும்.

சிவ : இந்தப் பேச்சில் உங்கள் தவத்தின் செறுக்குத் தெரி கிறது.

அக : இல்லை பிரபு...என் பக்தியின் முதிர்ச்சியால் சொல்லு கிறேன்.

சிவ : அண்டகோளத்தையே பந்தாக ஆடினாலும் தொண் டர் உள்ளத்தில் ஒடுங்கித்தான் போக வேண்டியிருக் கிறது.

(இளநகை புரிகிறார்)

நந்தி : முனிவரே திருமண ஏற்பாடுகள்.

அக : மிக...மிக...விரிவாக நடந்தபடி இருக்கிறது.

[என்று கூறி முடிக்கிறார்]

## காட்சி எண். 42

### மணப்பந்தல்

மதுரை நகரம் மணப்பந்தலாகிறது. சித்திரை வீதி சித்திர வீதியாகக் காட்சி தருகிறது. மங்கல

சீர் வரிசை பொருள்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வீதியளவுக்குக் கொலு வைக்கப்படுகின்றன. மலையளவுக்குச் சோற்றுமுட்டுகள் குவிந்திருக்கின்றன. மடுவளவுக்கு பாயசம் தேங்கியிருக்கிறது. ரசம் குழம்பு வகைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு ஏரியாகவும் தெரிகிறது படை வரிசைபோல் பந்தி வரிசை நடந்தபடி இருக்கிறது. கன்னிப் பெண்கள் தங்கள் பெண்ணின் பெருமையைப் பேசி பேசி கும்மியடிக்கிறார்கள். காளையர்களின் உயிலாட்டம், ஒரு பக்கம், மக்களை வாழ்த்தியும், வைதும் பாடும் நையாண்டி வாதங்கள், ஒரு பக்கம். ஆக மணவிழா மகிழ்ச்சி வெள்ளமாக பெருகி கொண்டிருக்கிறது. அழகர் மீனாட்சிக்கு சீதனமாக ஆயிரம் பசுக்களோடு வந்து கொண்டிருக்கிறார். இந்தச் சூழ்நிலையில் மணமகன் அழைப்பு நடைபெறுகின்றது, மணமகன் வருகின்ற வழியில் இருமருங்கும் மங்கலப் பெண்கள் திருவிளக்கேந்தி நிற்கின்றனர். வாத்தியங்கள் வகை வகையாக வரிசைப்படுத்தப்பட்டு அணி வகுப்பு போல் இருக்கிறது. அலங்கார வளைவுகள் தோறும் மலர்மழை பொழிகிறது. இப்படியாக சோமசுந்தரன் மண மேடைக்கு வருகிறார், அவரோடு பிள்ளை வீட்டாராக தேவர்கள் வருகிறார்கள். நான்முகன் புரோகிதராக மண வேள்விக்கு முன்னர் அமர்ந்து வேதம் சொல்லி வேள்வி வளர்க்கிறார். தோழியர்களாக இலக்குமியும் கலைமகளும் மீனாட்சியை மண மேடைக்கு அழைத்து வருகிறார்கள். அழகன் மீனாட்சியை சுந்தரரிடம் தாரை வார்த்துக் கொடுக்கிறார். காஞ்சன மாலை ஆனந்தக் கண்ணீரோடு....

காஞ்சனை : கௌரி எல்லாம் உன் கருணையே கருணை.

[தெய்வத்தைப் பிரார்த்திக்கிருள், சுந்தரர் மீனுட்சிக்கு மங்கல நாண் பூட்டுகிருர். மணவேள்வி சாட்சியாக மணவிழா சடங்குகள் முறையாக தொடருகின்றன. ஈசனும் மீனுட்சியும் பொன் ஊஞ்சலாட விருந்து ஒரு பக்கம் நடந்தபடி இருக்கிறது. இரவு வாண வேடிக்கை நடத்துகிருர்கள். விதவிதமான வெடிகளும் பலவண்ண மத்தாப்பூக்களும் இரவை பகலாக்குகின்றன.

**மாளிகை**

**காட்சி எண். 43**

மாளிகையின் ஒருபுறம் அகத்தியர் அமர்ந்திருக்கிருர். காஞ்சனை பணிவோடு நிற்கிருள்.

**அகத்தியர் :** காஞ்சனை உன் தவம் பலித்து விட்டதம்மா.

**காஞ்சனை ·** எல்லாம் தங்கள் ஆசீர்வாத பலனே.

**அக :** என்னதான் ஆசைப்பட்டாலும் எவ்வளவுதான் ஆசீர்வாதம் பெற்ருலும் இன்னதற்கு இன்னதென்று இறைவன் விதித்ததுதான் விதி.

**கா :** அந்த விதி நல்லதாகவே அமைந்துவிட்டது..ஆனுல்...

**அக :** இன்னும் என்ன குறை,

காஞ் : பெரியயிடத்து சம்பந்தம். பெரிய அளவில் வருவார் கள் என்று எதிர்பார்த்து வடித்துக் குவித்து விட்டோம் மலைபோல் தேங்கிக் கிடக்கிறது.

அக : (நகைத்து விட்டு) முன்னொரு சமயம் நான் ஏழு கடலையும் வற்ற குடித்திருக்கிறேன்.

காஞ் : ஆம். சுவாமி, தங்கள் பேராற்றலை நானும் கேள்விப் பட்டிருக்கிறேன். இது சமயம் நீங்கள்தான் பெரியமனது வைத்து இந்த விருந்து பொருட்களை வீணாக்காமல் அருள் புரிய வேண்டும்.

அக : அதற்கு அப்பொழுது என் நெஞ்சத்தில் கோபாக்கினி மூண்டிருந்தது. அந்த வேகத்தில் அப்படி செய்து விட்டேன். இப்போது அமைதியும் மகிழ்ச்சியும்அல்லவா ததும்பிக்கொண்டிருக்கிறது.

காஞ் . என்னவோ நீங்கள்தான் தக்க யோசனை சொல்ல வேண்டும்.

]அகத்தியரின் பேச்சு சிவபெருமானின் காதில் விழுகிறது.]

அக : யோசனை என்ன? விருந்து முழுவதும் தின்று தீர்க்க வேண்டியது மாப்பிள்ளை வீட்டாரின் பொறுப்பு.

[என்று குறும்பாகச் சிரிக்கிறார்]

## காட்சி எண் 44

## மாளிகையின் மற்ெருரு புறம்

மீனுட்சியும் சுந்தரரும் மற்ெருரு புரத்தில் உப்பரிகையில் நின்றபடி ஊர்வலம் பார்க்கின்றனர். உணவுப் பொருள்கள் மீந்து கிடப்பது அவர்களின் கண்களுக்குத் தெரிகிறது. சுந்தரர் சிரிக்கிருர்.

மீனு : ஏன் சுவாமி... அளவு தெரியாமல் சமைத்துக் கிடக்கிறது என்று சிரிக்கிறீர்களா?

சுந் : இல்லை மீந்துவிட்ட உணவெல்லாம் தின்று தீர்க்க வேண்டியது பிள்ளை வீட்டாரின் பொறுப்பு என்கிருர் அகத்தியர்.

மீனு : வீணுகக்கூடாது என்றுதான் நானும் விரும்புகிறேன்.

சுந் : குண்டோதரா...

(குண்டோதரன் தோன்றி நிற்கிருன்.)

குண்டோதரன் : பிரபு...

சுந் : பெண்வீட்டார் விருந்து எப்படி என்று ருசி பார்த்துச் சொல்.

குண் : பிரபு நீங்கள் கூப்பிட்டதுமே எனக்குப்பசி ஆரம்பமாகி விட்டது.

(வணங்குகிருன். ஆசிர்வதிக்கிருர். அவன் அடிவயிற்றில் ஒரு தீக்கொழுந்து எரிய ஆரம்பிக்கிறது)

## காட்சி எண் 45

### உணவுச் சாலை

குண்டோதரன் பலகாரக் குவியல்களின் வரிசைகளுக்கு இடையே நடந்து செல்கிறான். தட்டு தட்டாக இருந்த லட்டுகளும் அதிரசங்களும் முறுக்குகளும், ஜாங்கிரிகளும், விளையாட்டுச் சக்கரங்கள் உருண்டு ஓடுவதுபோல்குண்டோதரனை தொடர்ந்து ஓடுகின்றன. தட்டுக்கள் காலியாகிக் குவியல்கள் தீருகின்றன. பலகாரங்களின் பெயரும் சுவையும் சங்கச் சொற்களாக இடையிடையே ஏப்பத்தோடு விருத்தமாகிறது. நூற்றுக்கணக்கான ஆட்கள் கறி, ரசம், குழம்பு முதலியவற்றைச் சோற்றோடு போராகக் கொட்டி சேறு கலக்குவது போல் மிதித்து கலக்குகிறார்கள். குண்டோதரன் ஒரு பெரிய பானையின் மீது உட்காருகிறான். காளவாயிலில் செங்கற்களை அடுக்கடுக்காக அடைப்பது போல உருண்டை உருண்டையாகத் திரட்டி குண்டோதரனிடம் அனுப்புகிறார்கள். சோற்றைத் தின்று தீர்க்கிறான் குண்டோதரன் பாயசம் வாளிவாளியாகக் கொண்டுவரப்படுகிறது மற்றொரு புரத்தில் வெற்றுவாளிகள் குவிகின்றன. இவற்றிற்கு மேல் குண்டோதரன் தாகம் தாகமென கர்ஜிக்கிறான். வீரர்கள் நீண்ட மூங்கில்களைக் கொண்டுவந்து நீட்டுகிறார்கள், மூங்கிலின் ஒருமுனை குண்டோதரன் வாயில் இருக்கிறது. அடிப்பாகம் கிணறுகளிலும், குளங்களிலும், ஏரிகளிலுமாக அங்கெல்லாம் தண்ணீர் வற்றவற்ற மீன்கள் துள்ளி குதிக்கின்றன. தண்ணீர் பற்றாமல் குண்டோதரன் தாகம் தாகமெனத் தரையில் உருளுகிறான்.

## காட்சி எண் 46

## மீனாட்சியின் மாளிகை

*மீனாட்சி— சுந்தரர்*

சுந் : என்ன தேவி... குண்டோதரனின் தாகத்தைத் தீர்க்க முடியாத பஞ்சமா? உன் நாட்டில்.

மீனா : பிரபு, அதோபாருங்கள். கோடிக்கணக்கான உயிர்கள் துடிக்கின்றன. உங்கள் கருணைக்குப் பஞ்சமென்று அவைகள் நினைப்பதற்கு முன் அருள் புரியுங்கள்.

[ஏரி குளங்களில் நீர்வற்றி மீன்கள் துள்ளி குதிப்பதைக் காட்ட, தாமரைகள் தலை சாய்ந்து கிடப்பதெல்லாம் தெரிகிறது.]

சுந் : கங்கா...

[கங்கை ஒரு இளம் மங்கையாகத் தோன்று கிறாள்]

கங்கை : வணக்கம் பிரபு

(மீனாட்சியின் பக்கம் திரும்பி அவளைப் பார்த்து பரவசத்தோடு கங்கா அங்கு வருகிறாள்)

சுந் : என்ன கங்கா அவளை விழிகளால் அள்ளி விழுங்கு கிறாயா?

கங்கா : இல்லை ஸ்வாமி, பார்வதியாக, பகவதியாக, பவானியாக, சங்கரியாக, சண்டியாக, சாமுண்டியாக பார்த்துத்தான் இருக்கிறேன். ஆனால் இத்தனை பெரிய கருணையை மீனாட்சியாகப் பார்க்கிறேன்.

மீனா : இப்போது உன் கருணை தேவை. வைகையாகப் பெருகி வரம் துவக்க வேண்டுகிறேன்.

கங்கை : உன் அருள் கிடைக்க நான் வரம் புரிந்தேன்.

(சிவன் ஆசீர்வதிக்கிறார். கங்கை அங்கு இருந்து மறைகிறாள்)

## காட்சி எண் 47

## மலைச் சிகரம்

கங்கை ஒருசிகரத்தின் உச்சியில் தோன்றுகிறாள் அருவியாகப் பொங்கி வருகிறாள். நதியாக திரண்டு வருகிறாள். ஏரி, குளங்கள் நிரம்பி வருகின்றன. குண்டோதரன் தாகம் தீர்ந்தவனாக ஏப்பம் விடுகிறான்.

## காட்சி எண் 48

## மீனாட்சியின் மாளிகை

அந்தப்புர மாளிகையின் கதவருகே பட்டுத் திரைக்குப் பின்னால் காஞ்சனை கையில் பால் செம்புடன் நிற்கிறாள்.

காஞ்னே : மீனாட்சி, அம்மா மீனாட்சி

மீனு : அம்மா

(என்று வருகிருள்)

காஞ் : (பால்செம்பை மீனாட்சியிடம் கொடுத்தபடி) நீ எல்லாம் தெரிந்தவள். உன் கணவர் எல்லாம் வல்லவர் இருந்தாலும் ஒரு மணமான பெண்ணுக்குத் தாய் சொல்ல வேண்டியதைச் சொல்லுகிறேன்.

மீனு : தாராளமாகக் கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டு இருக்கிறேன்.

காஞ் : மகளே! அறங்கள் 32 என்று ஆன்ருேர் வகுத்திருக்கிருர்கள். அதை வாழ்க்கையிலே நடத்திக் காட்ட வேண்டியது உன் பொறுப்பம்மா.

[என்று கூறி நடக்கிருள். பின்னணி இசை கூட்டுகிறது. 32 அறங்களும் அறம் எனப் பட்டதே இல் வாழ்க்கை என்பது முதலாக உலகம் உய்ய ஒரு மகளைத் தந்து அன்னைஎன்ற புகழுக்கு ஆளாக வேண்டும் என்பது ஈராக பாட்டு வளர்கிறது. அந்தப் பாட்டின் கருத்துக்களுக்கேற்ப நிகழ்ச்சிகளின் கோர்வை காட்சியாகிறது.]

## காட்சி எண். 49

மீனாட்சியின் அந்தப்புரம் நோக்கி காஞ்சனை அவசரமாகப் போய்க் கொண்டிருக்கிருள். எதிரே அம்பலம் வருகிருன்.

அம்ப : தாயே, அப்படி என்ன அவசரம்? கூப்பிட்ட குரலுக்கு ஆயிரம் ஏவலர்கள் இருக்கும்போது நீங்கள் ஏன் இப்படித் தடுமாறி பறபறக்க நடக்கிறீர்கள்.

காஞ் : என் மகள் மீனாட்சியிடம் விடைபெறப் போகிறேன்.

அம்ப : எந்த கேள்விக்கம்மா.

காஞ் : அடமடையா, • கேள்விக்கல்ல. இன்றோடு நான் நூறாண்டு வாழ்ந்து விட்டேன். அதனால் கங்கையும் துங்கையும் காவிரியும் ஆடிவிட்டு அவரோடு போய்ச் சேரப் போகிறேன்.

[என்று வானத்தைச் சுட்டிக்காட்டுகிறாள்]

அம்ப : இந்த மண்ணாசையை விட்டு அந்த மன்னராசை வந்து விட்டதா?

காஞ் : அடே நீயும் புறப்படு

அம்ப : [சிரித்து] தாயே, நான் ஐம்பதைத் தாண்டவில்லை என் ஆசைக்கு இன்னும் முப்பதே முடியவில்லை

[என்று சிணுங்குகிறான்]

காஞ் : புனிதநீராட்டுக்கு வாடா. நல்ல புதல்வன் பிறப்பான்.

அம்ப : கங்கையே இங்கு வைகையாக வந்து விட்டாள். அன்னை கௌரியே அரசி மீனாட்சியாக ஆளுகிறாள் என்று உலகம் சொல்கிறது. தேவரெல்லாம் மதுரைக்குத் தேடி வருகிறார்கள் நீங்க என்னடான்னா....?

## காட்சி எண். 50

### மீனாட்சி மாளிகை - மற்றொரு புரம்

சுந்த : உன் அன்னையின் விருப்பம் உணர்ந்தேன் புண்ணிய நதிகள் எதுவானாலும் கடலுக்குத்தான் போய் கலக்கின்றன. ஆதலால் அந்த ஏழுகடலையும் இங்கே அழைக்கிறேன்.

[என்று கையை அசைக்கிறார்]

## காட்சி எண். 51

### கடல் அலை

கடல் அலைமேல் ஏழுகடல்கன்னிகள் இடையில் பொற்குடம் ஏந்தியவர்களாக எழுந்து வருகிறார்கள்.

## காட்சி எண் 52

### மதுரை மாளிகை

மதுரை அரசமாளிகைக்கு ஈர ஆடையோடு அவர்கள் வந்து கொண்டிருக்கிறார்கள்.

ஒருத்தி : அறம் வளர்த்த நாயகியே உன் அன்னையை புனித நீராட்ட வந்திருக்கிறோம். நான் கங்கை, யமுனை, சிந்து,

கோதை, காவிரி, கிருஷ்ணு என்று மீனுட்சியிடம் தாங்களே பெயர் சொல்லி அறிவித்து கொள்கிறுர்கள். இதற்கிடையில் மகளிர் புடைசூழ நின்ற ஒரு இருக்கையில் காஞ்சனமாலையை கொண்டுவந்து அமர்த்துகிறுர்கள், வாத்தியங்கள் ஒலிக்க ஆரம்பிக்கின்றன.

கங்கை : தாயே! புனித முழுக்குக்கு ஒரு மரபு உண்டு. கணவனையோ மைந்தனையோ கைப்பற்றித்தான் நீராட வேண்டும்.

காஞ் : அம்மா கௌரி, இது என்ன சோதனை. அவர் இறந்த அன்றே நானும் இறந்திருக்க வேண்டும். அல்லாமல் இத்தனை காலம் இந்த உயிரைச் சுமந்து கொண்டு இருந்ததற்காக இந்த நிபந்தனையா?

[என வருந்துகிறுள். அப்போது சுந்தரர் வந்து கொண்டே]

சுந் : நிபந்தனை எதுவாஞலும் நிறைவேற்றப்படும். இதோ மலையத்துவஜன் மண்ணுக்கு வருகிறுர்.

என கங்கைக்கு சொல்லியபடி அங்கே வருகிறுர். மலையத்துவஜ பாண்டியன் விண்ணிலிருந்து இறங்கி வருகிறுர். அங்கே கூடியிருப்பவர்களைப் பார்த்து பூரித்து போகிறுர். மலையத்துவஜன் சொல்கிறுர் மகளே மீனுட்சி, சோமசுந்தர பிரபு, மதுரை மக்களே, காஞ்சனு, சொக்கனிருக்கும் இடம் தான் நமக்கு சொர்க்கம். (மீனுட்சி தந்தையைபற்றி தாயருகே அமர்த்துகிறுள். இருவரும் கைபற்றியிருக்க நீராடுகின்றனர். நீராட்டிய கடல்

கன்னிகள் கைகூப்பியவாறு ஒதுங்கு கிறார்கள்.)

**மலையத்துவஜன்:** புனித முழுக்காடிவிட்டோம், புனிதமுழுக் காடிவிட்டோம். இதுவரை சோமசுந்தரரின் கருணை வெள்ளத்திலே மூழ்கியே இருக்கிறோம் மகளே. ஆனால், இந்த மானிட மனத்துக்கு ஒரு பேராவல். மீனாட்சி சுந்தரரை நான் மணக் கோலத்திலே காணவேண்டும் மணக்கோலத்திலே காணவேண்டும்.

(என மனங்கனிந்து வேண்டுகிறான்) மீனாட்சியின் திருமணக் காட்சி அழகர் தாரைவார்த்துக் கொடுத்த கட்டம், அப்படியே தோற்றமளிக் கிறது. அந்த திருமணக் காட்சியை மெய்மறந்த மலையத்துவஜன் வாழ்க மீனாட்சி! வாழ்க சுந்தரர்! வாழ்க நிரந்தரம்... வாழிய வாழியவே!

(என சொல்ல எல்லோரும் துதிக்கி றார்கள். அந்த திருமணக்கோலம் அப்படியே நிலையாக...சிலையாகிறது...

நலம்